அழிவின் அழைப்பிதழ்

இ. தியாகலிங்கம்

மித்ர வெளியீடு

375-10, ஆற்காடு சாலை,
சென்னை-600 024. இந்தியா

முதற் பதிப்பு : செப்ரெம்பர் 1994
மித்ர : 4
உரிமைப் பதிவு
விலை ல

AZHIVIN AZHAIPPITHAZH

A Nove
by
R. THIYAGALINGAM

First Edition :
15th September, 1994

Printers :
Kokila Sree Printers
Madras-600 094

Price :

Page i
16+160=176

Cover Design :
T. SOUNTHER, Denmark

Published by :
Dr. PON. ANURA

MITHRA PUBLICATIONS
375-10, Arcot Road
Madras-600 024 INDIA

அமைப்பு : இளம்பிறை எம். ஏ. ரஹ்மான்

சமர்ப்பணம்

என்

கண் கண்ட தெய்வங்களாகிய

அன்புத் தந்தை

வே. இரத்தினம் அவர்களுக்கும்

அருமைத் தாய்

இ. பரமேஸ்வரி அவர்களுக்கும்

இது—

என் நாவல்—

காணிக்கை

இ. தியாகலிங்கம்.

பதிப்புரை

இந்த ஆண்டிலே நமது பிரசுரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க ஏற்பாடு செய்துள்ளதுடன், நமது இலக்கிய அக்கறைகளின் பரப்புகளையும் விசாலிக்கச் செய்துள்ளோம் என்பதை அறியத் தருவதிலே மிகவும் மகிழ்கின்றோம்.

இது நமது நான்காவது வெளியீடு. இதுவே நாம் வெளியிடும் முதலாவது நாவல். நோர்வேயில் வாழும் நண்பர் இ. தியாகலிங்கம் எழுதியுள்ள முதலாவது நாவலும் இதுவே. புதிய எழுத்தாளர்களுடைய படைப்புகளைத் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துதல் வேண்டும் என்கிற எங்களுடைய பிரசுரக் கொள்கையின் பூபாளமாக இது அமைகின்றது.

புலம் பெயர்ந்து வாழும் இளம் எழுத்தாளர்கள் புதிய வாழ்க்கைச் சூழல்களினாலும், புதிய அனுபவங்களினாலும், புதிய தேவைகளினாலும் புதிய சுருதி சேர்க்கும் கதைகளையே சொல்ல முன்வருவார்கள். 'அழிவின் அழைப்பிதழ்' புதிய கதையைச் சொல்கிறது. பல்வேறு காரணங்கள் தொற்றி, ஆயிரக்கணக்கான இளைஞர்கள் பாரம்பரியமான 'வெள்ளைக்கார' நாடுகளிலே புலம் பெயர்ந்து வாழ்கின்றார்கள். புதிய சூழ்நிலையிலே அவர்களுடைய தனிமை மகா ஆக்கினை நிறைந்தது. அதற்கு ஒரு வடிகால் தேடத் துணியும்பொழுது, அஃது எத்தகைய கோரப் பரிமாணங்களை எடுக்கும் என்பதுதான் இந்த நாவலின் தேடலாகும்.

புலம் பெயர்ந்துள்ள தமிழர்கள் தமது இனத்துவத் தனித்துவங்களை அடையாளம் காட்டுவதற்கு இலக்கியம் தோதான சாதனம் என்று நாம் கருதுகின்றோம். இதனாலும், அத்தகைய முனைப்புகளைப் பிரதிபலிக்கும் இலக்கியங்களைத் தமிழ் நாட்டு வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தி, அவர்களுடைய ஆதரவையும் அங்கீகாரத்தினையும் பெறுதல் ஆரோக்கியமான இலக்கியப் பணி என்றும் நாம் கருதுகின்றோம்.

இந்த நாவலுக்கு 'தினமணி'யின் பிரதம ஆசிரியர் **மாலன்** அவர்கள் முன்னுரை வழங்கியுள்ளார். புலம் பெயர்ந்த நாடுகளிலே முகிழ்ந்து வரும் புதிய தமிழ்ப் படைப்பு முனைப்புகளை அங்கீகரிக்க முந்தி நிற்கும் அவருடைய தோழமை நமக்குக் கிடைத்துள்ளமை மகிழ்ச்சியைத் தருகின்றது. அவருடைய ஆசிக்கு நமது நன்றிகள்.

நமது பிரசுரங்களை ஆதரிக்கும் வாசகப் பெருமக்கள், இந்த ஆண்டிலும் நமது பிரசுரங்களுக்குஆதரவும் தந்து உலகளாவிய தமிழ் இலக்கியப் பணிக்கு ஆதரவு நல்குமாறு தயவாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

டாக்டர் **பொன். அநுர**

mithra publications

1/23, Munro Street
Eastwood 2122
AUSTRALIA

✆ (02) 868-2567

என்னுரை

நான் அடிமையா? நாம் அடிமைகளா?
இந்தக் கேள்விகள் என் மனப்போராட்டங்களின் அடி நாதமாக அமைந்தது.

விடை : ஆம். பலவாய அடிமைத்தளைகளுள் மாட்டுண்டு தவிக்கிறோம். சில தளைகள் நம் மீது திணிக்கப்பட்டுள்ளன. வேறு சில தளைகள் சமுதாயத்துடன் இசைந்தொழுகி வாழ்வதற்காக நாம் ஏற்றுக் கொண்டவை. எவ்வாறாயினும் தளைகள் தளைகளே. இந்தத் தளைகள் களையப்பட்டு மானிடம் சுதந்திரத்தினைச் சுகித்தல் வேண்டும். இதனை அர்த்தமுள்ள விசாரணையாக்கவும் நான் தேர்ந்தெடுத்துள்ள பாதை தான் என் எழுத்துப் பணி.

கலை பற்றியும், இலக்கியம் பற்றியும் தெளிவான கருத்துப் படிமங்கள் என் நெஞ்சிலே குடியேறாத ஒரு பருவத்திலே, இத் துறைகளிலே ஈடுபட ஏலுமா என்று தயங்கிய பொழுது என் ஔவைப் பிராட்டியாக ஞான வழிகாட்டிய திருமதி இலட்சுமி அவர்களை இச் சந்தர்ப்பத்தில் நினைவுகூருதல் மகிழ்ச்சியாகவும் இருக்கின்றது.

கவிதைகளிலே ஈடுபாடுடையவனாய் எழுத்துலகப் பிரவேசம் செய்த என்னுடைய முதலாவது நாவல்இது. முதல் வாய்க்கும் எதுவுமே சுகமானது. அப்படித்தான் என் 'அழிவின் அழைப்பிதழ்.' புலம் பெயர்ந்து வாழ்வதிலுள்ள பலவகைத்தான அனுபவங்களை நேரிலே பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. இந்தத் தனிமை ஏற்படுத்தக் கூடிய சலனங்களே இதன் கதை.

இந்த நாவலை இந்த வடிவத்திலும் அமைப்பிலும் வெளிவரவும் பேருபகாரியாய் உழைத்தவர் எஸ். பொ. அவர்கள். அவரை நான்நேரில் பார்த்ததில்லை. மூன்று தலைமுறைகளாக எழுதிவரும் அவர் புதிய எழுத்தாளனாகிய என்னுடைய படைப்பு ஆர்வத்திற்கு இத்துணை மதிப்பு அளித்தமை என் பேறே. அவருடைய முயற்சியின் காரணமாகத்தான் இது மித்ர வெளியீடாக வெளி வருகின்றது. என்னை அறியாத போதிலும், என் சார்பாக எஸ். பொ. அவர்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்று இதற்கு நல்லதொரு முன்னுரை வழங்கியுள்ள தினமணி ஆசிரியர் மாலன் அவர்களுக்கும், இதன் அட்டையை வடிவமைத்து உதவிய டென்மார்க் ரி. சௌந்தர் அவர்களுக்கும் என் நன்றிகள் உரித்தாகுக.

என்னை எஸ்.பொ.வுக்கு அறிமுகமும் தொடர்பும் ஏற்படுத்தி வைத்து, பல வகைகளிலும் உதவி புரிந்த அவுஸ்ரேலியவாசி எஸ்.கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கும், பிற வழிகளிலே துணையாய் நின்ற கே.குகனேறியப்பன் அவர்களுக்கும் எனது நன்றிகள். இந்த நூலின் வடிவமைப்பிற்கு உழைத்த இளம்பிறை எம். ஏ. ரஹ்மான் அவர்களுக்கும் என் நன்றி.

இறுதியாக நான் உங்களையும் மறக்கவில்லை. என் இலக்கியப் பணியைத் தொடர வாசகர்களாகிய நீங்கள் தொடர்ந்து தரும் ஆதரவும் ஊக்கமும் இன்றியமையாதது. உங்களுக்கும் நன்றி.

அன்புடன்
இ. தியாகலிங்கம்

vadsø-gt-7,
9950 vardø ,
NORWAY.

முன்னுரை

புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களுக்கு ஒரு புதிய பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டிலோ, இலங்கையிலோ வாழ்ந்து வருகிற தமிழர்களால் ஆற்ற முடியாத கடமை அது.

கடந்த சில ஆண்டுகளாகத் தேக்க முற்று நிற்கும் தமிழ் புனைகதை இலக்கியத்தைத் தேக்கத்தில் இருந்து மீட்டு, புதிய தளங்களுக்கு இட்டுச் செல்லும் கடமை அது.

தமிழனின் பாரம்பரிய மரபுகளிலிருந்து நவீனத் தமிழ் புனைகதையைக் கிளைத்தெழச் செய்யும் முயற்சிகளில் முனைந்தான் பாரதி.

ஆனால், அவனுக்குப் பின் வந்த விமர்சகர்கள், -தமிழ் நாட்டிலும் சரி, இலங்கையிலும் சரி - காலனி ஆதிக்க எஜமானர்களான ஐரோப்பியர்களின் இலக்கிய வடிவத்திற்கு, நவீனம் என்று ஞானஸ்நானம் செய்வித்தார்கள்.

இதே காலனி ஆதிக்க எஜமானர்களிடம் கல்வி கற்று, அதே எஜமானர்களால் அவர்கள் நலனுக்கு உருவாக்கப்பட்ட குமாஸ்தா வேலைகளை ஆரத் தழுவி தனுப்புத் துரைகளாகிவிட்ட புதிய மத்தியதர வர்க்கம், இந்த நவீனத்தைத் தன்னுடைய அடையாளமாக்கிக் கொண்டது.

கோவணங் கட்டிய முன்னோர்களிடம் இருந்து உருவான நாம் முழுக்கால் சராயும், சட்டையும் அணிந்த மாதிரியான மாற்றம் இது.

எஜமானர்கள் மூட்டை கட்டிக் கொண்டு கப்பலேறுகிற நேரத்தில், போரிடுகிற உலகம் வேருடன் விழுந்து புதியதோர் உலகம் பூத்தபோது, அமெரிக்காவும் ரஷ்யாவும் அதன் எஜமானர்கள் ஆயினர். இப்போது விமர்சகர்கள் அவற்றின் இலக்கிய வடிவங்களுக்குச் சூடம் காண்பிக்க ஆரம்பித்தார்கள்.

கால் சராய் ஜீன்சாக மாறிற்று. கிராப் போய் பங்க் வந்தது. மார்டனிசம் போய் போஸ்ட் மார்டனிசம் வந்தது. ஆடைகள் மாறின; அணிகலன்கள் மாறின; ஆனால், ஆழ்மனம் மாறவில்லை.

இரண்டாயிரமாண்டு பழைமை படிந்துவிட்ட மனத்தை மாற்றிக்கொள்ளாமல், பங்க் வைத்துக் கொள்ளும் தமிழனைப் பார்க்க பலருக்குக் கோமாளித்தனமாக இருக்கிறது. சிலருக்கு நவீனமாக இருக்கிறது. எனக்கோ பரிதாபமாக இருக்கிறது.

இந்த இரண்டுங்கெட்டான் தளத்திலிருந்து தமிழ் இலக்கியத்தை மீட்டு வரவேண்டும்.

பாரதி துவக்கி வைத்த பழமையிலிருந்து நவீனத்தைக் கிளைக்க வைக்கும் முயற்சிகள் தமிழ்மண்ணிலிருந்து மேற்கொள்ளப்படும்

அதே நேரம்—

ஐரோப்பிய வடிவங்களில், ஐரோப்பிய சிந்தனைகளையும் தமிழில் பரிமாறுகிற பாணியை புலம் பெயர்ந்த தமிழர்கள் செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

புலம் பெயர்தல்; தட்பவெப்பம், புவியியல், மொழி, அரசியல், கலாசாரம் ஆகிய எல்லாவற்றிலும் முற்றிலுமாக மாறிப்போன ஓரிடத்தில், வாழ்க்கையை மறுபடியும் ஆரம்பத்தில் இருந்து துவங்கல்; போர் ஏற்படுத்திய ஆறாக் காயங்கள்; புத்திர சோகம்; பணம், படிப்பு, உறவு; எல்லாமே போர்ச் சூழலில், புலம் பெயர்தலில் அர்த்தமற்றுப் போதல்; அல்லது புதிய

அர்த்தங்களைப் பெறல்; புதிய உறவுகள், அவற்றினூடான முரண்பாடுகள் இவையெல்லாம் இரண்டு உலகப் போர்களைக் கண்ட ஐரோப்பாவின் சிந்தனைகளைப் பெரிதும் மாற்றியமைத்தது.

இவை அனைத்தும் இன்று இலங்கைத் தமிழருக்கும் ஏற்பட்டு வருகின்றன. பேட்டை சண்டியர்களின் காலித்தனங்களையே பெரும் போராக வர்ணித்துவந்த தமிழ் எழுத்துலகம், புறநானூற்றுப் போர்களைப் பற்றிப் பேசிப் பெருமிதம் கொண்ட தமிழ் சமூகம், வயிராறச் சாப்பிட்டுவிட்டு, வெற்றிலை போட்டுக் கொண்டு, வேப்பமரத்து காற்று சுகமாக வீச, முற்றத்துச் சூழலில் ஈசிச்சேர் போட்டு உட்கார்ந்து கொண்டு அளந்தெடுத்த அறுசீர் விருத்தத்தில் வியட்நாம் போருக்கு வீர கவிதை செய்து பூரித்த தமிழ்க் கவிக் குலம், இன்று நிஜமாகவே போரைச் சந்திக்கும் சூழலுக்குள் தள்ளப்பட்டிருக்கிறது.

இந்த நூற்றாண்டின் ஆரம்ப நாட்களில் துவங்கி, மத்திவரை ஐரோப்பியர்களுக்கு ஏற்பட்ட அனுபவங்கள் இன்று தமிழனுக்கு ஏற்பட்டு வருகின்றன. காதல், கல்யாணம், குழந்தை, குடும்பம் என்று குண்டுசட்டிக்குள் குதிரை பழக்கிக் கொண்டிருக்கும் தமிழனுக்கு, குடும்பம் என்பதைவிடப் பெரிய சக்தி ஒன்றுண்டு, அதன் பேர் அரசியல் என்று தோளில் தட்டிச் சொல்லுகிறது காலம். அதைப் புரிந்து கொள்வதும், எதிர்கால சந்ததியின் பொருட்டு பதிவு செய்வதும் அவனது கடமை.

இந்த நாவலும் ஐரோப்பிய அனுபவங்களைக் கொண்டதுதான். ஐரோப்பிய அனுபவங்களைத் தமிழ் சிந்தனை மரபில் இருந்து விடுபடமுடியாத இளைஞன் ஒருவன் எதிர் கொள்ளும்போது ஏற்படும் சிக்கல்களைச் சித்திரிக்கும் நாவல்.

தமிழ்ச் சமூகத்தில் திருமணம் ஆகும்வரை, அல்லது குறைந்தபட்சம் 'கன்னி கழியும் வரை' ஆணுக்குப் பெண்ணின் உடல் ஒரு சுவாரஸ்யமான புதிர். பெண்ணுக்கும் ஆண் அப்படித்தான் இருக்கவேண்டும்.

இந்தப் புதிர் கலவி அனுபவத்தை ஒரு சாதனையாக எண்ணத் தூண்டுகிறது. அதை அடைய பெரும் கனவுகள், முயற்சிகள், அடைந்தபின் ஒரு பெருமிதம். அதைத் தக்கவைத்துக் கொள்ள தவிப்பு. இந்தப் பிரமையை பத்திரிகைகளும், சினிமாக்களும், கதைகளும் ஊட்டி வளர்க்கின்றன.

கையைத் தொட்டவுடன் அல்லது கண்கள் நேருக்கு நேர் சந்தித்தவுடன் மின்சாரம் பாய்ந்ததாக ரீல் விடுகிற கதைகளை இன்னமும் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். மீசை அரும்பாத இளைஞர்களும், முலை வளராத சிறுமிகளும் அவற்றைப் படித்து அந்தரங்கத்தில் கோட்டை கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது, கட்டித் தழுவிக் கொள்ளும், முத்தங்கள் பரிமாறிக் கொள்ளும் சமூகத்திற்கு இந்த இளைஞர்கள் அனுப்பப்பட்டால் என்னவாகும்? ஷாட்சும், டீஷர்ட்டும் அணிந்து தோன்றும் பெண், தமிழ் சினிமாவில் காம வெறி பிடித்த கன்னி. அந்த சமூகத்தில், சம்மர் செமிஸ்டரில், பல்கலைக்கழக மாணவர்களிடையே அது வழக்கமான உடை, இங்கே டூ-பீஸ் நீச்சலுடையில் ஒரு பெண் கடற்கரையில் நின்றால் கூட அவள் கவர்ச்சிக் கன்னி. (அண்மையில் சென்னை மெரீனாவில் பீச் வாலிபால் நடைபெற்றபோது, நீச்சல் உடையில் பெண்கள் பந்தாடிய காட்சியைத் தமிழ்ப் பத்திரிகைகள் விழுந்தடித்துக் கொண்டு பல்வேறு கோணங்களில் படமெடுத்து செய்தி வெளியிட்டதற்கு உத்தமமான நோக்கங்கள் உண்டு என யாரே நம்புவர்?) அங்கேயோ அது வார இறுதி நாட்களில் வழமை.

இடம் மாறும்போது ஏற்படுகிற அவஸ்தைகளுக்கு வயதும் வளர்ப்பும் தூபம் போடுகின்றன. காசுக்கு உறவு கிடைக்கிறது-நோயும்.

எய்ட்சை இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய அபாயம் என்கிறார்கள். மிகப் பெரிய பிரச்சினை என்று பேசு கிறார்கள். பிரச்சினை அல்ல, சவால் என்று நான் எண்ணுகிறேன்.

பிரச்சினையோ, சவாலோ, எய்ட்ஸ் விவாதங்களுக்கும், போதனைகளுக்கும் மடைதிறந்து விட்டிருக்கிறது-ஒழுக்கத்தை போதிப்பதற்கு வந்துதித்த ஒரு நல்லூழாக, மத அடிப்படைவாதிகளும், Moralistகளும் கருதுகிறார்கள். ஆணுறைகளின் அவசியத்தை வலியுறுத்தும் வாய்ப்பாக விஞ்ஞான மனோபாவம் கொண்டவர்கள் எண்ணுகிறார்கள். இலக்கியவாதியான தியாகலிங்கம், கலாசாரத்தை அலசப் பயன்படுத்திக் கொள்கிறார்.

அவரது பார்வையில், இளைஞர்களைப் பூட்டி வளர்க்கும், உரிய காலத்தில் மணம் முடித்துக் கொடுப்பதைப் பொருளாதார நிர்ப்பந்தங்களினால் தள்ளிப் போடும் வளர்ப்பு முறைதான் சீரழிவிற்குக் காரணம். இந்த் வாதம் ஆழமற்றது என்பதை அவரது பாத்திரங் களைக் கொண்டே நிரூபித்துவிடலாம்.

பாத்திரங்களைவிட உணர்ச்சிகளை ஆழமாக சித்திரிப்பதில் தியாகலிங்கம் வெற்றி கண்டிருக்கிறார். சுய பரிதாபம், மோக உணர்வுகள், காதல் நெஞ்சம், மண வேதனை, உடல் வேதனை என்று வெவ்வேறு உணர்ச்சித் தளங்களுக்குக் கதை நகர்ந்து கொண்டேயிருக்கிறது, பந்தய வேகத்தில். இதில் உணர்ச்சிச் சித்திரிப்புத் திறம்பட அமையவில்லையானால், வாசகனை கதையினூடே இட்டுச் செல்வது கடினமாகிவிடும். அவனை இயல்பாக நடத்திச் செல்லாமல், தரதரவென்று இழுத்துக் கொண்டோ, கட்டித் தூக்கிக் கொண்டோதான் போக வேண்டியிருக்கும்.

தியாகலிங்கத்தின் திறமை, இப்படியெல்லாம் நடந்து விடாமல், நாவலைக் காப்பாற்றி வருகிறது.

உணர்ச்சிச் சித்திரிப்பை சிறப்பாக அமைப்பதற்கு தியாகலிங்கத்திற்கு அவரது மொழிநடை உதவுகிறது. பிரபலமான தமிழ் எழுத்தாளர்களின் நடைப் பாணியில் இல்லாமல், சுயமானதாக அமைந்துள்ள நடை அது,

இந்த நாவல் கன்னி முயற்சி என்று அறிந்தேன். அப்படியானால் இது நல்ல துவக்கம். தியாகலிங்கம் இன்னும் பல சிறந்த படைப்புகளை எழுதி சிறப்புகள் பெற மனமாற வாழ்த்துகிறேன்.

வாழ்த்துக்குரியவர்கள், இதனை வெளியிடும்- பதிப்பகத்தாரும்தான். புலம் பெயர்ந்த படைப்பாளிகளின் அதுவும் இளம் படைப்பாளிகளின் படைப்புகளைத் தமிழ் வாசகர்களிடம் எடுத்துச் செல்லும், அவற்றைக் காலம் காலமாகப் பேண வகை செய்யும் அவர்களின் முயற்சிகள் வெற்றிகாண வாழ்த்துகிறேன்.

மாலன்

பிரதம ஆசிரியர்,
தினமணி,
சென்னை-600 002.
11-09-1994

1

ஐந்து வருடங்கள் ஆகிவிட்டன இந்த நாட்டிற்கு வந்து. என்னதான் நண்பர்களுடன் சேர்ந்து இருந்தாலும் தனிமையில் இருப்பது போன்ற உணர்ச்சிதான் எப்போதும் மனதில்! நாட்டிலே அப்பா அம்மாவுடன் இருக்கும் போது இப்படித் தனிமை உணர்ச்சி தோன்றியது இல்லை. ஆண்களுடன் ஆண்கள் அன்னியோன்னியமாக இருப்பது நடிப்பது போல... உடம்பைத் தொட்டுக் கொள்ளாத உறவு இது. இதில் எப்படிப்பட்ட அன்னியோன்னியம் இருக்க முடியும்? ஒரு தாய் மகனைத் தொடாமலே வளர்த்தால் அவர்களிடத்தில் பாசம் என்ற உணர்ச்சி இருக்குமா? தொடாமலே பாசம் தோன்றலாம். அந்தப் பாசத்தால் உண்டாகாத ஒரு உணர்ச்சியும் இதமும் தொட்டு உண்டாகும் பாசத்தால் மட்டுமே உண்டாக முடியும்.

எத்தனை ஆண்களுடன் சேர்ந்திருந்தாலும், தனிமையில் இருப்பது போன்றதோர் உணர்ச்சியே எப்போதும் தோன்றும். சிலருக்கு இப்படி வாழ்வதில் எந்தவித பிரச்சனையும் இல்லாமல் இருக்கலாம். ஆனால், என்னால் இதைத் தாங்க முடியவில்லை. எனக்கு இப்படி வாழ்வது நரகவேதனையாக இருந்தது. இப்படி வாழ்வதைவிடத் தற்கொலை செய்து கொள்ளலாம் போலத் தோன்றும். மனசிலே வெறுப்பு வரும்போது நண்பர்களோடு அமர்ந்து அரட்டை அடிக்கலாம். அப்படி அரட்டை

அடிப்பது ஒரு தற்காலிக அமைதியைத் தருமே தவிர, அது நிரந்தரமல்ல. மீண்டும் அறைக்கு வந்தவுடன் தலையே வெடிப்பது போல இருக்கும். மனதில் அந்த ஆசை வந்த பின்பு எந்தச் சமாதானத்தையும் மனம் கேட்பதில்லை. ஊரில் இருந்தால் சிலவேளை இப்படிப் பூதாகரமான பிரச்சனையாக இது இருந்திருக்காது. இங்கு தனிமை ஒரு பக்கம், வெள்ளையர் அனுபவிப்பதைப் பார்ப்பதால் ஏற்படும் ஏக்கம் இன்னொருபுறம். இரண்டும் சேரும்போது மனசின் வேதனை ஆயிரம் மடங்காகிறது. அப்பா அம்மா அந்த வேதனையை புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. ஒரு நம்பிக்கை. வீட்டில் இருந்து நல்லதோர் பதில் வரும் என்கின்ற நம்பிக்கை. அந்த நம்பிக்கை மாத்திரம் இல்லையென்றால்... கடிதத்திற்கு நான் மாத்திரம் ஏங்கவில்லை. இங்கு வந்த எல்லா இளைஞர்களும் அதற்காக ஏங்கத்தான் செய்கிறார்கள். ஒவ்வொரு நாளும் நம்பிக்கை எம்மிடம் இருக்கும். கடிதம் வரும்; எங்களது ஏக்கங்களுக்கு பதில் கூறும்; என்கின்ற நம்பிக்கை எங்களிடம் நிறைந்திருக்கும்.

தபாற்காரன் வீடு நோக்கி வருகின்றான் என்னும் போது ஏற்படுகின்ற சந்தோஷமும் பரபரப்பும், அவன் வந்து போன பின்பு இருப்பதில்லை. எதிர்பார்த்தவை எமக்கு கிடைப்பதில்லை. எதிர்பார்த்து கிடைக்காவிட்டால் ஏமாற்றந்தானே? அப்பா அம்மாவை எதிர்க்காமல் இன்னும் எதிர்பார்க்கிறேன். கடிதம் வரும்; நல்ல பதில் வரும் என நான் இன்னும் காத்துக்கொண்டிருக்கிறேன். அவர்கள் என்னைப் புரிந்து கொள்ளவில்லை. என்னால் அவர்களைப் புரிந்து கொள்ள முடிகிறது.

நான் விரும்பியவாறு நடக்கலாம். யாரும் தடுத்துவிட முடியாது, ஆனால், நான் அப்படி நடக்கவில்லை. மனிதாபிமானம், பாசம், மரியாதை ஆகியன காரணமாய் இருக்கலாம். நான் சிந்திப்பது போன்று என் பெற்

றோர்கள் சிந்திப்பது இல்லை. எனது வேதனையைப் பற்றி, எனது வருத்தத்தைப் பற்றி அவர்கள் சிந்திப்ப தில்லை. எத்தனையோ கடிதங்கள் எழுதியாகிவிட்டது. ஆனால், அவர்களுக்கு புரிய வைக்க முடியவில்லை. அவர்கள் புரிந்து கொள்ள விரும்பவில்லையா என்பது கூட எனக்குத் தெரியாது. நான் இப்படி நித்தமும் மனதிற்குள் புழுங்குவதால் எந்த முடிவும் வரப்போவ தில்லை. புரிந்தும் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் நான் இருக்க வேண்டியுள்ளது. எனது விருப்பத்திற்கு நான் நடப்பதானால், அப்பா அம்மாவின் ஆசைகளை யும் நம்பிக்கைகளையும் உடைக்க வேண்டும். ஆசை களையும் நம்பிக்கைகளையும் மாத்திரமா? அவர்களுட னான உறவையும் அல்லவா உடைத்துக் கொள்ள வேண்டும்? அதை நான் விரும்பவில்லை. இதற்கு முடிவு தான் என்ன? தலையில் நரை புழுக்க நான் வாழ வேண்டுமா? இது என்ன கொடுமை? நீண்ட நேரம் இப் படியே மன குழப்பத்தில் இருக்க எனக்குப் பிடிக்க வில்லை. கடிதம் பார்க்கச் சென்றேன். கடிதம் ஒன்று வீட்டிலிருந்து வந்திருந்தது. கடிதம் வந்திருந்தமை எனக்கு குட்டி இன்ப அதிர்ச்சியைத் தந்தது. அதே வேளை மனதில் ஒருவித விறுவிறுப்பும் தவிப்புமாய் இருந்தது. எனவே, எனது அறைக்கு உடனே திரும்பி வந்து கடிதத்தைப் பிரித்து வாசிக்கத் தொடங்கினேன்.

13.09.92
மூளாய்.

அன்பின் மகன் அறிவது: நாங்கள் நல்ல சுகமே உள் ளோம். அதுபோல் நீயும் நலமுடன் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

மேலும் உனது கடிதம் கிடைத்து எல்லாப் புதினங்களும் அறிந்தோம். உனக்கு இப்போது என்ன அவசரம்? ஊரிலே முப்பத்தைந்து நாற்பது வயது வந்தவர்கள் எல்லாம் எவ்வளவு கட்டுப்பாடாய் இருக்கினம். அப்பிடி

இருக்க உனக்கேன் இந்த அவசரம்? உனக்கு இன்னும் கலியாண வயசு வரயில்லை. அதோட உலக அனுபவ மும் உனக்கு போதாது, இன்னும் இரண்டு இல்லாட்டி மூண்டு வருசம் போனால்த்தான் நீ ஒரு முழுமனுசனா வாய். அப்பதான் உனக்கு கலியாணம் கிலியாணம் எல் லாம் செய்து வைக்கலாம். அதுவரையும் நீ பொறுத் திருக்கத்தான் வேணும்.

அப்பா அம்மாவின்ர சொல்லுக்கேட்டு சகோதரங் களோட சேர்ந்து ஒற்றுமையா இருப்பா எண்டு நாங்கள் நினைக்கிறம். எனக்கு நம்பிக்கை இருக்கு. நீ அப்பா அம்மாவின்ர சொல்லுக் கேட்டு நடப்பாய் எண்டு. உனக்கு நாங்கள் நல்ல இடத்தில நல்ல சீதனம் வேண் டிக் கலியாணம் செய்து வைப்பம். ஆனா நீ இப்ப அவச ரப்படக்கூடாது. உனக்கு நாங்க எழுதுறது விளங்கும் எண்டு நினைக்கிறம்.

மேலும் தங்கச்சிக்கு கலியாணம் செய்து வைச்சு இன் னும் ஒரு வருசம் ஆகேல்ல. அதுக்கிடையில அடுத்த கலியாணத்துக்கு என்ன அவசரம் எண்டு அப்பா பேசு றார். நீ எல்லாத்தையும் புரிஞ்சுகொண்டு அதுக்கு ஏற்ற மாதிரி நடப்பாய் என்று எதிர்பார்க்கிறம். அத்தோடு வீட்டுத் தேவைக்கு தற்போது பணம் தேவைப்படுகின் றது. எனவே பணம் அனுப்பி வைக்கவும். தங்கச்சிக்கு சீதனம் நிறையக் கொடுத்ததால் எங்களிடம் தற்போது கையிருப்பில் கொஞ்சமும் பணம் இல்லை. எனவே உடனடியாகப் பணம் அனுப்பி வைக்கவும். வேறு அதிக புதினம் இல்லை. இத்துடன் முடிக்கிறேன்.

உனது அன்பின் தாய்,
சுந்தரி.

கடிதத்தைப் படித்து முடித்தவுடன் தலை சுற்றியது. கோபம் கோபமாக வந்தது. கடிதத்தை மீண்டும் ஒரு முறை வாசித்தேன். கோபமே மேலிட்டது. அந்தக் கடிதத்தை சுக்கல் சுக்கலாகக் கிழித்து யன்னல் வழியே

காற்றில் பறக்க விட்டேன். அப்பா அம்மா மீது காட்ட முடியாதகோபத்தை அந்தக் கடுதாசி மேல்தான் காட்ட முடிந்தது. சற்று நேரம் மூஞ்சையைப் பொத்திக் கொண்டு அழவேண்டும்போல் இருந்தது. அழவில்லை. நான் ஏன் அழவேண்டும்? தப்புச் செய்யும் அம்மா அப்பாவையல்லவா கதறக் கதற அழவைக்க வேண்டும்? தலையைப் பிடித்துக் கொண்டு சிறிது நேரம் அப்படியே மேஜையில் படுத்தேன்.முடியவில்லை.என்னால் நிம்மதி யாகப் படுக்க முடியவில்லை. மனதின் அமைதியெல் லாம் போய் விட்டது. அப்பா அம்மாவால் அமைதி கிடைக்கப் போவதில்லை. என்ன செய்யலாம்? ஏதாவது செய்ய வேண்டும். இனி யாரைப் பற்றியும் கவலைப் படாமல் எனது வாழ்க்கையை நான் சுதந்திர மாக அனுபவிக்க வேண்டும். அப்பா அம்மா ஊர் உறவு இவை எல்லாம் என்னைக் கட்டுப்படுத்தும் தளைகள். எப்போது நான் இவற்றை எல்லாம் களைகிறனோ அப் போதுதான் நான் சுதந்திர மனிதனாக வாழலாம்.

நேற்று கடிதம் வந்ததில் இருந்து மனதில் நிம்மதி யில்லை. வீட்டில் இருக்கப் பிடிக்கவில்லை. ஒவ்வொரு வரும் ஒவ்வோர் விதமாய்க் கதைப்பார்கள். மற்றவர் களை மட்டம் தட்டுவது சிலருக்கு மகிழ்ச்சி. எனக்குப் பிடிக்கவில்லை. அவர்களோடு இருந்து கதைத்து, ஆளுக்கு ஆள் மட்டம் தட்டிக் கொள்வது எனக்கு சற்றும் பிடிக்கவில்லை. அறைக்குள் இருந்தாலும் பைத்தியம் பிடித்து விடும்போல் இருந்தது. வெளியே சென்றேன்.

வெளியே வெய்யில் எறித்துக் கொண்டிருந்தது. இது கோடை காலந்தான். ஆனாலும், சாதுவாய் குளிரத் தான் செய்கிறது. நோர்வே மக்களுக்கு இது குளிர் அல்ல. அவர்கள் இதைக் குளிராகவும் உணர்ந்து கொள்ள மாட்டார்கள். தமிழர் பலருக்கு குளிரும். பெண்கள். ஆண்கள். பெரியவர். சிறியவர். கன்னியர்!... கன்னியர் என்னும் இடத்தில் என்னால் நிமிர்ந்து

பார்க்காமல் இருக்க முடியவில்லை. நான் சாதாரண மனிதன். என்னைப் பருவம் பந்தாடுவதை உணரு கிறேன். பலருக்கு உண்மையைச் சொல்லத் துணிவு இல்லை. வெளியே போய் பொய் பொய்யாய்ப் புளுகுகின் றனர். அவர்கள் கோழைகள். அவர்களது உள்ளங்கள் மாத்திரம் கொந்தளித்துக் கொண்டே இருக்கும். நான் உண்மையைச் சொல்கின்றேன். நான் வெக்கப்பட வில்லை. வெக்கப்பட வேண்டிய விஷயமல்ல. பலருக் குத் துணிவு இருப்பதில்லை. இந்தப் பெண்களைப் பார்த்தால் மனசு பேதலிக்கிறது. காதல் வருகின்றதோ இல்லையோ. அவளோடு கலவி செய்ய வேண்டும்போல் ஓர் உணர்ச்சி. இது தப்பா? நான் மனிதன். எனவே, உணர்ச்சிகளும். எண்ணுவது தனிமனித சுதந்திரம். ஆனால் அதை நடை முறைப்படுத்த எண்ணினால் அது தப்பாக இருக்கலாம். எண்ணங்கள் சுதந்திரமாய் அலைய என் கால்கள் சுதந்திரமாய் நடந்தன.

ரெஸ்டாரன்டுக்கு வந்தவுடன் காப்பி வாசம் மூக்கைத் துழைத்தது. உள்ளே சென்று ஒருகப் காப்பி குடித்தால் நல்லா இருக்குமெனத் தோன்றியது. அதற்குள் சென்று ஒரு கப் காப்பியை எடுத்துக் கொண்போய் ஒரு மூலையில் அமர்ந்து பருகத் தொடங்கினேன். நா காப்பியைச் சுவைத்தது. கண்கள் காட்சிகளைச் சுவைத்தன. உள்ளே ஓரளவு வெளிச்சந்தான். ஆனாலும், அங்கு நடப்பவை மிகவும் தெளிவாகத் தெரிந்தன. அங்கு, மூலையில், ஒரு சோடி கைகள் அணைத்திருக்க, கண்கள் மூடி இருக்க, இதழ்கள் இணைந்திருக்க, இவ்வுலகை மறந்திருந்தனர். அவர்கள் தங்களை மறந்திருந்த அந்தக் காட்சி என் மனசை ஏதோ செய்தது. நான் எப்போது இப்படி இருப்பது? எனக்கு எப்போது ஒரு பெண்ணின் ஸ்பரிசம் கிடைக்கப் போகின்றது? என்னிடம் என்ன தகுதி இல்லை? நான் ஏன் இப்படி ஏங்கி ஏங்கிச் சாகவேண்டும்? என்னிடம்

ஒரு பெண்ணை வைத்து காப்பாற்றும் எல்லாத் தகுதிகளும் இருக்கின்றன. எனக்குத் தெரியும். அப்படி இருந்தும் ஏன் அப்பாஅம்மா இப்படி இழுத்தடிக்கிறார்கள்?

நான் பிறந்த சமூகம் மிகவும் கொடியது. ஆண்களும் பெண்களும் பிரிந்து வாழ்வதுதான் அந்தச் சமூகம் பேணும் கலாசாரமாம். என்ன கலாசாரமோ, என்ன கருமாதியோ? இந்தக் கலாசாரம் நமக்குத் தேவை தானா? காலத்தால் மாறாத புனிதமான கலாசாரமாம்! சீ, நான் ஏன் இப்படிப்பட்ட ஒரு சமூகத்திலே வந்து பிறந்தேன்? எனக்கு சலிப்பாய் இருந்தது. என்னை நினைக்க எனக்கே வெறுப்பாய் இருந்தது. எல்லாவற்றையும் விட்டுவிட்டு எங்காவது சென்று என் விருப்பப்படி அனுபவித்து திரிய வேண்டும் போல் இருந்தது. அதுதான் உண்மை வாழ்க்கையாகத் தோன்றியது. இப்படி இருந்து யோசித்துக் கொண்டிருந்தால் பைத்தியம் பிடித்துவிடும். வீடு நோக்கி நடந்தேன்.

நான் இலங்கையில், எங்கள் வீட்டில் இருக்கின்றேன். சிலபேர் என்னைத் துரத்திக் கொண்டு வருகிறார்கள். எனக்கு என்ன நடக்கின்றது எனப் புரியவில்லை. ஏதோ என்னைச் சுற்றி நடக்கின்றது. நான் ஏன் இங்கு வந்தேன் என்பதுகூட எனக்குப் புரியவில்லை. வீட்டுக் கதவை இழுத்துப் பூட்டுகின்றேன். அது பூட்டிக் கொள்ள வில்லை. கதவு திறக்கின்றது. அந்தக் கதவின் அமைப்பு அப்படி. நாலு கதவுகளும் அதன் பாட்டில் ஒவ்வொரு திசைக்குப் போகின்றன. வெளியே என்னை நோக்கி ஆபத்து வந்து கொண்டு இருக்கின்றது. கதவைச் சாத்த முடியவில்லை. இது மகா அவஸ்தை.

எனக்குப் பயமாக இருக்கின்றது. என்னை ஆபத்து விழுங்கப் போகின்றது. குலை நடுக்கம். யாரும் உதவிக்கு இல்லை. அம்மா வீட்டில் இருக்கின்றாரா என்பதுகூட எனக்குத் தெரியவில்லை. அதோ

அம்மா. அம்மாவின் பார்வையில் ஏன் இவ்வளவு கோபம் என்பது எனக்கு புரியாததோடு ஆச்சரியத்தையும் தந்தது. அம்மா என்னை சட்டை செய்யாது கோடி அறைக்குச் செல்கின்றார்.

நான் இப்போது எங்கு நிற்கின்றேன்? புரிகிறது. எங்கள் ஊர் கோயிலுக்குப் பின்னால் உள்ள சந்தில் நிற்கிறேன். அதன் கரையில் புல் பூண்டுகள். காடாய்க் கிடக்கு. பூண்டுகளின் பெயர் தெரியவில்லை. அவற்றின் மணம் மாத்திரம் ஒரு கணம் ஆட்டிவைக்கிறது. நான் நிம்மி வீட்டுக்குக் கிட்டவா ஓடி வந்தேன்? நிம்மி வீட்டிற்கு பக்கத்தில் பனை மரங்களும் கொய்யா மரங்களும் நிறைய உள்ள பற்றைக்காடு இருக்கின்றது. அவர்களிடம் இருந்து தப்பி ஓடுகின்றேன்.

காட்டுக்குள் நின்று பார்க்கும் போது, தன் வீட்டிலிருந்து, நிம்மி ஆவலுடன் என்னைப் பார்ப்பது தெரிகிறது. அதே நிம்மிதான். நான் சின்ன வயதில் கட்டிப் பிடித்து முத்தம் கொடுத்த அதே நிம்மிதான். சின்னவர்களாய் இருக்கும் பொழுது நான் அவளுக்கு முத்தம் கொடுக்கும் போது இறுக்கி அணைத்துக் கொள்வேன். அவளும் என்னை இறுக்கி அணைத்துக் கொள்வாள். என்ன உணர்ச்சி என்பது எனக்குஅப்போது தெரியாது. அந்த அணைப்பு இதமாய் இருக்கும்.

பின்பு நானுந்தான் வளர்ந்து விட்டேன். நிம்மி சிறிது வளர்ந்து விட்டாள். நிம்மி எங்கள் வீட்டுக்கு வருவாள். நாங்கள் ஒளித்துப்பிடித்து விளையாடுவோம். அப்போது எங்கள் வீட்டின் முன் பாதி கட்டப்படாமல் அரைகுறையாக இருந்தது. அந்தக் கட்டப்படாத அறை மூலைகளிலே நாங்கள் ஒளித்து நிற்பது வழக்கம். அப்படி ஒளிக்கும்போது நான் அவளுக்கு முத்தமிட முயல்வேன். ஆனால் அவள் அப்போது முத்தமிட விடுவதில்லை. அவளை முத்தமிட அணைக்கும்போது எனது இரத்தோட்டம் கூடுவது எனக்கே புரியும்.

அவளுக்கும் இது நன்கு தெரிந்திருக்க வேண்டும். எனவேதான் என்னை முத்தமிட விடாது தடுக்கிறாள். ஓ, இது எத்தனை வருடங்களுக்கு முன்பு?

அதே நிம்மி இப்போது என்னைப் பார்த்துக் கண்ணடிக்கிறாள். என்னை தன்னிடம் வருமாறு. தன்னை அணைத்துக் கொள்ளுமாறு! என்னைப் பார்த்து அந்தக் கண்கள் கெஞ்சுகின்றன. நான் எப்படி அவளிடம் செல்வது? என்னைத் துரத்திக் கொண்டு வந்த தடியர்கள் என்னை வேட்டை நாய் காவல் காப்பது போலத் தெருவில் நின்று காவல் காத்துக் கொண்டிருக்கின்றனர். நிம்மியின் அந்த ஏக்கப் பார்வை என்னைச் சும்மா இருக்க விடவில்லை. நான் அவளை வீட்டின் பின்புறம் வருமாறு சைகை காட்டுகிறேன். அங்கு கிடுகால் வேய்ந்த படலை ஒன்று இருக்கின்றது. அவள் பின்புறம் போகின்றாள். நான் ஒரு முடிவிற்கு வருகின்றேன். இரண்டு மரக்கட்டைகளை எடுத்து நான் ஓடும் திசைக்கு எதிர்ப்பக்கமாக எறிகின்றேன். அவர்கள் ஏமாந்து போய் அந்தத் திசையை நோக்கி ஓடுகிறார்கள். நான் எதிர்த் திசையில் ஓடிவந்து நிம்மி வீட்டிற்குள் புகுந்து கொள்கின்றேன். ஏமாந்த அவர்கள் நீண்ட தூரம் ஓடும் சத்தம் கேட்கிறது.

நிம்மியைப் பார்க்கிறேன். அவள் என்னை ஒருவித தாகத்தோடு பார்க்கிறாள். நான் அவளை நெருங்கி அணைத்துக் கொண்டு, அவளது வீட்டிற்குள் செல்ல முயல்கிறேன். அவள் அதற்கு என்னை அனுமதிக்கவில்லை. 'அப்பா அம்மா வீட்டில் இருக்கிறார்கள்' என்று சமாதானம்.

நான் அவளை இறுக்கி அணைத்து முத்தம் கொடுக்கிறேன். அவளது இதழ்களை ஒரு முறை உறிஞ்சிச் சுவைக்கிறேன். அவளது அழகிய கிளிமூக்கின்மீது ஆசை வர, அவளிற்கு நோகா வண்ணம் அவளது அந்த கிளிமூக்கை மெதுவாக கடிக்கிறேன். அவள்

என்னை அணைத்த வண்ணம் இன்ப வேதனையுடன் சிணுங்குகிறாள்.

அவளுக்கு என்ன வந்தது? என் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு தன் வீட்டு வைக்கோல் போருக்குப் பின்னே செல்கிறாள். என்னை இறுக அணைத்தாள். முத்தமழை தந்தாள். என் கைகளைப் பிடித்த வண்ணம் எனது கண்களைப் பார்த்துக் கொண்டே வைக்கோல் போரில் மல்லாந்தாள். என்னால் அதற்குமேல் பொறுக்க முடியவில்லை. அவள் மீது ஆழ்ந்து அந்த சுகத்திற்குள் மூழ்கினேன்.

இடி இடிப்பது போல்... ஒருமுறை இருமுறையல்ல. இடித்துக் கொண்டே இருந்தது... நினைவுகள் குலைந்தன. நான் விழிப்பிற்கு வந்தேன். ஓ கதவை, யாரோ தட்டிக்கொண்டிருக்கிறார்கள்... எரிச்சலாய் இருந்தது. அற்புதமான கனவு ஒன்று கலைந்து விட்டதே என எரிச்சலும் கோபமுமாய் வந்தது.

வாழ்க்கையில்தான் அனுபவிக்க முடியவில்லை. கனவில் எப்படிப்பட்டதோர் அனுபவிப்பு. சீ, அதையும் இவர்கள் கெடுக்கிறார்கள். கோபமாக வந்தது. என் கோபத்தை அவர்கள்மீது காட்டமுடியாது. அது நாகரிகமும் இல்லை. அதே வேளை அவர்கள் மாத்திரம் இப்படி என்னை நித்திரையில் இருந்து எழுப்பலாமா? நான் இப்படிக் கனவு காண்கிறேன் என அவர்களுக்குத் தெரியுமா, என்ன?

ஒருவித அலுப்புடன் எழுந்து சென்று கதவைத் திறந்தேன். ஜெகன் சிரித்துக்கொண்டு நின்றான்.

ஏதோ எண்ணியவனாய், 'என்ன, உன்ன டிஸ்ரப் பண்ணிட்டனா?' என்று கேட்டான்.

'சீ சீ வா உள்ள.'

என் பதிலை எண்ணும் போது எனக்கே சிரிப்பாய் இருந்தது. எவ்வளவு அப்பட்டமான பொய் இது?

இப்படித்தான் சொல்லவேண்டும் என்பது நாகரிகம். அத்தோடு மற்றவர்களின் மனசைப் புண்படுத்தாமல் இருக்கும் தந்திரம்.

'என்ன அப்பிடி. மலைச்சுப் போயிட்டா?'

'ச்......ஒண்ணும் இல்ல:'

'நீங்க என்ன விஷயமா வந்தீங்க?'

'நீ எனக்கு ஒரு உதவி செய்யணும்?'

'என்ன?'

'திங்கள் காலையில எனக்காக வேலைக்கு போறியா?'

'ம்.........போனாப் போச்சு'

'தாங்ஸ்டா.'

'பறுவாய் இல்ல, நமக்குள்ள இதல்லாம் என்ன?'

நான் ஜெகன் கேட்டதற்கு எந்தவித மறுப்பும் இன்றிச் சம்மதித்தேன். சிறிது நேரம் இருந்து பலதையும் கதைத்து விட்டு ஜெகன் சென்று விட்டான்.

2

எனக்குச் சிந்தனையாக இருந்தது. இப்படியே கனவிலும் கற்பனையிலும் மாத்திரம்தான் எனது வாழ்க்கை கழியுமா? இதுதான் புலம்பெயர்ந்துள்ள ஆண்களாகிய எங்கள் நிலைமையா? நிரந்தரமற்றது. நிச்சயமற்றது. பெண்ணின் சுகம் அறியாமலே பெண்ணைப் பற்றிப் புரியாமலே நான் இறக்க நேரிட்டால்? சீ இது என்ன கற்பனை? அப்படி எதுவும் நடக்காது. நம்பிக்கைதான் வாழ்க்கை. எனக்கும் வாழ்வு உண்டு. எது நல்லது? முப்பது வயதுவரையும் கலியாணம் செய்யாது கட்டைப் பிரமச்சாரியாக இருப்பதுதான் நல்லதா? இல்லை; இதை ஒரு நாளும் ஏற்றுக் கொள்ளமுடியாது. மனிதனின் அரை வாழ்நாளில் பெண் சுகத்தைக் காணக்

கூடாது என்றால் அதை எப்படி ஏற்றுக் கொள்வது? முடியாது...

பதின்மூன்று பதினாலு வயசிலை திருமணம் செய்து கொள்வதுதான் சரியானதா? இல்லை. இதுவும் சரியில்லை. அப்போது எதுவும் விளங்காத பருவம். அவர்களால் உலகத்தை முற்றுமாய் அறியமுடியாத பருவம். எப்பொழுதுதான் நான் ஆசைப்பட்டதை அனுபவிக்க முடியும்? எது சரியான பருவம்?

அப்படி ஒரு பருவம்—சரியான பருவம்—எல்லாருக்கும் உண்டு. நாம்தான் அதை மதிக்கத் தவறுகிறோம். எம்மை நாமே ஒரு வட்டத்திற்குள் அடைத்துக் கொள்கின்றோம். அதுதான் தப்பு. நாம் வாழ்க்கையில் செய்யும் பெரிய தப்பு. இந்தத் தப்பைத் தவிர்த்தால் நாம் வாழ்க்கையைப் புரிந்து கொள்ளமுடியும். யாரையும் யாரும் வெறுக்கத் தேவையில்லை.

எம்மைச் சுற்றி தப்பானதொரு பெரிய வட்டம் உள்ளது. உடல் உறவைப் பற்றி ஒழுங்கான அறிவு இல்லை எமக்கு. திருமணத்தையும் உடல் உறவையும் ஒன்றாகச் சேர்த்து நம்மை நாமே குழப்பிக் கொள்கின்றோம். இது தான் தப்பு. திருமணம் செய்யாது உடல் உறவு கொள்ளுதல் என்பது எம்மால் ஜீரணிக்க முடியாத ஒன்று. இதை எமது சமுதாயம் சரியென ஒத்துக் கொள்ளாதாம்.

திருமணம் என்பது இருபதிலும் நடக்கலாம். சில வேளை நாற்பத்தைந்திலும் நடக்கலாம். ஒருவனுக்கு திருமணம் நாற்பதில் நடப்பதாயின் அவன் எத்தனை வருடம் தனது உடல் அவஸ்தைகளைத் தாங்க வேண்டி இருக்கும்? இந்த உடல் அவஸ்தை எவ்வளவு கொடுமையானது? நான் பசியுடன் இருக்கிறேன். உணவும் உண்டு. ஆனால் சாப்பிட அனுமதி இல்லை. எவ்வளவு கொடுமை இது? நமது உணர்ச்சிகளுக்கு கட்டுப்பாடு போட்டு பெரியவர்கள் கண்டதென்ன?

உடல் உறவைப் பொறுத்தளவில் பெண்களுக்குந்தான் பெருத்த அவஸ்தை. உறவு கொண்டபின் தப்பிக்கவும் முடியாது. காரணம் கர்ப்பம் என்னும் உபவிளைவு. ஆண்களுக்கு இந்த அவஸ்தை இல்லைத்தான். அதேவேளை உணர்ச்சியை கட்டுப்படுத்திக் கொள்ளும் திறமை இருக்கிறதா? இருந்தால் நான் ஏன் இப்படி அவஸ்தைப் படுகிறேன்?

எதை எதையோ எல்லாம் சிந்தித்து என் வாழ்க்கை கேள்விக் குறியாகி விட்டது. ஏக்கத்தில் கிடந்து உழலுவதையே நித்தியமாக்கி விட்டனர். சமுதாய அமைப்பைச் சாதாரண மனிதனால் எப்படி உடைக்க முடியும்? இந்த வரம்பு முறைகள் உடையாதா? எங்கள் சமுதாயம் முன்னேற்றம் அடையாதா? இங்கிருப்பது போல் ஆணும் பெண்ணும் விரும்பிவிட்டால் அவர்களை அவர்கள் பாட்டில் விட்டுவிடும் பண்பு எப்போது வரப்போகின்றது எமது மக்களுக்கு?

உண்மையைச் சொன்னால் நம்மவர்கள் பலர் எதிர்ப்பார்கள். சண்டைக்கு வருவார்கள். உத்தமர் போல் நடிப்பார்கள். பின்பு ஊரை ஏமாற்றிவிட்டு, கடும் இருட்டில் கள்ளக் கலவிக்குச் செல்வார்கள். என்னால் நிம்மதியாக தூங்கமுடியவில்லை. ஆயிரம் எண்ணங்கள் ஆயிரம் கற்பனைகள் மனசை அலைக்கழித்தன. நிம்மதியாய் தூங்குவதுகூடப் பிரச்சனை. பிரச்சனைகள் இருந்தால் தூக்கம் எப்படி வரும்?

எனக்கும் தூக்கம் வரவில்லை. தூக்கம் வராதபோதெல்லாம் ஊரில் உள்ளவர்கள்மீது தான் கோபம் வந்தது. உழன்று உழன்று படுத்தேன். இரண்டு மணிக்குப்பின் எப்படித் தூங்கினேனோ தெரியாது. தூங்கிவிட்டேன். அந்த அருமையான தூக்கத்தை 'அலாம்' மணிக்கூடு அபசகுணமாய்க் கலைத்தது.

உடம்பெல்லாம் நோவாய் இருந்தது. படுக்கையால்எழுந்திருக்க எனக்கு விருப்பம் இல்லை. அப்படியே படுத்

திருந்தால் சுகமாய் இருக்குமெனத்தோன்றியது. அலாம் மணிக்கூட்டை நிறுத்தினேன். இந்த அலாம் மணிக்கூட்டிற்கு இரண்டு பொத்தான்கள் இருக்கின்றன. ஒன்றை அழுத்தினால் பத்து நிமிடத்திற்குப் பின்பு மீண்டும் அலாம் அடிக்கும். மற்றயதை அழுத்தினால் முற்றுமாய் அலாம் அகற்றப்பட்டுவிடும். நான் பத்து நிமிடத்திற்குப் பின்பு மீண்டும் அடிக்கச் செய்யும் பொத்தானை அழுத்திவிட்டு மற்றப் பக்கம் திரும்பிப் படுத்தேன்.

இப்படித் திரும்பிப் படுப்பது சுகமானது. பிடித்தவளை நினைத்துக்கொண்டு படுத்தால் அதன் சுகமே அலாதி. இரவில் படுக்கும்போதும் எ்ண்ணங்கள் அலைபாய்வது உண்டு. பெண் சுகத்தைப் பற்றி எண்ணிக்கொண்டு படுப்பதே இவ்வளவு சுகத்தைத் தந்தால்? வாவ்... உண்மையில் அனுபவிக்கும்போது எவ்வளவு இன்பமாய்... இதை எண்ணும்போது மீண்டும் கோபம் வந்தது. அப்பா அம்மாவை என் மனம் சபித்தது. மனித உணர்ச்சிகளுக்கு மதிப்பு கொடுக்கத் தெரியாதவர்கள் என்னும் போது அவர்கள்மீது அளவிட முடியாத வெறுப்பு வந்தது. சீ, இவர்களுக்குப் பிள்ளையாக இலங்கையில் நான் ஏன் பிறந்தேன்?

எனது சிந்தனைநீடிக்கவில்லை. அலாம் மணிக்கூடு மீண்டும் அடித்தது. இம்முறையும் அழுத்தி விட்டு படுக்க முடியாது என்பதால் அலுப்புடன் படுக்கையை விட்டு எழுந்தேன். இங்கு எல்லாம் நாங்களே செய்தாக வேண்டும். இது ஒருவித அலுப்பைத் தந்தாலும், ஒருவித தன்னிறைவும் திருப்தியும் இருக்கத்தான் செய்கிறது. எனக்கு எனது வேலையை நான் செய்வதில் பூரண திருப்திதான். மற்றவர்களின் வேலையையும் செய்யச் சொல்லும் போது கெட்ட கோபம் வருகின்றது.

நான் பலமுறை முயன்று தோற்று விட்டேன். ஆம்; என்னால் கோபத்தை அடக்க முடியவில்லை. மௌனமாய் இருக்கத் தெரியவில்லை. என்னை நானே அடித்துக்

கொண்டு அழவேண்டும் போலத் தோன்றும்.

'என்னடா இஞ்ச வந்தும் தூக்கமா?'

ஹோலுக்குள் என்னை உசுப்பினான் விநோத். என் நினைவுகளைக் கலைத்த அவனைப் பார்க்கக் கோபம் வந்தது.

'சும்மா இரடா'.

'வரேல்லேயோ பக்றிக்கு?'

'இன்னும் ஐஞ்சு நிமிஷம் இருக்கு.'

அதற்கு மேல் விநோத் என்னுடன் கதைக்கவில்லை. அவன் பக்றிக்கு சென்றுவிட்டான். அவன் செல்வதைப் பார்த்துக் கொண்டு இருந்த விக்கி தனது மனக்கிடக் கையை என்னிடம் கொட்டினான்.

'ஏழு மணிக்கு வேலை. இவங்க எப்பபோறாங்களெண்டு பார்! தமிழரின்ரை மானத்தையே வேண்டுறாங்கபார். சீ, தமிழரோட வேலை செய்யேலாது!'

சலித்துக் கொண்டான் விக்கி.

இது ஒன்றும் புதிதல்ல எனக்கு. நித்தமும் நடப்பது தான். எது தப்பு எது சரி என்பது அவனவன் மன எண்ணங்களைப் பொறுத்தது. எங்களுக்குத் தப்பாய் தெரிபவை முழுமையாகத் தப்பாவோ அல்லது எங்களுக் குச் சரியாய் தெரிபவை முழுமையாக சரியாகவோ இருந்து விட முடியாது.

வெறுப்பு அதிகரிக்கும் போது ஏன் வேலை செய் கிறேன் என்பது போல ஒருவித சலிப்பு உண்டாகும். இந்தச் சலிப்பு உண்டாகி ஒருசில வருடங்கள். இன்றும் அந்தச் சலிப்புடன்தான் வேலைக்குச் சென்றேன். எனது மன வேதனை ஒருபுறம் இருக்க, தொழிற் சாலை அதிகாரிகள் உண்டாக்கும் மனவேதனை இன் னொருபுறம் வாட்டுகின்றது. அவர்களுக்குத் தங்கள் கவலையைத் தவிர எதிலுமே கவலை கிடையாது. நாங்

களும் மனிதர்கள்தான் என்பதைச் சிலவேளை மறந்து விடுவார்கள்.

எங்களுக்குப் பொறுப்பான அதிகாரிக்கும் எனக்கும் ஏற்கனவே பல பிரச்சனைகள். நான் ஒருமுறை வேலைக்கு சென்றேன். எனக்கு பிடித்த ஒரு வேலை யைச் செய்யத் துவங்கினேன். ஆனால், எனக்கு பொறுப்பான அதிகாரி என்னை அந்த வேலையை செய்ய வேண்டாம் எனவும், போய் மற்றொரு வேலை யைச் செய்யுமாறும் கூறினான். எனக்கு அவன் அப் படிக் கூறியது கோபத்தை உண்டு பண்ணியது. கோபம் வரும்போது, நான் என்ன செய்கின்றேன், அது சரியா அல்லது தப்பா என்பது பற்றி எல்லாம் என்னால் சிந்திக்க முடிவதில்லை. 'எடுத்தேன் கவுட்டேன்' எனத் தான் முடிவு எடுப்பேன். பின்புதான் அதைப்பற்றி எண்ணிக் கவலைப்படுவேன்.

நான் அவன் கூறிய வேலையைச் செய்யவில்லை. நான் விரும்பிய வேலையைச் செய்ய விடாவிட்டால் வீட்டுக்குப் போவதாய் கூறிவிட்டு, நான் வீட்டிற்கு வந்து விட் டேன். அது அவனுக்கு கோபத்தை உண்டு பண்ணியது. முதலாளியிடம் எல்லாவற்றையும் கூறிவிட்டான். அதற்கு உடனே எந்தவித நடவடிக்கையும் எடுக்க வில்லை. நானும் அதை மறந்து போனேன். அவர்கள் அதை மறக்கவில்லை என்பது ஒரு வாரத்துக்கு பின்பு தான் எனக்குப் புரிந்தது.

அன்று திங்கள் கிழமை. என்னை முதலாளி வருமாறு கூறியதாக அந்த அதிகாரி, கூறினான். எனக்கு அப்போதே புரிந்து விட்டது, இதில் ஏதோ சிக்கல் இருக்க வேண்டும் என்று! நான் முதலாளியின் அறையை நெருங்கினேன். மனசு அடித்துக் கொண்டது. அந்த அறையின் கதவு திறந்தே இருந்தது. என்னைக் கண்ட துமே உள்ளே வருமாறு சைகை காட்டினார்.

நான் உள்ளே சென்றேன். அவர் தனக்கு எதிரே இருக்கும் சோபாவைக் காட்டிஅதிலேஇருக்குமாறு கூறினார். அமர்ந்தேன்.

'நல்லது. போன வியாழக்கிழமை ஏன் வேலையை விட்டுட்டுப் போனாய்?'

என்னால் எதுவும் கூறமுடியவில்லை. என்னில் தப்பிருப்பது எனக்கே புரிந்தது.

'அது வந்து, நான் செய்த வேலையை அவர் செய்யவிடல்ல... அதுதான் போயிட்டன்...'

'அவர் போமன். அவர் சொல்லுறத நீ செய்துதான் ஆகணும். நீ செய்யிற மாதிரி எல்லாரும் செய்யத் தொடங்கினா என்னாகும் பக்றி? இது பக்றி. இங்க சட்டதிட்டம் கட்டுப்பாடெல்லாம் உண்டு. நீ வேலை செய்யிறதெண்டா அதுக்கு கட்டுப்பட்டுத்தான் நடக்கணும். இப்பிடி இனி நீ செய்தால் நான் உன்னை வேலையில இருந்து நிற்பாட்ட வேண்டி வரும். நீ கட்டாயம் போமன்ர சொல்லுக்கேட்டு நடக்கணும். சரி இப்ப நடந்தது இருக்கட்டும். இனி இப்பிடி நடக்கக் கூடாது. நான் ஒரு கடிதம் எழுதுறன். நீ அதில கை எழுத்து வைச்சுத் தரவேணும்?'

நான் சிறிது நேரம் என்ன பேசுவது என்பதுபுரியாமல் விழித்துக் கொண்டு நின்றேன். பின்னர் ஏதோ அசட்டுத் துணிவுடன், 'கை எழுத்து வைச்சுத் தராட்டி என்ன பண்ணுவீங்க?'

'நீ உன்ர குடும்பத்தைப் பற்றி யோசிக்கிறேல்லேயா? கை எழுத்து வைச்சுத் தரவேணும். இல்லாட்டி, வேலையில இருந்து நிப்பாட்டி போடுவேன்.'

'ம்ம்ம்... நான் கை எழுத்து வைக்கமாட்டன்...'

'இல்லை நீ கைஎழுத்து வைக்கத்தான் வேணும். இப்ப நீ போ. போயிட்டு ஒரு மணிபோல வந்து கை எழுத்து வைச்சிட்டு கடிதத்தை எடுத்துக் கொண்டு போ.'

'நான் கை எழுத்து வைக்கமாட்டன். என்னால கை எழுத்து வைக்க முடியாது. நீங்க வேலையில் இருந்து நீப்பாட்டினா நிப்பாட்டுங்க.'

நான் இவ்வாறு கூறிவிட்டுப் போய் வேலையைச் செய்தேன். அவர் குறிப்பிட்ட நேரத்திற்கு நான் போய் அவரைச் சந்திக்கவில்லை. வேலை போனாலும் பறுவாய் இல்லை எனவும், இவர் சொல்வது போல எல்லாம் செய்யக்கூடாது எனவும் நான் திடமாக எண்ணிக் கொண்டேன். ஆகவே, நான் அவரைப் போய் சந்திக்காது என் வேலையை செய்து கொண்டு இருந்தேன்.

'வருவேன் வருவேன்' என வெகுநேரம் காத்திருந்த பின்பு கையில் கடிதத்துடன் அவரே வேலை செய்யும் இடத்திற்கு வந்தார். அவர் அங்கு உள்ளே அலுவலக அறைக்குள் சென்று போமனுக்கு ஏதோ கூற அவன் என்னை நோக்கி வந்தான்.

'நமணா முதலாளி உன்ன கூப்பிடுறார்.'

நான் மேலுக்கு கட்டும் உடுப்பைக் கழற்றி வைத்து விட்டு, அலுவலக அறைக்குச் சென்றேன். நான் உள்ளே சென்றதும் கடிதத்தை மேசையில் எடுத்து வைத்து, என்னைப் பார்த்து, 'வா வந்து கையெழுத்து வை.'

'இல்ல நான் வைக்க மாட்டன்.'

'வைக்க மாட்டியா?'

'இல்ல.'

'சரி நீ போ. நான் ரிஜிஸ்டர் போஸ்டில அனுப்புகிறன்.' எனக்கு சிரிப்பு வந்து விட்டது. 'ஏதாவது செய்.' என தோளாலும் கையாலும் நான் சைகை காட்டி விட்டு வந்து என் வேலையைச் செய்தேன்.

இரண்டு நாள் கழித்து வந்திருந்தது. பதிவுத் தபாலில் அந்த எச்சரிக்கைக் கடிதம் வந்திருந்தது. அதில் இது முதலாவது எச்சரிக்கைக் கடிதம் எனவும், அதே வேளை இது திருந்தி நடப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் எனவும் எழுதி இருந்ததே தவிர, வேறு ஒன்றும் பயப்படும் படியாக அதில் எழுதி இருக்கவில்லை. அவர்களுக்கு நான் பயப் படவும் இல்லை. வேலையை நான் பெரிதாக நினைத் திருந்தால் நான் அவர்களுக்கு பயந்திருப்பேன். என்னைப் பொறுத்தளவில் வேலை இல்லாவிட்டாலும் பறுவாய் இல்லை என எண்ணியதால் அவர்களுக்கு பயப்படவில்லை.

இது நடந்து ஒரு மாதமாகிவிட்டது. இந்த ஒரு மாத மும் எந்த வித பிரச்சனையும் இன்றிக். காலம் ஓடி விட்டது. அதை எண்ணும் போது சந்தோஷமாய்த்தான் இருந்தது. ஒரு நாள் தலையைப் பிளப்பது போல் தலைக்குள்ளே இடித்தது.என்னால்மேற்கொண்டு நிற்க இயலாது இருந்தது. வலுக்கட்டாயமாக இன்னும் அரைமணித்தியாலம் நின்று பார்த்தேன். என்னால் தாங்கமுடியவில்லை. எனவே போமனிடம் சென்று தலை இடிப்பதைக் கூறி நான் விடுப்புக் கேட்டேன். அவன் சிறிது யோசித்தான. பின்பு 'கடுமையாக இடிக் குதா?' எனக்கேட்டான். நான் 'ஆம்' என்றேன். அதன் பின்பு 'சரி போ' என விடை தந்தான். அவன் முகத்தில் சந்தேகக்குறி இருப்பதை என்னால் அவதானிக்க முடிந்தது.

வீட்டிற்கு வந்து குளித்து விட்டு சற்று நேரம் தூங்க, தலை இடி நின்று விட்டது. நூல் நிலையத்திற்குச் சென்று புத்தகங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்பது ஞாபகம் வரவே நான் புத்தகங்களை எடுத்துக் கொண்டு நூல் நிலையத்திற்குச் சென்றேன். புத்தகங் களைக் கொடுத்த பின்பு அப்படியே கடைகளுக்கும் சென்றேன். அதன் பின்பு வீட்டிற்கு வந்து விட்டேன்.

அடுத்த நாளும் நான் வேலைக்குப் போகவில்லை. மூன்று நாள்கள் நோய் காரணமாக விடுப்பு எடுத்தால் அதற்கு தொழிற்சாலை சம்பளம் தரவேண்டும். இது இங்குள்ளதோர் சட்டம். எனக்கு வேலைக்குப் போக விருப்பம் இல்லை. மூன்றுநாள்கள் தொடர்ந்து விடுப்பு எடுத்து விட்டு பின்பு வேலைக்கு செல்வோம் என முடிவு செய்தேன்.

முதல் நாள் விடுப்பு எந்தவித பிரச்சனையும் இன்றிக் கழிந்தது. அப்படியே இரண்டாம் நாள் விடுப்பும் கழிந் தது. ஆனால் மூன்றாம் நாள் இப்படி ஒரு பிரச்சனை உருவாகும் என நான் எதிர்பார்த்திருக்கவே இல்லை.

அன்று நான் எட்டு மணிபோல் எழும்பினேன். காலை யில் ரொட்டியைச் சாப்பிட்ட பின்பு சற்று நேரம் இளைப் பாறிவிட்டு, சுமார் ஒன்பதரை மணிபோல் வெளியே கடைக்குச் சென்றேன். இதே வேளை தொழிற்சாலை யில் நான் வேலைக்கு வராமல் நிற்பதை என் முதலாளி யிடம் போமன் கூறினான். அதற்குக் காரணம் என்னை அவன் முதல்நாள் கடைக்குப் போகும்போது கண்டதே! இதைக் கேட்டதும் முதலாளிக்கு கோபம் வந்துவிட்டது. எனவே என்னைத் தேடி எமது இருப்பிடத்திற்கு வந்தி ருக்கின்றார். ஆனால் நான் அப்போது அறைக்குள் இல்லை. எனவே, அங்கு நின்ற சுரேனிடம் கதைத்து விட்டுச் சென்றார். அப்படித்தான் சுரேன் எண்ணிக் கொண்டான். அவர் அலுவலக அறைக்குள் இருந்து எங்கள் வீட்டை பார்த்துக் கொண்டிருந்ததை யாரும் அறியவில்லை.

நான் கடைக்குப் போய்விட்டு வந்து காரை நிறுத்தி விட்டு, கீழே இறங்கி வரவும், முதலாளி என்னை எதிர் கொள்ளவும் சரியாய் இருந்தது.

'நீ ஏன் வேலைக்கு வரல்ல?'

'சுகம்மில்ல அதால வரல்ல.'

'சுகமில்லாட்டி எப்பிடி வெளியால சுத்தி திரிவாய்?'

'சுகமில்லாட்டி வீட்டுக்க இருக்கோணும். அப்பதான் அதுக்கு சம்பளம் தரலாம். இப்பிடி சுகமாய் இருந்து கொண்டு,வெளியால எல்லாம் சுத்தி திரிஞ்சுகொண்டு இருந்தா நான் நிச்சயம் சம்பளம் தரமாட்டன்.'
'எனக்கு சுகமில்ல. அதுக்காக அறையில இருக்கணும் எண்டு சட்டம் இல்ல.'

'சுகம் இல்லாட்டி அறைக்கதான் படுத்திருக்கணும்.' என்னுடன் கதைத்துக் கதைத்து எனது அறைக்கிட்ட வந்து விட்டார்.

'நான் உனக்கு சம்பளம் தரமாட்டன். உனக்கு ஒழுங்கா வேல செய்யக் கஷ்டமாக இருந்தா எங்க யாவது போ. இந்த வீட்ட விட்டுட்டு எங்கயாவது போய்த்துலை...' என்று கோபமாகக் கத்திவிட்டு வெளியேறினார்.

எனக்குத் திகைப்பாய் இருந்தது. நான் செய்ததுதான் தப்போ எனக்கேள்வி என்னுள் எழுந்தது. சிறிதுநேரம் ஸ்தம்பித்துப் போய் அப்படியே எனது அறைக்குள் அமர்ந்தேன். பின்பு வேலை அலுவலகத்திற்கு சென்று கதைத்துப் பார்ப்போம் எனத் தோன்ற அதை நடை முறைப்படுத்தினேன்.

வேலை அலுவலகத்திற்கு சென்று ஹலோ என விளித்தேன்.

'ஹலோ உங்களுக்கு என்ன வேணும்?' என்று அங்கே இருந்த அலுவலகர் கேட்டார்.

'எனக்கு ஒரு விசயம் தெரியணும்...'
'என்ன விசயம்?'

'நான் தொடர்ந்து ஒரு வருஷத்திற்கு மேல பக்றியில வேல செய்திட்டன். ஒரே ஒரு முறை லீவு எடுத்திருக் கிறன். இப்ப இரண்டாம் முறை நான் லீவு எடுத்த னான். ஆனா முதலாளி வந்து பேசிட்டுப் போறார்.

வருத்தம் எண்டு ரூமில படுத்தாத்தானாம் சம்பளம் தருவாராம். நோர்வே சட்டங்களைப்பற்றி எனக்குத் தெரியாது. நீங்கதான் விசயத்தில உதவ வேணும். சுகமில்லாட்டி ரூமில கட்டாயம் படுத்திருக்கணுமா?'
'இல்ல; அப்பிடி இல்ல. இப்பிடி ஒரு முதலாளியும் சொல்ல மாட்டான். இவன் செய்பிறது பிழை.'
'நீங்க அவரிட்ட இதைப் பற்றி கேளுங்க.'
'அது மாத்திரம் முடியாது.'
'ஏன்?'
'சட்டப்படி இதை விசாரிக்க அனுமதி இல்ல.'
'அப்ப என்ன செய்யலாம்?'
'வேலைப் பரிசீலனை அலுவலகத்தோட கதையுங்க.'
'டெலிபோன் நம்பர் தருவீங்களா?'
'தாராளமா.'

தொலைபேசி எண்ணை எடுத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தேன். என்ன செய்வது புரியவில்லை. சும்மா இருக்கவும் மனம் வரவில்லை. என்ன செய்வது எனத் தெரியாத வேளையில் தலை வெடிக்கும் போல... என்னால் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் நிம்மதியாக இருக்க முடியாது. எங்கேயாவது கொண்டு போய்த் தலையை முட்டினால் நல்லது போலத் தோன் றும். எனக்கு இப்படி ஒரு உணர்ச்சி தோன்றுவது வழமையாகி விட்டது!

அடுத்த நாள் நான் தொழிற்சாலைக்குச் சென்றேன். எனக்குச் சம்பளம் வரவேண்டும். அது போமனுக்குத் தெரியும். என்னிடம் வந்து 'ஏக்கமெல்லிங் எடுக்கப் போறியா?' என்று கேட்டான்.

'ஓ நிச்சயமா.'

'ஓ கே...' எனக்கூறியபின் படிவத்தைத் தந்தான். நான் படிவத்தை இடைவேளையின் போது நிரப்பி னேன். போமன் அதை எடுக்கொண்டு போனான்.

பிரச்சனை முடிந்துவிட்டது என்று தான் நான் எண்ணி னேன். ஆனால், அது அத்தோடு முடியவில்லை என்பது ஒன்றரை மணிபோல் தான் எனக்குத் தெரிந்தது.

முதலாளி வந்தார். என்னை அலுவலகத்திற்குள் வரு மாறு கூறினார். இது ஏக்கமெல்லிங் பிரச்சனையாகத் தான் இருக்குமென விளங்கியது. என்ன சொல்கிறான் என்பதை அறியும் ஆர்வத்தில் உள்ளே சென்றேன்.

'உனக்கு ஏக்கமெல்லிங் இல்ல' எனக் கோபமாகக் கூறி தான் கொண்டு வந்த எனது விண்ணப்பப் பத்திரத்தை. கிழித்துக் குப்பைத் தொட்டிக்குள் போட்டார். சீ, போட் டான்! அவனுக்கு இனி மரியாதை எல்லாம் கொடுக்கத் தேவையில்லை.

'இல்ல, நீ எனக்கு சம்பளம் தரணும். நான் ஏற்கனவே ஆர்பைட் கந்தோரில கதைச்சனான். இந்தச் சம்பளம் தராட்டி திரும்பவும் ஆர்பைட்தில் சீனோட கதைப்பன். 'எங்க வேணுமானாலும் கதை. ஆனா, நான் உனக்கு லீவுக்கு சம்பளம் தரமுடியாது!'

என்னவாம், ஏதாம் எனக் கேட்க, 'கல்வத்த சாத் தான்!' திட்டிக் கொண்டே வெளியே வந்தேன்.

நான் அவர்களுக்கு சற்று உரத்த குரலிலேயே பதிலளித் தேன். இது முதலாளிக்கு பிடிக்கவில்லை.

வெளியே வந்து, 'இங்க நிண்டு சத்தம் போடாதே!' என்று கூறி விட்டுச் சென்றான்.

சத்தம் போட்டால் அவன் செய்யும் தில்லு முல்லுகள் இங்கு வேலை செய்யும் நோர்வே மக்களுக்குத் தெரிந்து விடும் என்கின்ற பயம். எனக்கு மிகவும் கோபம் வந்தது. ஒருவாறு என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு அன்றய வேலையைச் செய்து முடித்தேன்.

அடுத்த நாள் காலை நீண்ட மனப்போராட்டத்திற்குப் பின்புதான் நான் வேலைக்குச் சென்றேன். இன்று

இடைவேளையின்போது ஆர்பைட்தில்சீனுடன் கதைப் பது என முடிவு செய்து கொண்ட பின்பே வேலைக்குச் சென்றேன்.

இடைவேளை.அறைக்கு வந்தேன்.வந்த எனக்கு என்ன செய்வதெனப் புரியவில்லை. அறைக்குள் இருக்க முடிய வில்லை. அறைக்குள் இருந்தால் இந்தப் பிரச்சனைக்கு தீர்வு ஏற்படாது என்பது எனக்குத் தெரியும். மீண்டும் மீண்டும் என்ன செய்வது என்னும் கேள்வி என்னுள் எழு வது எனக்கு எரிச்சலையே ஏற்படுத்தியது. கீழே போனால் போன் பண்ணி அந்த வேலைப் பரிசீலனை அலுவலகத்துடன் கதைத்தால் என்ன? அதுதான் சரி எனப்பட்டது. கீழே இறங்கிச் சென்றேன்.

இணைப்புக் கிடைத்ததும் தொலைபேசி மறுமுனை யிலும் உயிர்ப்புப் பெற்றது.

'ஹலோ?'

''ஹலோ என் பெயர் ராகவன் றமணன். நான் கிறீனா பிஸக்கில வேலை செய்யிறன். நான் ஒரு வருடத்திற்கு மேல வேலை செய்திருக்கிறன். ஆனா ஒரு முறை தான் நான் ஏக்கமெல்லிங் எடுத்திருக் கிறன். இப்ப இரண்டாவது முறை எடுத்தனான். இருந்தும் அந்த ஏக்கமெல்லிங் தரமுடியாதெண்டு முதலாளி சொல்லுறார். ஏக்க மெல்லிங்கெண்டா ரூமிலேயே இருக்கணுமாம். அவர் செல்றது சரியா?

'ஏக்கமெல்லிங் கெண்டா சுகமில்லாமல் இருக்கணும்.'

'எனக்குத் தோள் மூட்டுவலி என்னைப் பொறுத்தள வில நான் சுகமில்லாதது போலத் தான் உணருறன். இதுக்கும் டொக்ரர் சேட்பிக்கற் வேணுமா?'

'இல்ல, நீங்க சொல்லுற காரணம் இதுக்குப் போதும்.'

'ஆனா அவர் தர மறுக்கிறார்...'

'இது அநியாயம்தான்.'

'நீங்க வரமுடியாதா? வந்து அவரோட கதைக்க முடியாதா?'

'ம்... எனக்கு இப்ப நேரம் இல்லை...'

'அப்ப போன்ல கதைக்கலாமே?'

'இல்ல, நான் நேரில வாறன். இன்னும் இரண்டு கிழமையில நான் உங்கட இடத்திற்கு வருவேன். அப்ப நான் விபரமா இதைப்பற்றிக் கதைக்கிறன்.'

'ஓகே... காத.'

'காத.'

நான் போனை வைத்து விட்டு வெளியே வரும்போது நிம்மதியாய் இருந்தது. அந்த அலுவலகர் வந்து எனது பிரச்சனையைத் தீர்த்து எனக்குச் சேரவேண்டிய பணத்தையும் பெற்றுத் தருவார் என எண்ணினேன். என் நம்பிக்கை நிறைவேற வில்லை. அந்த அலுவலகர் குறிப்பிட்ட தினத்தில் இங்கு வரவில்லை. இது எனக்கு பெரும் ஏமாற்றத்தையும், அந்த அலுவலகர்மீது அவநம்பிக்கையையும் ஏற்படுத்தியது.

நான் சும்மா இருக்கவில்லை. மீண்டும் ஒருமுறை போன் செய்தேன். நல்ல வேளையாக அவருடன் கதைக்க முடிந்தது. அவர் தான் விடுமுறைக்காக சென்றதாகவும், தற்போதுதான் விடுமுறையில் இருந்து வந்திருப்பதாகவும், இப்போது தனக்கு நிறைய அலுவல் இருப்பதாகவும், இன்னும் இரண்டு வாரம் கழித்து வந்து இந்த விடயத்தைப்பற்றி கதைப்பதாகவும் கூறினார்.

நான் நம்பிக்கையை மீண்டும் வரவழைத்துக் கொண்டு அவர் கூறிய நாளுக்காகக் காத்திருந்தேன். அந்த நாள் வந்தது. ஆனால், அந்த அலுவலகர் மாத்திரம் வரவே இல்லை. நம்பிக்கை என்னைவிட்டு முற்றுமாய் அகன்றது. மீண்டும் அந்த அலுவலகருடன் கதைப்பதற்கு மனம் வரவில்லை. அந்த விடுப்பைக்கூட எடுக்க முடியாமல் தொடர்ந்தும் இதே தொழிற்சாலையில் வேலை

செய்யவும் பிடிக்கவில்லை. மனசு தவித்தது. எங்கே யாவது சென்று விடவேண்டும் எனத் தவித்தது.

வேறு இடத்தில் வேலை எடுப்பது என்பது குதிரைக் கொம்பு. நான் பல இடங்களில் முயன்றேன். பலன் கிடைக்கவில்லை. என்ன காரணம் எனச் சிந்திக்கப் போனால் மனம் ரணமாகும். வாழ்க்கையே வெறுத்தது போலத் தோன்றும். படிந்திருந்தால்கூட ஓரளவிற்கு நன்றாய் இருக்கும். அதுகூட என்னிடம் அரைகுறையாக இருப்பது என்மீது எனக்கே வெறுப்பை ஏற்படுத்தியது. ஒன்றும் செய்ய முடியாத நிலையில் மிகுந்த சிரமப்பட்டு மனதைக் கட்டுப்படுத்திக் காலத்தைத் தள்ளினேன்.

மனசுக்குப் பிடிக்காவிட்டால், அதைத்தவிர்க்கவேண்டும். எனக்கும் இந்த இடத்தை, இந்த வேலையைத் தவிர்த்து விட ஆசை தான். ஆனால் முடியவில்லை. இதை விட்டு விட்டால் எங்கும் இல்லை என்கின்ற நிலைமை. எங்கள் மீது மட்டுமே நினைத்த சட்டங்களை போட்டு எம்மை அடிமைப்படுத்துவது எனக்குப் புரிகிறது. என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆகக்குறைந்தது இந்த வேலையை விட்டாவது விலக முடியவில்லை. எப்போது இதற்கு விடிவு?

3

மாதம் இரண்டு கடந்தது. கோடை காலம் மாறிக் குளிர் காலம் தொடங்கியது. முழு ஆடைகள் அணிந்தும் தாங்காத அரக்கத்தனமான குளிர் இது. குளிர் ஒரு பக்கம். இருள் மறுபக்கம். இரண்டும் இம்சைப் படுத்துவதாகவே இருந்தது. காலை இருட்டிலே வேலைக்குச் சென்று, மாலை இருட்டிலே வீடு திரும்புகின்ற நிலமை.

எனக்கு அலுத்து விட்டது. நாலைந்து வருடமாக இதையே செய்து செய்து அலுத்துவிட்டது... எங்காவது ஏதாவது வித்தியாசமாக இருந்தால் நல்லாய் இருக்கும் போலத் தோன்றியது. 'என்ன செய்வது? எங்கே போவது?' எனப் புலப்படவில்லை. ஏற்கனவே எனக்கு வெறுப்பு. இந்தத் தொழிற்சாலையில் அடிமை போல வேலை செய்ய வேண்டியுள்ளதே என்னும் வெறுப்பு. அத்தோடு எனக்கு இந்தக் குளிரும் இருட்டும் பிடிப்பதே இல்லை. எங்காவது செல்லவேண்டும் என எண்ணிப் பல மாதங்களாகி விட்டன. சந்தர்ப்பம் சரியாய் அமைய வில்லை. சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்தேன். இப்படி நான் காத்துக் கொண்டிருக்கும் போதுதான் அது நடந்தது.

ருஷியாவில் இருந்து உற்பத்திப் பொருள்—மீன்—வர வில்லை. விலைப் பிரச்சனையால் அவர்கள் உற்பத்திப் பொருள் அனுப்புவதை நிறுத்தி விட்டார்கள். எனக்கு வேலை இல்லை. எனக்கு மாத்திரமா? இந்த நகரத்தில் இருக்கும் கால்வாசி மக்களுக்கு வேலை இல்லை.

வேலை இருக்கும்போது அதன் அருமை தெரிவதில்லை. அது இல்லாத போதுதான் அதன் அருமை தெரிந்தது. வீட்டில் சும்மாய் இருப்பது தொடக்கத்தில் சில நாள் களுக்கு இனித்தது. ஆனால், அது நீடிக்கவில்லை. வேலையில்லாமல் இருக்க இருக்கவே அதன் அவஸ்தை புரியத் தொடங்கியது. அப்போதுதான் எனக்கு எல்லாப் பிரச்சனைகளிலும் இருந்து தப்பிக்க ஒரு வழிதெரிந்தது. வேலை இல்லாவிட்டால் அவர்கள் தரும் அட்டையை நிரப்பிக் கொடுக்க வேண்டும். நான் அந்த அட்டையை நிரப்பிக் கொடுப்பதற்காகச் சென்றேன். அட்டையைக் கொடுத்துவிட்டு புது அட்டையைப் பெற்றுக் கொண் டேன். அட்டையைப் பெற்றுக் கொண்டபின் நான் வழமையாகச் செய்யும் வேலையைச் செய்தேன். அங்கு வந் திருக்கும் புதிய வேலைகளுக்கான விளம்பரத்தை ஒரு

முறை மேய்ந்தேன். அதிலே வேலைக்கான விளம்பரங் கள் சில என் மாவட்டத்திலும் இருந்தன. பல வெளியூர் களிலும் இருந்தன.

பொதுத் தொலை பேசி நிலையத்திற்குச் சென்று பச்சை இணைப்பு எனப்படும் வேலை தேடுவதற்கான இலவச தொலைபேசி இணைப்பில் கதைத்து விபரங்கள் அறிந் தேன். அந்த விபரத்தை அடிப்படையாக வைத்து ஒரு ஹொட்டேலுக்கு தொலைபேசில் கதைத்தேன். வேலை இருப்பது உறுதியாயிற்று. அவர்கள் அனுபவம் உண்டா எனக்கேட்டார்கள். எனக்கு எப்படித்தான் வந்ததோ அந்தப் பெயர்? 'ஆம்' என்று கூறினேன். அவர்கள் நேரடித் தேர்வுக்கு வருமாறு கூறினார்கள். அத்தோடு ஒரு விண்ணப்பமும் தபாலில் அனுப்பி வைக்குமாறும் கூறினார்கள்.

எனக்கு எல்லை மீறிய சந்தோஷம். ஆனால், நான் யாரிடமும் இதைப் பற்றிக் கூறவில்லை. சில வேளை இவர்கள் கெடுத்து விடுவார்களோ என்னும் பயத்தால் கூறவில்லை. இரகசியமாகவே எல்லா ஏற்பாடுகளும் செய்தேன். ஒஸ்லோவில் இருக்கும் நண்பனுக்கு மாத் திரம் நான் வரும் தகவலை அறிவித்தேன்.

அத்தோடு எனது நண்பனைக் கொண்டு ஒரு தில்லு முல்லுப் பண்ணினேன். இல்லாவிட்டால், இந்த வேலை யில் சேரமுடியாது என்பது எனக்குத் திட்டவட்டமாய்த் தெரியும். ஒன்றும் செய்ய முடியாத கட்டத்திலேதான் அதைச் செய்வித்தேன்.

எனக்கு ஒரே படபடப்பாய் இருந்தது. நான் ஒஸ்லோ போகும் விடயம் எவருக்கும் தெரியாது. அதனால் நிம் மதி இல்லாமல் இருந்தது. இவ்வளவு பழகிய பின்பு ஒருவருக்குக்கூட சொல்லாமல் கொள்ளாமல் போவது மனசுக்குச் சங்கடமாய் இருந்தது. கடைசியாக விக்கி யைச்சந்தித்து உண்மையைக் கூறினேன். அவனுக்கு இது ஆச்சரியத்தைத் தந்தது. அவன் முகமே அதைக்

காட்டிக் கொடுத்தது. 'ஏன்டா இவ்வளவு நாளும் சொல்லல்ல' எனக் குறைப்பட்டுக் கொண்டான். அவனைச் சமாதானம் செய்து, நான் சென்ற பின்பே மற்றவர்களுக்குத் தெரிவிக்கும்படி சொன்னேன். ஒரு வகைச் சுதந்திர உணர்ச்சியுடன் விமான நிலையத்தை அடைந்தேன்.

விமான நிலையத்தில் என்னைத் தவிர்த்து வேறு எந்த தமிழரும் இருக்கவில்லை. அது என் மனசுக்கு நிம்மதியைத் தந்தது. மனம் ஏனோ எனது சக நண்பர்களைக் காண அஞ்சியது. கள்ளன் போல் ஒளித்து ஓடச் சொல்லியது. தனியாக இருந்து இப்பொழுது சிந்திக்கும்போது தான் என் செய்கை எனக்கே வெட்கத்தைத் தந்தது. வெளியே பனி கொட்டியது. கொட்டுபனி நிலத்தில் விழவில்லை. காற்று அதனை அள்ளிக் கொண்டு சென்றது. காற்றைப் பார்க்கும்போது பயமாக இருந்தது. இந்தக் காற்றில் விமானம் என்ன ஆட்டம் ஆடும் என்பதில் எனக்கு முன்னனுபவம் உண்டு. எனவே காற்றைப் பார்க்க பயமாக இருந்தது. சீ, ஏன் என் மனம் இப்படி சின்னச் சின்ன விடயத்திற்கெல்லாம் பயப்படுகின்றது? என் மீதே எனக்கு அனுதாபம் பிறந்தது.

கூட்டம் கூடியது. ஒரு சிலர் தங்களது பயணச் சீட்டை சரி பார்த்துக் கொண்டனர். இதற்குப் பின்பும் நான் சும்மா இருக்க விரும்பவில்லை. எனவே;எழுந்து சென்று என் பயணச் சீட்டை நீட்டினேன். கவுண்டரில் இருந்த பெண்மணி மிகவும் நளினமாகவே நான் நீட்டிய பயணச் சீட்டை எடுத்துப் பார்த்தாள். அவளின் வதனத்தில் புன்னகை பூத்திருந்தது. கண்களைப் பார்க்க என் நெஞ்சிற்குள் ஏதோ செய்தது. என் ஏக்கங்களை—என் உணர்சிகளை—ஏன் இப்படி அலைபாய விடுகின்றேன்? என்னால் இவற்றைக் கட்டுப்படுத்த முடியாதா? மற்றவர்களும் என்னைப் போலதானே வாழ்கின்றனர்? அவர்களால் கட்டுப்படுத்த் முடிந்த இந்த உணர்ச்சிகளை என்னால் ஏன் கட்டுப்படுத்த முடியவில்லை?

மீண்டும் மீண்டும் என்னை நானே கேள்வியால் துளைத்தேன். விடைகள் கிடைக்கவும் இல்லை...விபரம் புரியவும் இல்லை.

'யா.எல்லாம் சரியாஇருக்கு...வசகு'.(வசகு பெற்றுக் கொள்ளுங்கள்.) இந்தக் குரல்தான் என்னை மீண்டும் உலகிற்கு கொண்டு வந்தது.

'ம்... ரொம்ப நன்றி.'

பயணச் சீட்டை எடுத்துக் கொண்டு மீண்டும் என் இடத்தில் போய் அமர்ந்தேன். அவள் குரலின் இனிமை மீண்டும் ஒரு முறை அவளைப் பார்க்கத் தூண்டியது. அவளைப் பார்த்தேன். அவள் வேறொருவரின் பயணச்சீட்டை சரி செய்வதில் மிகவும் அக்கறையாக இருந்தாள். என் மனசில்தான் அவளைப்பற்றிய நினைவுகள் ஓடிக்கொண்டு இருந்தன. அவள் மனசில் அப்படி எதுவும் இருக்காது. அவள் நித்தமும் இப்படிப் பலபேரிடம் பழகுபவள். அதைவிட இவர்களின் காதல், கலவி அதை அணுகும்முறை எல்லாம் தனிவிதமானவை. சாதாரண நேரங்களில் இதைப் பற்றி இவர்கள் சிந்திப்பது மிகவும் குறைவு. இவர்களைப் பொறுத்தளவில் காதல் என்பது மிகவும் குறைவு. கலவி என்பது மிகவும் தாராளம். அப்படிக் கலவியை அனுபவித்த இவர்களுக்கு கலவி ஒரு பெரிய சங்கதியாக மனசில் தோன்றாது.

நாங்கள்? எங்களுக்கு இது பெரிய விஷயம். ஆம்;கிடைக்காதபோது அதுவே பெரிய விஷயம்! எனக்கும் இந்தக் காதலில் அவ்வளவு நம்பிக்கை இல்லை. ஆனால், கலவியிலே ஏக்கம். பெண் சுகத்திற்கான ஏக்கம்!ஒரு பொருள் கிடைக்காமல் போகப்போக மனம் எப்படி அதைப்பற்றி அதிகமாக ஏங்கத் தொடங்குகின்றது? இடத்தை விட்டு போவதற்கு இந்த ஏக்கமும் ஓர் உந்துவிசை.

எனது சிந்தனைகள் இடையறுந்தன. விமானம் புறப்படத் தயாராகிவிட்டது. ஒஸ்லோவை விமானம் சென்ற

டைந்தபோது பிற்பகல் நாலு மணியாகிவிட்டது. விமான நிலையம் வழமைபோல் பரபரப்பாயே இருந்தது. பயணிகள் தங்கள் தங்கள் அலுவல்களில் மிகவும் அக்கறையாக இருந்தனர். நான் உள்நாட்டுப் பயணியாதலால் எனக்கு எந்தவித சுணக்கமும் ஏற்படவில்லை. நான் பணம் எடுப்பதற்காக கீழ்த் தளத்திற்கு சென்றேன்.

குட்டி வங்கி ஒன்று அங்கே இருந்தது. நான் சென்று எனது விசாக்காட்டைக் காட்டி எழுநூறு குறோனர்களைப் பெற்றுக் கொண்டேன். இனி மேல்தளத்திற்குச் சென்று அங்கிருந்து வாடகை வண்டியில் மத்திய புகையிரத நிலையத்திற்கு செல்ல வேண்டும்.

பணத்தை பேர்ஸுக்குள் வைத்து, நிமிர்ந்து பார்க்கும் போதுதான், அந்த நோர்வே நாட்டு சோடி, வெளிநாட்டிலிருந்து வரும் பயணிகள் இந்த நாட்டுக்குள் வரும் பாதையால் வந்தனர். அவர்களின் வதனங்களில் அளவிடமுடியாத சந்தோஷம். பேச்சும் சிரிப்புமாய் வெளியே வந்து அப்படியே மேலே சென்றனர்...

நானும் அவர்களைத் தொடர்ந்து சென்றேன். மேலே சென்றால்தான் வாடகை வண்டி பிடிக்கமுடியும். மேலே சென்ற அவர்கள் வெளியே செல்லவில்லை. அங்குள்ள கழிப்பறைக்குச் சென்று விட்டனர். நான் வெளியே போக எத்தனித்தேன். அப்போதுதான் காவல் துறை வண்டி பெரும் சத்தத்துடன் வந்து நின்றது.

அதில் இருந்து இறங்கிய காவலர்கள் சொல்லி வைத்ததுபோல் அந்தக் கழிப்பறைக்குச் சென்றனர். நான் நகரவில்லை. 'விடுப்புப் பார்க்கலாமே' என்னும் எண்ணத்துடன் அங்கு மேற்கொண்டும் நின்றேன். உள்ளே சென்ற காவலர்கள் திரும்பி வந்தனர். என்ன ஆச்சரியம்? சற்று நேரத்திற்கு முன்பு சென்ற அந்தச் சோடியைக் காவலர்கள் கைது செய்திருந்தார்கள்.

அவர்கள் முகத்தில் ஆயிரம் அதிர்ச்சிக் கோடுகள். எப்படி மலர்ந்துஇருந்த முகம் இப்படிவாடிவிட்டதே! அவர்களை

இரு காவலர்கள் அழைத்துச் சென்றனர். இன்னொரு காவலர் இரண்டு வெள்ளைப் பொதிகளை அவர்கள் பையில் இருந்து எடுத்துப் பார்த்து அதைப் பத்திரப் படுத்தி எடுத்துச் சென்றார்.

எனக்கு இந்தச் சம்பவம் பிரமிப்பாகவும், அதிர்ச்சியாகவும், சற்றுக் கவலையாகவும் இருந்தது. எப்படி இது சாத்தியம்? இவர்களின் உளவுத்துறை ஒழுங்காக வேலை செய்கிறது என்பதை இந்தச் சம்பவம் எனக்கு உறுதிப் படுத்தியது. இப்போது நான் பார்த்தது ஒஸ்லோவில் நடக்கின்ற ஒரு சாதாரண நிகழ்ச்சி. இங்கு தொடர்ந்து வாசிக்கும்போது எவ்வளவு வியப்பான நிகழ்ச்சிகளைச் சந்திக்க நேரிடும் என எண்ணும்போது எனக்குள் ஒரு வித பயம் தோன்றி மறைந்தது.

நான் மத்திய புகையிரத நிலையத்திற்கு வந்து சேர்ந்தேன். வாடகை வண்டியில் வர இருந்த எண்ணத்தை சாஸ்பேருந்தைக் கண்டதும் மாற்றிக் கொண்டேன். பணத்தை மிச்சம் பிடிப்பதில் எனக்கும் ஆசையுண்டு. எனவே, சாஸ்பேருந்தில் மத்திய புகையிரத நிலையத்திற்கு வந்து சேர்ந்தேன். புகையிரத நிலையத்திற்குள் ஒரே கூட்டம். ஒரு உலகத்தையே இந்தப் புகையிரத நிலையத்துக்குள் காணக் கூடியதாக இருந்தது. உலகத்தில் உள்ள ஒவ்வொரு இனமக்களும் இங்கு வசிக்கின்றனர் என்பதிற்கு இந்த புகையிரத நிலையமே சாட்சி. இங்கு வந்த பின்புதான் நந்தனுக்கு போன் பண்ணுவதாய் எண்ணி இருந்தேன். தோள்பையுடன் பொதுத் தொலைபேசிகள் இருக்கு மிடத்திற்கு சென்றேன்.

ஒவ்வொருதொலைபேசியும்ஒவ்வொருவரால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. நான் சற்றுக் காத்திருந்தேன். ஒரு தொலைபேசியில் பெண்ணொருத்தி கதைத்துக்கொண்டு இருந்தாள். அவளின் உருவந்தைப் பார்த்தால் அவள் இலங்கை அல்லது இந்தியாவைச் சேர்ந்தவளாக இருக்க

வேண்டும் எனத் தோன்றியது. அவளுடன் கதைக்க முடியாது. அறிமுகம் இல்லாமல் கதைக்க முடியாது. அதை மீறிக் கதைத்தாலும், அவள் பதில் அளிப்பாளா என்பதும் சந்தேகம்தான். நான் எண்ணங்களில் மூழ்கி இருக்கும்போதே அவள் கதைத்து முடித்துவிட்டாள். அந்த தொலைபேசியை நோக்கி செல்லும்போது என் கண்கள் அவள் கண்களை ஒரு முறை சந்தித்தன. நான் சொக்கித்தான் போய் விட்டேன். இத்தனைக்கும் அவள் பெரிய அழகிகூட இல்லை. என் மனம் ஏனோ கண்ட கண்ட இடத்தில் எல்லாம் அலை பாய்ந்து கொண்டே இருந்தது. மனிதத் தோல் மட்டுமே போர்த்திய ஒரு பெண்ணுடலை நாடி என் மனசு அலைந்தது.

நந்தன் ஒன்பது மணிக்கு வருவதாய்ப் போனில் கூறினான். அதற்கு முன்பு அவன் வீட்டிற்குசெல்வது பிரயோசனம் இல்லை. அங்கே போய் வெளியே நிற்க முடியாது. அதே வேளை இங்கேயும் இந்தப் பையுடன் எங்கெல்லாம் அலைவது? பையை லாக்கருக்குள் வைத்துப் பூட்டிவிட்டுச் சாவியுடன் வெளியே வந்தேன். ஒஸ்லோ குளிரில் மூழ்கியிருந்தது. ஆனாலும் அழகாய் இருந்தது. குளிர் மாத்திரம் இல்லாவிட்டால் படிக்கட்டுகளில் இருந்து நண்பர்களுடன் அரட்டை அடித்தால் ரம்மியமாகவும் இருக்கும். இந்தக் குளிர்தான் எல்லாவற்றையும் கெடுக்கின்றது!

மீண்டும் திரும்பிப் புகையிரத நிலையத்திற்கேவந்தேன். சும்மா இருக்க அலுத்தது. பக்கத்தில் உள்ள சொஸ்க்கிற்கு (பெட்டிக்கடைக்கு) சென்று அங்குள்ள வாரப் பத்திரிகைகளைப் பார்த்தேன். அநேகமானவை நான் ஏற்கனவே பார்த்தவையே! ஒன்று மாத்திரம் புதிதாய் இருந்தது. அதன் பெயர் கொன்தாக் (தொடர்பு). அதன் விலை அதிகம். எண்பத்தைந்து குறோனர்கள். புத்தகத்தை எடுத்துப் பார்த்தேன். புத்தகம் மாத்திரம்

பளபளப்பாக இருக்கவில்லை. உள்ளுக்குள் இருந்த கலர் படங்களும் பளபளப்பாய் இருந்தன. அவையாவும் நிர்வாணப் படங்கள். நான் ஒரு புத்தகத்தை வாங்கி என் ஜக்கெற்றுக்குள் பத்திரப்படுத்திக் கொண்டேன். பின்பு நந்தன் வருவதற்கு முன்பாகவே அந்தப் புத்தகத்தை எனது பைக்குள் பத்திரப்படுத்தினேன். நந்தன் ஒன்பது மணிக்கு வந்து என்னைக் கூட்டிக்கொண்டு சென்றான்.

வேலையும் சுலபமாகவே கிடைத்து விட்டது. இதை என்னாலேயே நம்ப முடிய வில்லை. அதற்கு ஒரு பெரும் பொய் உதவி இருக்கின்றது. இப்போது நான் நந்தன் வீட்டில் ஒருவனாகினேன். நந்தன் வந்து ரொட்டியைச் சாப்பிட்டுவிட்டு பின்னேர வேலைக்குச் சென்றான். அவனைப் பார்க்கப் பரிதாபமாய் இருந்தது. நந்தனின் பலவீனமே பணம்தான். ஒவ்வொரு மனிதனுக்கு ஒவ்வொரு பலவீனம். நந்தனுக்குப் பணப் பலவீனம். எனக்கு? உண்மையைச் சொன்னால் நான் பெண் சுகத்திற்காய் அலைபவன். இது பலவீனமா?

நான் சமைத்தேன். சமைத்து முடித்து சாப்பிட்ட போது ஐந்து மணி. நந்தன் வருவதற்கு ஒன்பது மணியாகும். என்ன செய்வது? தொலைக் காட்சியை இயக்கினேன், நல்ல படம் ஒன்றும் இல்லை. சீ...அலுப்படித்தது. தொலைக் காட்சியை நிறுத்திவிட்டு, கண்களை மூடிய வண்ணம் இருந்தேன்.

இப்படி நான் கண்ணை மூடிச் சிந்திக்கும்போதுதான் அதன் ஞாபகம் வந்தது. நான் கண்மூடிச் சிந்தித்ததால் ஏற்பட்ட ஞாபகமும் கண்மூடித்தனமாய் வந்தது ஞாபகம் வந்தவுடனேயே எழுந்து சென்றேன். என் பையை எடுத்துப் பிரித்தேன். உள்ளே எனது உடுப்புகளுக்கு கீழே அது இருந்தது.

ஒன்று மறுக்கப்படும்போது அல்லது கிடைக்காதபோது அதைச் செய்வதில்தான் எவ்வளவு ஆர்வம்? எவ்வளவு

விருப்பம்? எவ்வளவு பதட்டம்? இவை எல்லாம் என்னிடம் இப்போது குடிகொண்டுள்ளது. நான் மிகவும் ஆர்வத்துடன் அந்தப் புத்தகத்தை பிரித்துப் படிக்கத் தொடங்கினேன். உள்ளே பல போட்டோக்கள். தங்களைத் தாங்களே விளம்பரப்படுத்தும் நிர்வாணப் போட்டோக்கள்! பார்க்கும்போதே எனக்கு சூடேறியது. மேற்கொண்டு ஒவ்வொரு பக்கமாய்ப் பார்த்துப் பார்த்து வாசித்துக் கொண்டு போனேன்; புத்தகம் முழுவதும் நிர்வாணப்படங்கள். பார்க்கப் பார்க்க எனக்கு என்னவோ போல் இருந்தது. நான் சாதாரண மனிதன் தானே? என்னால் முடியவில்லை. அந்தப் படங்களைப் பார்க்கப் பார்க்க உடம்பு ஏதோ ஒருவித வேதனையை அனுபவிக்கத் தொடங்கியது.

புத்தகத்தில் விளம்பரங்கள்... ஆம்; அந்தத் தொழிலுக்கு விளம்பரங்கள் வெகு விமரிசையாகவே போடப்பட்டிருந்தது. சுருங்கச் சொன்னால் 'மாமா' வேலையை இந்தப் புத்தகம் நேர்த்தியாகப் பார்த்தது. மேல் அட்டையிலேயே வருமாறு போடப்பட்டிருந்தன. தொலைபேசி விளம்பரம், படவிளம்பரம், எண் விளம்பரம். நான் ஒவ்வொரு பக்கமாய்ப் பார்த்துச் சென்றேன். எங்கே அந்த தொலைபேசி விளம்பரம் இருக்கின்றது என ஆவலாகப் பார்த்தேன்.

ஒவ்வொரு பெண்ணின் நிர்வாணப் படத்திற்குக் கீழே அவர்களைப் பற்றி அவர்களே எழுதி இருந்தார்கள். எந்த நேரங்களுக்கிடையில் போன் பண்ணவேண்டும் எனவும் போட்டிருந்தது. சிலவற்றில் வெளிநாட்டவருக்கு அனுமதி இல்லை எனவும் எழுதி இருந்தது.

ஒவ்வொரு பெண்ணும் அழகாகவே இருந்தாள். கட்டான உடல்கள். ஊழைச் சதை பிடித்திருக்கவில்லை. மார்பு தொங்கவில்லை. செதுக்கி வைத்தன போல இருந்தன. நான் சில விளம்பரங்களை வாசித்தேன். அதில் மத்திய

புகையிரத நிலையத்திற்குப் பக்கத்தில் தங்கள் வீடு இருப்பதாகவும், வீட்டிற்கே வரலாம் எனவும் போடப்பட்டிருந்தது. அப்படி மத்திய புகையிரத நிலையத்திற்குப் பக்கத்தில் உள்ள மூன்று பெண்களின் எண்களை எழுதி எடுத்துக் கொண்டேன். பின்பு புத்தகத்தை பையில் பத்திரப்படுத்தி வைத்தேன்.

வீட்டில் தொலைபேசி இல்லை. வீட்டைப் பூட்டிக் கொண்டு வெளியே சென்றேன். எங்கள் வீட்டில் இருந்து நூறு மீட்டர் தொலைவில் ஒரு பொதுத் தொலைபேசி 'பூத்' இருந்தது.

'பூத்' வெறுமையாக இருந்தது. கொண்டு வந்த எண்களில் ஒன்றை 'அடித்து'ப்பார்த்தேன். அவள் வீட்டிலே இல்லை. தான் வீட்டில் இல்லை எனவும் பத்து மணிக்குப் பின்பு மீண்டும் முயற்சிக்கவும் எனவும் அவளின் தொலைபேசிப் பதிவு கூறியது. நான் அடுத்த எண்ணை அழுத்தினேன். அது ஒரு துண்டிக்கப்பட்ட எண். எனக்கு சற்றுச் சலிப்பாய் இருந்தது. மனசைத் தளரவிடாது அடுத்த எண்ணை முயன்றேன். எனக்கு கேட்டது. ஆம் ஒரு பெண்ணின் மென்மையான குரல் தொலைபேசியில் கேட்டது.

'ஹலோ?'

'ஹலோ என் பெயர் ரமணன். நான் இலங்கைக்காரன். நான் உன்னுடைய நம்பர 'கொன்தாக்' என்ற புத்தகத்தில இருந்து எடுத்தனான். நீ இப்ப ஃபிறியா இருக்கிறியா?'

'ம்... நீ வா உனக்காக நான் வெயிற் பண்ணுறன்.'

'எனக்கு வீடு தெரியாது.'

'நான் சென்றல் ஸ்ரேசனுக்கு வாறன். நீயும் அங்க வந்து, அங்க இருக்கிற போஸ்ட்ஒபிசுக்கு முன்னால உள்ள பெஞ்சில இரு...என்ன?'

'சரி நான் வந்துஇருக்கிறன். இன்னும் ஒரு விஷயம்?'

'என்ன?'

'என்ன நேரத்திற்கு வாறது?'

'சரியா ஏழு மணிக்கு நான் அங்க வருவன்.'

'நானும் ஏழு மணிக்கு அங்க வாறன்.'

'காத.'

'காத.'

எனக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. இப்படி இவ்வளவு சீக்கிரமாக இது கிடைக்கும் என நான் கனவிலும் எண்ணி இருக்கவில்லை. சந்தோஷத்தை என்னால் அடக்க முடியவில்லை. சந்தோஷ மிகுதியுடன் வீட்டை நோக்கித் திரும்பினேன். உடுப்பு மாற்றி பணமும் எடுத்துக்கொண்டு செல்ல வேண்டும். நான் நடந்தேன். பின்பு ஓடினேன். ஆம், ஓடியே வீட்டிற்குச் சென்றேன். அவ்வளவு ஆர்வம்; அல்லது ஒருவித விறுவிறுப்பென்று கூறலாம். எப்படி வந்தேனோ தெரியாது. மத்திய புகையிரத நிலையத்திற்கு வந்து விட்டேன். உடலெங்கும் சூடு பரவி இருந்தது. அவள் எப்படி இருப்பாள் என்னும் கேள்வி என்னுள் அவளது முகத்தை நினைவு படுத்தியது. படத்தில் பாப்பதைவிட நிஜத்தில் பார்ப்பது வித்தியாசத்தையும் விறுவிறுப்பையும் தரும் என்று கற்பனை செய்து கொண்டேன்.

நான் தபால்கந்தோருக்கு எதிரே இருந்த பெஞ்சில் போய் அமருகின்றேன். கண்கள் அலை பாய்ந்தன. எவரும் என்னைப் பார்த்து விடக்கூடாதே என்னும் பயத்தில் அலைபாய்ந்தன. யாராவது தமிழர் பார்த்து விட்டால் அது பெரிய வம்பாய்ப் போய்விடும். எவரும் என்னைப் பார்ப்பதாய்த் தெரியவில்லை. 'இவளை ஏன் இன்னும் காணவில்லை' என்று நினைத்தபோது சலிப்பு உண்டானது. அந்தச் சலிப்பை அவள் நீடிக்கவிடவில்லை.

அவள் அழகாகத்தான் இருந்தாள். முகத்தில் புன்னகை தவழ்ந்தது. அதற்கு என்ன அர்த்தம் என நான் சிந்திக்கவில்லை. அதைச் சிந்திக்கக்கூடிய நிலையிலும் நான் இல்லை. அவள் எந்த பதட்டமும் இன்றி என்னை நோக்கி வந்தாள்.

'நீயா எனக்குப் போன்......?'

'ம்... நான்தான் போன் பண்ணினனான்.'

கையைத் தந்து, என் பெயர் கெய்தி என்றாள்.

நானும் பதிலுக்கு கையைக் கொடுத்து 'என் பெயர் றமணன்' என்றேன்.

'றம்ணன்'...மிகவும் கஷ்டப்பட்டாள், பெயரைச் சொல்வதற்கு...அவள் கஷ்டப்படுவதைப் பார்க்க எனக்கு சிரிப்பே வந்துவிட்டது.

அவளைப் பார்த்து 'றம்ணன் இல்ல, றமணன்,' என்று சொல்லி இலேசாகச் சிரித்தேன்.

'கஷ்டம் உங்க பெயர்களை உச்சரிக்கிறது...'

'உண்மைதான்.'

'வீட்ட போவமா?'

'ஓ.கே.'

'டாக்ஸியில போவம்'...

'ம்...' எனத் தோளைக் குலுக்கினேன்.

வெளியே வந்து வாடகை வண்டியைப் பிடித்துக் கொண்டு அவளின் வீட்டிற்குச் சென்றோம். அழகான வீடு. அது ஒரு மாடிக் கட்டடத்தில் இருந்தது. சிறிய வீடு தான். அடக்கமாகவும் சீராகவும் இருந்தது.

'வா உள்ள.

'தக்.' (நன்றி)

'நீ எந்த நாட்டுக்காரன்?'

'இலங்கை.'

'எவ்வளவு காலம் இங்க இருக்கிறீங்க?'

'கிட்டத்தட்ட நாலு வருஷம் முடியுது...'

'நோர்வேயில இருக்க விருப்பமா?'

'ம்...விருப்பம்'

அவள் இப்படி வளவள என்று பேசிக் கொண்டிருப்பது எனக்குப் பிடிக்கவில்லை. எழுந்து சென்று அவளை அண்டி இருந்தேன். அவள் தோள்மீது கைகளைப் போட்டு அவளை என்னோடு இறுக்கி அணைத்தேன். மெதுவாய் முத்தமிட்டேன். அவள் திருப்பி எனக்கு முத்தம் தந்தாள். அவள் என் கையைப் பிடித்து இழுத்த வண்ணம் தனது படுக்கை அறைக்குக் கூட்டிச்சென்றாள். அங்கு நான் எதிர்பார்க்கும் முன்பே அவள் தன்னைத்தானே நிர்வாணமாக்கிக் கொண்டது எனக்கு சிறியதோர் அதிர்ச்சியைத் தந்தது.

பின்பு எதையோ சிந்தித்தவளாய், 'இரவு முழுவதும் தங்கப்போறியா அல்லதுஅரைமணித்தியாலம் மாத்திரம் தங்கப்போறியா?' என்று லௌகீகமாகக் கேட்டாள்.

'இரவு முழுக்கத் தங்கிறது எண்டா எவ்வளவு முடியும்?'

'ஆயிரத்தில இருந்து இரண்டாயிரம் வரையும் முடியும்...'

'இரவு முழுக்க இருக்க விரும்புறன்...'

'நிறையப் பணம் வச்சிருக்கிறியா?'

'யா' என்று அருகில் சென்று, அவளை என்னுடன் இழுத்து அணைத்துக் கொண்டேன். அவளது வெற்றுடம்பின்மேல் எனது கைகள் படிந்தன. நான் அனுபவித்த அந்தச் சுகத்தை எப்படி... அந்தச் சுகம் எனக்கு சொர்க்கத்தைக் கண்டது போலவே இருந்தது. அவளது கன்னத்தில் எச்சில் படிய நான் முத்தமிட்டேன். அவள் என் ஒவ்வொரு ஆடைக்கும் சுதந்திரம் அளித்தாள். எனக்கு இன்னும் கூச்சம் முற்றுமாய் போகவில்லை. அவளுக்கு கூச்சம் என்பதே இல்லை என்றுதான் கூற வேண்டும்.

'இது அவளுக்குப் புரிந்ததோ என்னவோ என்னிடம் நீ கூச்சப்படுறியா?' என்று இரகசியக் குரலிலே கேட்டாள்.

நான் சிரித்தேன்.

'ம்...சாதுவா கூச்சமுண்டு...'

எனக்கும் அவளுக்கும் இடையில் காற்றுக்கூடப் புகமுடியாத இடைவெளி. நாங்கள் இறுக அணைத்து முத்தமிட்ட வண்ணம் இருந்தோம். பின்பு அவள் தன்னைச் சற்று விடுவித்துக் கொண்டு, நான் அப்படியே நின்றிருக்க அவள் முட்டுக்காலில் இருந்தாள். எனது இடையை கட்டி அணைத்தாள். இரண்டு முத்தமிட்டாள்.

என்னை நிமிர்ந்து பார்த்து, 'விருப்பமா?' என்று கேட்டாள்.

யார்தான் அதை வேண்டாம் என்பார்கள்? நான் மாத்திரம் அதற்கு விதிவிலக்கா என்ன?

'யா...'

அவள் எனக்கு அந்த இன்பத்தைத் தந்தாள். இப்படியும் இன்பம் அனுபவிக்கலாம் என்பதை இலங்கையில் வாழ்ந்த காலத்தில் நான் கேள்விப்பட்டதுமில்லை. அவளுக்கு இருந்த பொறுமை எனக்கு இருக்கவில்லை. என்னால் தாங்க முடியவில்லை. இன்னும் சிறிது நேரம் விட்டால் அது ஆபத்தானது என எனக்குப் புரிந்தது. எனவே, அள்ளிச் சென்று படுக்கை மீது சாய்த்தேன். அவள் என்னைப் பார்த்து, 'வா கெதியா! முடிஞ்சதும் வெளியால எங்கயாவது போகலாம்; என்ன?'

'எங்க?'

'ஏதாவது ஒரு ரெஸ்ராரண்டுக்கு...'

'ஏன் குடிக்கவா?'

'சீ...என்ன நீ இப்பிடிக் கேக்கிறாய்?'

'கேட்டது பிழை எண்டா மன்னிச்சுக்க.'

'சரி வா நீ'...எனச் சிணுங்கினாள்.

என்னைத் தன்னோடு சேர்த்து இறுக அணைத்துக் கொண்டாள். அது ஒரு நிமிடம்கூட நீடித்திருக்காது. நான் எழுந்து விட்டேன். அவள் என்னை ஏளனமாய் பார்த்தாள். நான் முகத்தைத் திருப்பிக்கொண்டேன். மெதுவாகக் கூறினேன், 'நான் நோர்வேக்கு வந்த பிறகு யாரோடயும் உறவு வைச்சுக்கல்ல. அதுதான் இப்பிடி...'

'அடுத்த முறை நீடிக்கும், நீ கவலைப்படாத...'
'நானும் அப்படித்தான் நம்புறன்...'
'வெளியால போவமா?'
'அதுக் என்ன? நான் முதல்ல குளிக்கணும்...'
'தாராளமா...அங்கே இருக்கு அதுதான் பாத்ரூம்.'
'நன்றி.'

நான் குளித்து முடித்துவிட்டு அவளுடன்வெளியே சென்றேன். அவள் குளிக்கவில்லை. கேட்க வேண்டும்போல் மனது படபடத்தாலும் என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டேன். அது தேவையில்லாத பிரச்சனையை உண்டு பண்ணலாம். எனவே, நான் எதுவும் கூறாது அவளுடன் அவள் செல்லும் இடத்திற்குச் சென்றேன். அங்கு சென்று குடித்தேன். அறுநூறு குரோனர்கள் முடியுமளவிற்கு எனக்கு நல்ல நினைவு இருந்தது. எல்லாம் அரைகுறையாகவே நினைவு... காலையில் பார்க்கும்போது மொத்தமாய் ஆயிரம் குரோணர் செலவாகி இருந்தது.

அவள் படுக்கையால் எழுந்துவிட்டாள். நான் அவளிடம் இரண்டாம் முறையாக இரவு உறவு கொண்டது ஞாபகம் இருக்கின்றது. என்னால் எழுந்திருக்க முடியாமல் இருந்தது. வேலைக்குப் போக வேண்டும் என்பது ஞாபகம் வரத் துள்ளி எழுந்தேன். இங்கு வேலைக்குப் போகாவிட்டால் வேலையே இல்லாமல் போய்விடும். எழுந்து சென்று முகத்தை அலம்பினேன். நேற்று துடைத்த துண்டு இருக்க அதால் முகத்தைத் துடைத்து விட்டு வெளியே வந்தேன்.

அவள் காலை உணவு அருந்திக் கொண்டிருந்தாள். என்னைப் பார்த்தவுடன் புன்னகைத்தாள்.
'சாப்பிட விரும்பிறியா?'

'எனக்கு இப்ப நேரமில்ல...' எனக் கூறிய வண்ணமே பார்சைத் திறந்தேன். எனக்குத் திகைப்பாய் இருந்தது. பர்ஸுக்குள் ஆக நானூறு குரோணர்களே இருந்தது. என்ன செய்வது என சிந்தித்த வண்ணம் அவளைப் பார்த்து, 'எவ்வளவு உனக்குத் தரணும்?'

'முதல்நாள் எண்டபடியா ஆயிரம் தந்தாப்போதும்...' எனக்கு இது அதிர்ச்சியைத் தரவில்லை. நான் இதை விடக் கூடுதலாக எதிர்பார்த்தேன்.

'என்னிட்ட ஆயிரம் பேர்ஸுக்க இல்ல. நீ என்னோட வந்தி எண்டா மினி வாங்கில எடுத்து உன்ர பணத்தைத் தரலாம்.'

'கல்வத்த...' எனச் சலித்த வண்ணம் உள்ளே சென்று புறப்பட்டு வந்தாள்.

அன்றிரவு நந்தன் வரும் போது மணி பத்து. நான் படுத்து விட்டேன். ஆனால் தூங்கவில்லை. நந்தன் வந்து உடுப்புகளை மாற்றிக்கொண்டு சமையல் அறைக்குள் சென்று சாப்பாட்டை எடுத்துக் கொண்டு வந்து ஹோலில் இருந்தான். அதை ஹோல் என்றும் சொல்லலாம்; அறை என்றும் சொல்லாம். நாங்கள் இருவரும் படுப்பது அங்கேதான். நான் போர்வையால் இழுத்து மூடினேன். மின் ஒளி கண்ணைக் கூசச்செய்தது. நந்தன் மெதுவாகக் கதைக்கத் தொடங்கினான்.

'இராத்திரி எங்க போனனீ?'
'ச்...சும்மா அப்பிடியே பிரன்ஸ் வீட்டதான்...'

'ம்...ம்... டேலா விடுறாய்? வந்து ஒரு கிழமை ஆகல்ல...அதுக்க பிரன்ட்சாம்! என்ன என்னைஇழிச்ச வாயன் என்று நினைக்கிறியா?'

'இப்ப என்னென்றாய்?'

'சொல்லடா உண்மைய.'

'சும்மா இருடா நந்தா...எனக்கு தூக்கம் வருது...

'உண்மையைச் சொல்லாமல் இண்டைக்கு நீ படுக்க மாட்டாய்...'

'நீ இப்ப அதைத்தெரிஞ்சு என்ன பண்ணப்போறாய்?'

'சும்மா மழுப்பாத... விஷயத்தைச் சொல்லிட்டு படுக்கிற வழியப் பார்...'

'நான் சங்கர் வீட்ட போனனான்...'

'ச்...சும்மா பொய் சொல்லிக்கொண்டு இருக்காத...'

'என்னை நம்படா...'

'நான் இராத்திரியே போன் பண்ணிக் கேட்டனான். சும்மா திரும்பத் திரும்பப் பொய் சொல்லாதை.' நான் மீண்டும் பேசாது படுத்தேன். அவன் விடவில்லை. என் போர்வையை இழுத்தான். எனக்குச் சலிப்பாய் இருந்தது. இவன் சொல்லாமல் படுக்க விடமாட்டான் என்பது புரியவே நான் நடந்ததைச் சொல்லத் தொடங்கினேன்.

'என்ன பேசாம படுத்திருக்கா?'

'ச்... நீ முதல் கையைக் கழுவிப்போட்டுவா, சொல்லுறன்.'

அவன் கை கழுவிவிட்டு வந்தான். வந்தவன் தனது படுக்கையில் படுத்த வண்ணமே, 'உம் சொல்லு...'

'ஒண்டும் பெரிசா இல்ல. சென்றல் ஸ்ரேசன் பக்கத்தில ஒருத்தியின்ர வீட்டுக்கு போயிட்டு வந்தன்...'

'டே, அவளிட்டயா போனாய்?'

'அவளட்ட போகமா வேற எங்க போறது?'

'அநியாயமா காசையும் சிலவழிச்சு உடம்பையும் கெடுக்கப்போற...'

'ம்... இப்பிடியே இருந்திட்டா மாத்திரம் எனக்கு யாழ்ப்பாணத்தில சிலை வைச்சுப் போடுவாங்களோ?'

'அப்ப நீ அழியிறன் எண்டு முடிவு பண்ணிட்டா போல இருக்கு'

'ம்ம்ம். அனுபவிக்கிறது எண்டு முடிவுபண்ணிட்டன்.'

'ஊரில அறிஞ்சா எப்படிக் கவலைப்படுவினம் எண்டு யோசிச்சியா?'

'அவை அறியட்டும். அவை யோசிச்சு இருந்தா நான் இப்பிடி அலையத் தேவையில்ல...'

'ஏதோ உன்ர விருப்பம்.'

'அப்ப பேசாமல் இரு...'

'ஓகே. குநாத்.'

'குநாத்.'

4

காலம் விரைவாகவே ஓடியது. நான் அந்த ஒரு முறையுடன் அவளை விட்டு விடவில்லை. அதன் பின்பும் ஒரு வாரத்தில் ஒருநாள், அதாவது சனிக்கிழமை, அவளிடம் சென்று வந்தேன். இப்போது நாள் முழுவதும் அவளுடன் இருப்பதில்லை. அரை மணித்தியாலம் மாத்திரம். ஒன்று மட்டும் புரிந்தது. அந்த பழக்கத்தை என்னால் நிறுத்த முடியாது என்பதுதான் அது. எனக்கு ஒரு திருமணம் நடந்தாலோ, அல்லதுஏதாவது வேறோர் மாற்றம் ஏற்பட்டாலோ ஒழிய அவளுடைய உடலை நாடும் இந்தப் பழக்கத்தை விட்டுவிட முடியாது.

நந்தன் பின்பும் ஒரிரு முறை புத்திமதி கூறினான். நூறு வருடம் ஏங்கி ஏங்கி வாழ்வது எனக்கு வாழ்க்கை

யாகத் தெரியவில்லை. வாழ்நாள் கொஞ்சமாய் இருந்தாலும், சந்தோஷமாய் வாழவேண்டும் எனத் தோன்றியது. நந்தனின் புத்திமதிகளை நான் புறக்கணித்தேன். என் புறக்கணிப்பைப் புரிந்த பின்பு அவன் புத்திமதி கூறுவதை நிறுத்தினான். பண்பாளனாக நந்தன் இருப்பதை நினைத்தும் மகிழ்ந்தேன்.

நந்தனைவிட இன்னும் சில நண்பர்கள் சேர்ந்து கொண்டார்கள். பொழுதுபோக்கிற்கு இப்போது பஞ்சம் இல்லை. அதில் சிவா குறிப்பிடத் தக்கவன். நாங்கள் சினேகமாகிக்கொண்டது புகையிரத நிலையத்தில்தான். நான் இன்னும் அவன் வீட்டிற்குச் சென்றதில்லை. அவனுக்கு ஒரு தங்கை இருப்பதாகக் கேள்வி. அவளைப் பற்றி அறிந்து கொள்ளவேண்டும் என்கின்ற ஆசையும் எனக்கு இருந்ததில்லை.

ஒருநாள். திடீரெனச் சிவா தங்கள் வீட்டிற்குச் சாப்பிட வரச் சொல்லிக் கூப்பிட்டான். நான் மறுக்கவில்லை. மறுப்பதற்கு எந்தக் காரணமும் இல்லை. சனிக்கிழமை அன்று சிவா வீட்டிற்குச் சென்றேன். நான் சிவா வீட்டிற்குச் செல்லும்போது நேரம் பதினோரு மணி இருக்கும். சிவா ஹோலில் இருந்தான். அவனோடு கூட அவன் நண்பன் ரகுவும் இருந்தான்.

சாப்பாட்டு வாசனை மூக்கைத் துளைத்தது. யார் சமைக்கின்றனர் என்பது தெரியாது. நான் சிறிது நேரம் எதுவும் பேச முடியாது தவித்தேன். அதை சிவாதான் தீர்த்து வைத்தான்.

'என்ன குடிக்கிறாய்?'

நான் அவனைப்பார்த்தேன். விளங்கிக் கொண்டான்.

'நான் கூல்டிரிங்ஸ் சொல்லுறன்.'

ஓ அப்படியா... எது வேண்டுமானாலும் சரி.'

'அதற்கு அவன் உள்ளே பார்த்து 'கவி, ஜூஸ் கொண்டு வா...'

அதற்குப் பதில் வரவில்லை. ஆனால் அவள் வந்தாள். அவளைக் கண்டவுடனேயே எனக்கு மூளை துருதுருத்தது. அவளை எங்கேயோ பார்த்து இருக்கிறேனே என எண்ணினேன். சில விநாடிகளில் ஞாபகம் வந்தது. ஒஸ்லோ வந்த முதல்நாள். புகையிரத நிலையத்தில் இவளைக் கண்டேன் அல்லவா? அவளேதான். கவி ஜூஸை எங்களுக்கு முன்பாகஇருந்த மேஜையில் வைத்தாள். நான் எதுவும் பேசாது அவளைப் பார்த்துப் புன்னகைத்த வண்ணம் இருந்தேன். மௌனம்.

சிவாதான் மௌனத்தைக் கலைத்தான்.

'கவி நான் சொல்லல்ல றமணன் எண்டு; இவர்தான் அவர்'

'ஹாய்.'

'ஹாய்.'

'உங்களை நான் ரயில்வேஸ்ரேஷனில கண்டனான். இரண்டு மாதம் இருக்கும்.'

'ம்...ம்... எனக்கும் ஞாபகம் இருக்கு...'

'உங்களுக்கு முழுப் பெயரே கவிதானோ, இல்ல வேற ஏதாவது?'

'முழுப்பெயர் கவிதா. ஆனா வீட்டில எல்லாரும் என்னைக் கவி எண்டுதான் கூப்பிடுவினம்...'

சமையல் அறைக்குள் இருந்து ஒரு தலை தோன்றியது.

'என்ன உங்கயே காம் போட்டிட்டியா?'

'இல்ல வாறன்...' எனக் கூறிய வண்ணமே கவி சென்றுவிட்டாள்.

அரை மணித்தியாலம் கழித்து, சமையல் வேலைகள் எல்லாம் முடித்து வந்தாள் கவி. மற்றவளுக்கு பெயர் ரதி என்பது அவள் சொல்லத் தெரிந்தது. அத்தோடு ரதி ரகுவின் மனைவியாம். பெயர்ப் பொருத்தம் நல்லாத்தான் இருந்தது. ஜோடிப் பொருத்தமும் பரவாய்

இல்லை. அப்படி என்றால் கவி யார்? சிவாவின் தங்கையா? அல்லது வேறை யாருமா?

'அண்ணா சாப்பிடுவமா?' எனச் சிவாவைப் பார்த்து கேட்டாள். இந்தக்கேள்வி எனக்கு அவர்களுக்கு இடையிலான உறவைவிளக்கிவிட்டது. ஆண்களோடுபெண்களும் சேர்ந்துவிட்டால் காலம் இறக்கைக் கட்டிக் கொள்ளுகிறது. நேரம் கலகலப்பாய் நகர்ந்தது. நேரத்தைப் பார்த்தபோது பிற்பகல் நான்கு. நான் எழுந்தேன். ஆனால் கவி தடுத்தாள். இருந்து இரவுச் சாப்பாடு சாப்பிட்ட பின்பு போகுமாறு கூறினாள். நான் மறுத்துவிட்டேன். எனக்கு வேலை இருப்பதாகக் கூறிக் கொண்டு நான் நழுவினேன். எடுத்த எடுப்பிலேயே கவியின் இனிய சுபாவம் எனக்குப் பிடித்திருந்தது. 'சாப்பாட்டுக்கு வீங்கிக் கிடக்கிறான்' என்று நினைக்கக் கூடாது என்கிற ஒருவகை 'கெப்பர்' எனக்கு.

மத்திய புகையிரத நிலையத்திற்கு வந்த பின்புதான் அந்த யோசனை தோன்றியது. இன்று சனிக்கிழமையல்லவா? போன் பண்ணிவிட்டு அவளிடம் சென்று வந்தால் என்ன? உடம்பிற்கு அந்த சுகம் தேவைப்பட்டது. இது கவிதாவின் பேச்சுக்கான எதிர்வினையாகக்கூட இருக்கலாம். நான் போனில் கதைத்தேன். அவள் என்னை வரச் சொன்னாள். சில நிதர்சனங்களை மறந்து கனவுலகிலேயே சஞ்சரிப்பதற்கும் பெண்ணுறவு உதவுகின்றது.

இப்பொழுதெல்லாம் சரியாய் அரை மணித்தியாலத்தில் திரும்பிப் போகும்படி கெய்தி கூறுவதில்லை. நான் தொடர்ந்து படுத்தால் அவள் தடுக்க மாட்டாள். தானும் படுப்பாள். சிலவேளை நான் இரண்டாம் முறைகூட தொட்டதுண்டு. இந்த மேலதிக சேவைக்கு அவள் பணம் கேட்டதுமில்லை. பணத்திற்கு அப்பாலான மனித உறவுகளை அவளும் விரும்பியதான

ஒரு போக்கு. நான் அவளைத் தவிர வேறு ஒருத்தியிடமும் செல்வதில்லை. பணம் கொடுப்பதுதானே? யாரிடமாவது செல்லலாம். நான் அப்படிச் செல்வதில்லை. என் மனம் ஏனோ இவளோடேயே திருப்திப்பட்டுக் கொண்டது. நான் இதை அவளிடம் ஒருமுறை கூறினேன். அவள் என்னைப் பார்த்து, 'நீ இரக்க முள்ளவன்' என்றாள். இரக்கம் என்பதை மானுஷீகத்தின் அம்ஸம் என நான் இனம் கண்டேன்.

தொலைபேசி மணி அடித்தது. அவள் எழுந்து சென்று எடுத்தாள் நான் படுக்கையில் இருந்த வண்ணம் அவளுடைய நிர்வாண கோலத்தை ரஸித்தேன். போனில் வேறு வாடிக்கையாளராய் இருக்கவேண்டும். போனைப் பொத்திய வண்ணம் என்னைப் பார்த்து. 'எப்ப போகப் போறாய்?' என்று கேட்டாள்.

'வேற ஆளா?'

'ம்.ம்.ம்.''

'நான் இப்பவே போறன்.'

'இல்ல, நீ இன்னும் கொஞ்ச நேரம் இருந்திட்டுப் போ...நான் இரண்டு மணித்தியாலம் கழிச்சு வரச் சொல்லுறன்.'

'இல்ல நான் இப்ப போகோணும். எனக்கு வேற வேலை இருக்கு.'

'ம்' என தலையை ஒருவிதமாகக் கோணி, அவள் சலித்துக் கொண்டாள்.

எனக்கு வியப்பு! இவள் ஒரு தாசி. அப்படி இருந்தும் இவளுக்கு இப்படி ஓர் ஆசையா என் மேல்? இவள் மனசின் ஒரு மூலையில் இன்னும் மானிட உணர்ச்சிகள் சாகாமல்தான் இருக்கின்றன. அவள் என்னுடன் கதைக்காது எனக்கு முதுகு காட்டிய வண்ணம் திரைச் சீலை இடுக்கிற்குள் முகத்தை விட்டு வெளியே வெறித்துக் கொண்டிருந்தாள்.

நான் அவளுக்குப் பின்புறமாகச் சென்று அவளை அணைத்துச் சமாதானம் செய்தேன். பின்பு விருட்டென உடைகளை அணிந்து கொண்டு அங்கிருந்து வந்து விட்டேன். அவள் விடவில்லை. என் பின்னால் வந்தாள். அவ்வளவு சீக்கிரத்தில் அவளால் எப்படி உடைமாற்றிக் கொண்டு என் பின்னால் ஓடி வரமுடிந்தது என எண்ணும்போது எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

இருவரும் நடந்து மத்திய புகையிரத நிலையத்திற்குச் சென்றோம். அவள் என்னோடு அண்டி அண்டி வந்தாள். அதில் எனக்கு ஒருவித இன்பமாயும், அதே வேளை ஒருவித சங்கடமாயும் இருந்தது. நான் போக முயன்றும் அவள் என்னை விடவில்லை. தன்னுடன் கதைத்துக் கொண்டு இருந்துவிட்டுப் போகுமாறு கூறினாள். நான் சிறிது நேரம் கதைத்துக் கொண்டிருந்தேன். அவளின் புது வாடிக்கையாளர் வர நான் மெது வாய் அவளிலிருந்து விலகி நழுவினேன்.

நான் தபால்க் கந்தோர் உள்ள மாடியில் இருந்து இறங்கும் போதுதான் கவனித்தேன். கீழ்த் தளத்தில் உள்ள பெட்டிக்கடைக்கு முன்பு கவி என்னைப் பார்த்துக் கொண்டு நின்றாள். நான் திகைத்துத்தான் போய் விட்டேன். மெதுவாக இறங்கிக் காணாதவன் போல போக எண்ணினேன்.

அவள் விடவில்லை. எனக்குப் பக்கத்தில் வந்து, 'ஹலோ?' என்றாள்.

நான் இப்போதுதான் காண்பது போல நடித்தேன். என்னை நம்பினாளா என்பது தெரியவில்லை.

'ஹலோ...'

'உங்களுக்கு அவசர வேலை இருக்கு எண்டீங்க? இஞ்ச நிற்கிறீங்க?'

'இல்ல நான் வந்த வேலையை முடிச்சிட்டன். இப்ப போக நிக்கிறன்.'

'ஆர்? அவளோடயா உங்களுக்கு வேல?' எனக் கெய்தியைச் சுட்டிக் காட்டினாள்.

நான் ஒரு கணம் திகைத்துப் போய்விட்டேன். அவள் முகத்தில் புன்னகைதவழ்ந்தது. அது எதனால் என்பது எனக்குப் புரியவில்லை.

'இல்ல, நான் வேற பிரண்டைச் சந்திக்க வந்தனான். அவனைச் சந்திச்சிட்டன். இவள் என்னோட போல்க் கஸ்கூல்ல படிச்சவள். கனகாலத்துக்குப் பிறகு இப்ப தான் சந்திச்சிருக்கோம். அதுதான் நிண்டு கதைச்சுக் கொண்டு நிண்டனான்.'

'ஓ ஸ்கூல் பிரன்ஸா?''

'ம்-ம்-ம்-'

'நீங்க ஃப்றியா இருக்கேக்க எங்கட வீட்டுக்கு வரலாம் தானே?'

'ப்றியா இருந்தா வாறனே...''

'உங்களோட நிறையக் கதைக்கணும். நீங்க வீட்ட வந்தீங்க எண்டா கதைக்கலாம்.'

'அப்பிடி என்ன கதைக்க இருக்கு?'

'வீட்ட வாங்க சொல்லுறன்.'

'இங்க சொல்ல மாட்டீங்களா?'

'இல்ல...இங்க எல்லாம் சொல்லேலாது...'

நான் மெதுவாக விடுபட்டு தேவாண் நிலையத்திற்குச் சென்றேன். கவியை எண்ணும்போது எனக்கு பயமாக இருந்தது. என்னுடன் இவளுக்கு என்ன கதை? கதைத் தாலும் பறுவாய் இல்லை. ஆனால், அவளின் குழைவு எனக்கு அச்சத்தைத் தந்தது. சிலவேளை அவள் நட்பாகவே ஏதாவது கதைக்கலாம். நான் ஏன் தேவையில்லாமல் கற்பனை செய்து கொள்கிறேன்? அது தப்பு. பெண்ணைப்பற்றி மனம் போன போக்கிலே நினைப்பது தப்பு.

நான் வலியச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொண்டு கவியைச் சந்திக்க விரும்பவில்லை. தவிர்க்க முடியாத சந்தர்ப்பம் ஏற்பட்டால், அப்போது பார்த்துக்கொள்ளலாம் என்பது எனது எண்ணம். கவியைச் சந்தித்து அதனால் ஒரு உறவு வளர்ந்தால் அதை ஒரு போதும் நிறைவேற்ற முடியாது. கூடியமட்டும் விலகி இருப்பதே நல்லதெனப்பட்டது. விலக வேண்டும் என்கிற எத்தனம் கூட அவள் மனசிலே நெருங்கி வருவதின் எதிர் வினையே!

என்னதான் துணிந்து விட்டேன் என மனதினுள் எண்ணிக் கொண்டாலும், உண்மையான துணிவு என்னுள் இன்னும் வரவில்லை. கவியோடு உறவு ஏற்பட்டால் அதை என்னால் நிறைவேற்ற முடியும் என்கின்ற துணிவு என்னுள் வளரவில்லை. அப்பா அம்மாவைக் கோபித்துக் கொள்வதாய் எண்ணினாலும், உண்மையில் கோபித்துக் கொள்ள முடியவில்லை. இன்னும் பெற்றோரின் சொற்படி நடப்பதுதான் உத்தமம் என்கிற எண்ணம் என் மனசின் ஏதோ ஒருமூலையில் ஒட்டிக் கிடந்தது.

பெற்றோரின் சொல் கேட்காமல், நான் நினைத்தது போல் நடந்து கொண்டால், எத்தனை பாதிப்புக்கள் எனக்கும், எனது குடும்பத்திற்கும் உண்டாகும் என எண்ணும்போது மனசுக்குள் பயமாகவும் சஞ்சலமாகவும் இருந்தது. என் மனசுக்கு எங்கு சென்றாலும் நிம்மதி ஏற்படாது. நான் இந்தக் குழப்ப நிலையால் கவிதாவை ஒருபோதும் தேவை ஏற்படாமல் பார்ப்பதில்லை என முடிவு பண்ணிக் கொண்டேன்.

மனக் குழப்பம் காரணமாக கெய்தி வீட்டிற்கு நான் ஒரு வாரம் செல்லவில்லை. செல்லாமல் விடவும் ஏலாது. அடுத்த சனி இரவு எட்டு மணிபோல் போன் பண்ணினேன். கெய்தி கதைத்தாள். வீட்டிற்கு உடனேயே

வரச் சொன்னாள். அவள் கதைக்கும் விதத்தில் ஏதோ வித்தியாசம் இருந்தது. ஏன் இந்த வித்தியாசம் எனப் புரியவில்லை. குடித்திருப்பாளோ? சீ, அவள் என்னைப் போல் அல்ல. குடித்தாலும் நிதானமாய் இருப்பவளாயிற்றே? அப்படி இருந்தும் ஏன் இந்தவித்தியாசம்? புரியவில்லை. நான் அதற்குமேல் யோசியாது புறப்பட்டேன்.

நான் வெளியே செல்வதற்கு தயாராகும் போதே நந்தன் வேலையால் வந்து விட்டான். என்னைக் கண்டவுடன் அவனுக்குப் புரிந்து விட்டது. அதை உறுதி செய்யும் விதமாக, 'என்ன வெளியால போல இருக்கு...' என்று கேட்டான்.

'ம்-ம்...'
'அவளிட்டயா?'
'ஓமடா.'
'ஏதோ அழியிறன் எண்டு துவங்கிட்டாய்.'
'இல்லயடா அனுபவிக்கிறேன்?'
'நீ காசுக்காரன் அனுபவிப்பாய்'

'உன்னிட்ட காசில்லையா? என்ன செய்யப் போகிறாய் காச வைச்சு? செத்தாப் பிறகு காசு உனக்குப் பின்னால வராதடா. ஏதோ இண்டைக்கோ நாளைக்கோ அனுபவிச்சிட்டு சாவம் எண்டில்லாம... நான் வாறன்...'

'மனித உறவுகளை அங்காடியில் வாங்குவதை நான் விரும்பவில்லை.' அவன் சொல்வதை அர்த்தப்படுத்திக் கொள்ளாத அவசரம் எனக்கு. அந்த நேரத்தில் கெய்தி பற்றிய நினைவுகளே என் நெஞ்சமெல்லாம் வியாபித்திருந்தது.

நான் போனபோது கெய்தியுடன் இரண்டு பேர் இருந்தனர். அதில் ஒருத்தன் எனக்கு ஏற்கனவே பழக்கமானவன்தான். அன்று புகையிரத நிலையத்தில்

இருந்து அவன்தான் கெய்தியைக் கூட்டிக் கொண்டு வந்தவன். மற்றையவன் புதிது. இதற்கு முன்பு இவனைக் கண்டதில்லை. 'ஹாய் வா உள்ள...' என்னைக் கண்டதும் கெய்தி அழைத்தாள்.

நான் உள்ளே சென்றேன். அங்கு இருந்தவர்கள் கையைத் தந்து தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டனர். கெய்தியைப் பார்த்தேன். அவள் இப்போது மாறித்தான் இருந்தாள். அவள் நடையில் ஒரு தள்ளாட்டம் இருந்தது. மெலிந்தும் போய் இருந்தாள். ஏன் என்பதுதான் எனக்குப் புரியவில்லை. அல்வ்தான் முதலில் அங்கிருந்த அமைதியை உடைத்தான்.

'நெடுக வருவியா இங்க?'

'இல்ல, இருந்திட்டு எப்பவாவது வருவன்...'

'விரும்பிறியா இவளை?'—இதைப் பேத்தர் கேட்டான்.

'ம்-ம். நல்லவள். வடிவானவள்...'

அல்பே தொடர்ந்தும் கதைத்தான்.

'குடிப்பியா?'

'குடிப்பன், ஆனா நிறையக் குடிக்க மாட்டன். நீ எந்த இடம்?'

'துறோம்சோ.'

'நோர்த் நோர்வே. நானும் அங்க இருந்தனான்.'

'ரொம்பக் குளிரில்ல?'

'அதெண்டா உண்மதான்.'

'இங்க ஒஸ்லோவில உனக்கு நிறையப் பிரன்ஸ் இருக்காங்களோ?'

'நிறைய எண்டில்ல. ஆனா இருக்காங்க...'

'நானும் கெய்தின்ர கஸ்ரமராயிட்டன்...'

'பெத்தர் கஸ்ரமராகல்லயா?' கேட்டுவிட்டுப் புன்னகைத்தேன். அல்வ் சிறிது நேரம் பேசாதிருந்தான். பின்பு மெதுவாக, 'அவனுக்கு பெம்பிளைகளைப் பிடிக்காது' என்றான்.

'என்ன சொல்லுறாய்?'

'அவனுக்கு ஹோமோ செக்ஸ்தான் பிடிக்கும்...'

'ஓ அப்பிடியா சங்கதி?'

'கெய்தி உனக்கு ஏற்கனவே ஒருத்தர் இருக்கார். நான் நாளைக்கு வாறன்,' எனக் கூறிவிட்டு எழுந்தேன்.

அதற்கு அல்வ், 'இல்ல நாங்க சும்மா கதைக்கத்தான் இப்ப வந்தம். நீங்க படுங்க, நாங்க போறம்...'

'ஓ அப்ப நீங்க ஒருத்தரும்...'

'சீ சீ இல்ல.'

'என்ன அவசரம் றமணா உனக்கு?' எனது தலையைத் தடவிய வண்ணம் கேட்டாள் கெய்தி.

'அப்பிடி ஒண்டுமில்ல.'

'அப்ப ஆறுதலா வச்சுக்குவம், என்ன?' குனிந்து என் கன்னத்தில் முத்தமிட்டாள்.

'ம்.ம்-ஓ கே.'

அல்வ் கதைத்தான்.

'உன் பெயர் றமணன். சரியா நான் உச்சரிக்கிறது?'

'ரொம்பச் சரி. நீ நல்லாவே உச்சரிக்கிறாய்...?'

'தக்'

'ஏதாவது மற்றச் சாமான்கள் பாவிக்கிறனியோ?'

'என்ன சொல்லுறாய்?'

'ஹிரோயின் சூஸ்தி அப்பிடி ஏதாவது?'

'நோ நோ... அப்பிடி எல்லாம் இல்ல.'

'பாவிச்சா நல்லா இருக்கும்.'

'நான் அதை எல்லாம் விரும்பல்ல.'

'நீ பாவிக்கேல்ல. பாவிச்சாத் தெரியும்...'

எனக்குப் புரிந்தது. கெய்தி ஏன் இப்படி இருக்கிறாள் என்பது புரிந்தது. கெய்தியை இவர்கள் கெடுத்து விட்டார்கள். இவர்களோடு தொடர்ந்து இருப்பது எனக்கும் ஆபத்தானது. இனி இங்கு வருவதையே நிறுத்திக் கொண்டால்? நிறுத்துவது நல்லதுதான். அது

எனக்குத் தேவையே! என்னால் அந்த அவஸ்தையைத் தாங்க முடியாது. என்ன செய்ய முடியும் இதற்கு? அன்று என்க்கு அவ்வளவாய் தித்திக்கவில்லை கெய்தியின் உறவு. அதற்குப் பதிலாய் அல்வ் கூறிவிட்டுப்போன விடயம் என் மனதைக் குடைந்து கொண்டிருந்தது.

முடிந்த அலுப்பில் நான் அப்படியே படுக்கையில் இருந் தேன். கெய்தி எழுந்து சமையல் அறைக்குச் சென் றாள். அங்கிருந்து ஒரு ஊசியில் ஏதோ திரவகத்தை எடுத்துக் கொண்டு வந்தாள்.

‘விரும்பிறியா?’

‘போதை மருந்துதானே?’

‘யா.’

‘எனக்கு வேண்டாம், நான் போறன்...’

‘ச், நீ கேட்டாலும் நான் தரமாட்டான். நான் காசு குடுத்து வாங்கியது. ம், இதுல இந்த ஊசிய ஏத்து...’ எனக்கூறிய வண்ணம் தனது முழங்கைக்கு மேலே ஒரு பட்டியால் இறுக்கிக் கட்டியவண்ணம் தனது கையை நீட்டினாள். இரத்தம் எடுப்பதற்கு கட்டியதுபோல் கட்டி இருந்தாள். சிலர் இரத்தம் எடுத்து அதில் கலந்தும் ஏத்துவது உண்டாம். இவள் அப்படி அல்ல வாம். மருந்தாகவே ஏத்தச் சொன்னாள். நான் மறுத்தேன்.

‘நான் ஏத்தமாட்டன்.’

‘ச்...பிளீஸ்?’

‘ஏன் இப்பிடி அழியிறாய்?’

‘நீ இப்ப ஏத்திறியா இல்லையா?’

‘முடியாது.’

‘கொண்டா நானே ஏத்திக்கிறன்,’ என என்னிடம் இருந்த ஊசியைப் பறித்தாள்.

‘வேண்டாம் கெய்தி, இதைப்போட்டா நீ அழிஞ்சு போவாய்...’

‘பறுவா இல்ல. அதைப்பற்றி நான் கவலைப்படல்ல. நீயும் கவலப்படத் தேவையில்ல... உனக்கு இது அநாவசியமான விஷயம். ஒன்றில் ஊசிய எனக்கு ஏத்து, அல்லாட்டில் ஊசிய என்னிட்டத்தா. நானே ஏத்திக்கிறன்.’

‘இல்ல வேண்டாம்...’ எனக்கூறிவிட்டு அவள் காட்டிய இடத்தில் நானே ஊசியைப் போட்டேன். அவள் கையை மடக்கிய வண்ணம் அப்படியே நிலத்தில் இருந்தாள். எனக்கு அவளைப் பார்க்க பரிதாபமாயும் இருந்தது; வெறுப்பாயும் இருந்தது. அவளைப் பார்த்துக் கொண்டு அங்கு நிற்க எனக்குப் பிடிக்க வில்லை. பணத்தை மேஜை மேல் வைத்துவிட்டு விருட்டென வெளியே வந்து விட்டேன்.

என் மனசிலே ஒரு வித பயம் குடிகொண்டது. கெய்தி வீட்டிற்கு இனிச் செல்வதா என்பதில் எனக்குக் குழப்பம் இருந்தது. அவள் வீட்டிற்குச் சென்றால் நானும் போதைப் பொருளுக்கு அடிமையாக நேரிடுமோ என்னும் பயம் என்னுள் எழுந்தது. போகாமலும் இருப்பது சாத்தியமாய்த் தோன்றவில்லை. வேறு எவளிடமும் செல்ல விருப்பமுமில்லை. இவள் ஒருத் தியே போதும் என்றது மனசு. ஆபத்து எனப் புரிந் தும் என்னால் மாற முடியவில்லை. மீண்டும் மீண்டும் அவளையே என் மனசு விரும்பியது.

சிந்திப்பதால் குழப்பமே மிஞ்சியது. நான் அதைப் பற்றிச் சிந்திப்பதையே விட்டு விட்டேன்.

கவி வீட்டிற்கும் போகவில்லை. இப்போது மத்திய புகையிரத நிலையத்திலும் நேரத்தைச் செலவழிப்ப தில்லை. சிவாவையோ அல்லது கவியையோ சந்திக்க நேரலாம் என்னும் பயத்தில் அங்கெல்லாம் நிற்ப தில்லை.

கிழமை நாள்களில் எந்தப் பிரச்சனையும் இன்றிக்காலம் போய்விடும். இந்தச் சனி-ஞாயிறு வந்தால்தான் வில்லங்கம். இன்று போவதா அல்லது போகாமல் விடுவதா என்பது எனக்கு குழப்பமாய் இருந்தது. நந்தன் இன்னும் வீட்டிற்கு வரவில்லை. கெய்தியிடம் இன்று போகாமல் விட்டால் என்ன? சிறிது நேரம் போவதில்லை என்னும் முடிவுடன்தான் இருந்தேன். அந்த வீடியோ கசற்றைப் போட்டுப் பார்த்த பின்பு, அதில் வந்த சில்க்கின் முக்கலும் முனகலும் அலுப்புத் தரவே... அலுப்பா? அல்லது தேவையா? அவளிடம் செல்ல வேண்டும் என்கிற ஓர் உந்துதல்.

கீழே இறங்கும்போது நந்தன், என்னை எதிர் கொண்டான். ஒருவகைக் குற்ற உணர்வு. சிறிது நேரத்திற்கு முன்பு சென்றிருந்தால் இவனைச் சந்திக்க வேண்டி வந்திருக்காது. இப்போது இவன் சொல்வதை வேறு கேட்க வேண்டிய அவஸ்தை. என் மனம் அலுத்துக் கொண்டது.

'றமணா.'

'என்ன?'

'ஒரு விஷயம்...'

'சொல்லு.'

'உன்ன சிவா கேட்டான்.'

'என்னவாம்?'

'நீ வீட்டுக்கு வாறதும் இல்லையாம். இப்ப ரயில்வே ஸ்ரேசனில சந்திக்கறதும் இல்லையாம்.'

'அவனை விடு, எனக்கு நேரம் இருந்தா வெல்லோ சந்திக்கலாம்.'

'எனக்கே டீலாவா?'

'என்னடா?'

'சிவா மாத்திரம் குறைபட்டுக் கொள்ளல்ல?'

'வேற யார்?' எனக்கு இதற்கு விடை தெரியும். இருந்தும் அவன் வாயாலயே கேட்க வேண்டும் என்கிற ஆசை.

'உனக்குத் தெரியாத மாதிரி கேக்கிறாய். சிவா தங்கச்சி கவிதாதான்...'

'அவைக்கு வேலையில்ல.'

'டே, என்ன லவ்வா?'

'மண்ணாங்கட்டி.'

'என்னடா இப்பிடிச் சொல்லுறாய்?'

'வேற என்ன? நடக்கக்கூடிய விஷயத்தைப் பற்றிக் கதைக்கோணும். அவங்கள் யாரோ, நாங்கள் யாரோ. இதெல்லாம் நடக்கக் கூடிய விஷயமாடா?'

'அதுக்கேன் என்னில கோவிக்கிறாய்?'

'நான் உன்னில கோவிக்கல்லடா. எம் மனசில... சரி விடு. நான் போகோணும்...'

'நீ இப்படி அலையிறதிலும்பாக்க, கவிதாவை லவ் பண்ணுறதால பெரிய பிரச்சனை வந்திடாது...'

'உனக்கு விருப்பம் எண்டா நீ லவ் பண்ணு அவளை. நான் போறேன்...'

நான் வந்துவிட்டேன். மேலும் நின்று கதையை வளர்த்துக்கொள்ள எனக்கு விருப்பம் இல்லை.

5

கவிதாவைப் பற்றி நினைக்கும்போது சஞ்சலமாத்தான் இருந்தது. இந்தச் சனியனை எல்லாம் விட்டுவிட்டு அவளை லவ் பண்ணினால்? ஒருகணம் மனசு அப்படி அமைதியான பாதையைத் தேடினால் என்ன என்று தவிப்பது பேரலவும். ஊர் உறவு எல்லாவற்றையும் மறந்துவிட்டு இவளுடன் வாழ்ந்தால் என்ன? கவி

பெரிய அழகி இல்லைத்தான், ஆனாலும் அவள் சாதாரணத்துக்கு மேல். கவி தனது உடம்பின் வடிவை மிகவும் கட்டுக் கோப்பாய் வைத்திருந்தாள். கவர்ச்சி என்பதிலும் பார்க்க ஒருவகை வசியம். அவள் பழகும் விதங்களில் நளினம் இருக்கின்றது. ஒரு பெண்ணின் மென்மை. பண்பு அந்த மென்மைக்கு மெருகூட்டியது. என்னை அறியாமலே என்மனசுஅவளை விரும்புவதைச் சில வேளைகளில் நிதானிக்க முடிகிறது. யாருக்காகவோ பயப்படுகின்றேன். போலி கௌரவம், போலி அந்தஸ்துத்தான் இன்னும் என் மனசில் இடம் பிடித்துள்ளது. நான் விரும்பினாலும் என்னால் அவளை அடைய முடியாது. என் பெற்றோர் கட்டிப் பிடித்திருக்கும் கலாசாரம் என் முதல் எதிரி. எண்ணங்களூடே கெய்தியின் வீட்டிற்கு வந்து சேர்ந்தேன்.

கெய்தியுடன் அல்வ்வும் பெத்தரும் இருந்தனர். நிறைய பியர் மேஜையில் அடுக்கப்பட்டிருந்தது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு போத்தல் பியரை அப்படியே போத்தலுடன் குடித்தவண்ணம் இருந்தனர். நான் சோபாவில் அமர்ந்தேன்.

அவர்களைப் புரிந்துகொள்ள முடியவில்லை. போதை மருந்தும் சாப்பிடுகின்றனர். பியரும் குடிக்கின்றனர். என்ன மனிதர்கள் இவர்கள்? அவர்களைப் பார்த்துக் கொண்டு இருந்தேன். அல்வ்தான் எப்போதும் முதலில் கதைப்பான். அவனுக்கு மௌனமாய் இருக்கத் தெரியாது.

'இண்டைக்கு நாங்கள் எல்லாரும் முதல்ல குடிப்பம். அதுக்குப் பிறகுதான் உங்க சமாச்சாரம்.'

'ம்...' நான் சிரித்தேன்.

'நீ வடிவா இருக்காய்...' இதை யார் கூறி இருந்தாலும் நான் கவலைப்பட்டிருக்க மாட்டேன். பெத்தர் கூறுவது

தான் எனக்கு கவலையைத் தந்தது. நான் எதுவும் பேசாது இருந்தேன்.

அதைப் புரிந்துகொண்ட பெத்தர், 'பயப்பிடாதே. எனக்கு ஏற்கனவே பார்ட்னர் இருக்கார்...' நான் சங்கடத்துடன் சிரித்தேன்.

'அவைக்கு ஒரு கிளப்பிருக்கு. அடிக்கடி அங்க சந்திப்பினம். இண்டைக்கும் பதினோரு மணிக்கு மேலே போவார்...'—இதை அல்வ் கூறினான்.

'எங்களுக்கு ஒரு சங்கம் இருக்கு. உங்களுக்கு தெரியுமோ?'— இது பெத்தரின் கேள்வி.

'இல்ல் இண்டைக்குத்தான் கேள்விப்படுறன்.'

'அதைப்பற்றி கதைக்கிறதை நிப்பாட்டுங்க...'—இது கெய்தி.

'எங்களுக்கு உரிமை இருக்கு கதைக்கிறதுக்கு...' பெத்தர் கத்தினான்.

'விடு கெய்தி, அவன் கதைக்கட்டும்.' அல்வ் கூற, கெய்தி அடங்கிப்போனாள்.

சிறிது நேரத்தில் எல்லோரும் அமைதியாகி விட்டோம். யாரும் எவருடனும் கதைக்கவில்லை. கெய்தி எனக்கும் போத்தல் ஒன்றை திறந்து தந்தாள். நான் சங்கடத்துடன் குடித்தேன். குடிக்கக் குடிக்க புகையின்பத்தையும் கேட்டது எனது நா. அவர்கள் சுருட்டித் தந்ததைப் பற்ற வைத்துக் கொண்டேன். மீண்டும் பெத்தர் கதைக்கத் தொடங்கினான்.

'எங்க உணர்ச்சிகளை மற்றவை மதிக்கினம் இல்ல. நையாண்டி பண்ணுகினம். இவங்க செய்யிறது சரி எண்டு நினைக்கிறியா?'

'இல்ல. அது பிழைதான். முதல்ல நாங்க மற்றவன்ர உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுக்கப் பழகிக்கணும்...'

'உனக்கு விளங்குது. ஆனா எல்லாருக்கும் இது விளங்கிறேல்ல. விளங்காட்டிப் பறுவா இல்ல.ஆனா மற்றவையக் கிண்டல் பண்ணுறாங்க. அப்பதான் ஆத்திரம் வருகுது. நாங்களும் மனிசர் தானே? எங்க உணர்ச்சிகள் வித்தியாசமாக இருக்கிறதுக்கு நாங்க என்ன செய்ய முடியும்?'

'சனத்துக்கு விளங்கப்படுத்தணும்.'

'விளங்கப்படுத்துறம். எங்கட சங்கம் வேற இருக்கு. அனாலும் முழு வெற்றிய எங்களால அடைஞ்சிட முடியுதில்ல.'

அவள் குரல் பரிதாபமாகத் தொனித்தது.

'எங்கள மற்றவங்க பார்க்கேக்க ஏதோ பாவஞ் செய்தவங்கள பாக்கிற மாதிரிப் பாக்கிறாங்க.., அதைத் தாங்கிக்க முடியுறதில்லை. அதால மனசுக்கு ரொம்ப வேதனையாய் இருக்கும்.'

'நீங்களே உங்களைப்பற்றி குறைவா நினைச்சுக்கிறீங்க...'

'இல்ல கெய்தி, நான் அப்பிடி நினைக்கல்ல. சனங்க என்ன செய்றாங்க எண்டு நீ என் நிலையிலே இருந்தாத்தான் சரியா உணர முடியும்....

பிறகு மௌனம். சற்று நீண்ட மௌனம். அல்வ் அதைக் கலைப்பது போல என்னைப் பார்த்து, 'இன்னம் ஒரு போத்தலே முடிக்கல்ல' என்று 'நக்கல்'செய்தான். 'இதுதானா? பாத்துக் கொண்டே இரு.'

கூறிவிட்டு குடித்தேன். மிக விரைவாக இன்னும் இரு போத்தல்களைக் காலி செய்து வைத்தேன். அப்போது அல்வ் நமட்டுச் சிரிப்புச் சிரித்தான். வெறி ஏறியது. பொழுது போனது.

அங்கிருந்த போத்தல்கள் எல்லாம் காலியாகின. கெய்தியைப் பார்த்து, 'இன்னும்?' என்று கேட்டேன்,

'என்ன?'

'பியர்.'

'ம்கூம்...இல்ல;'

'எனக்கு வேணும்.'

'அதுக்கு நான் என்ன செய்ய?'

'நாங்க வெளியால போவமா?'

'இப்பவா?'

'ம். இப்பதான்.'

அப்போதுதான் கவனித்தேன், அல்வ்வும் பேத்தரும் சமையல் அறைக்குள் ஏதோ செய்து கொண்டிருந்தனர். எப்போது அங்கே சென்றனர் என்பது எனக்குத் தெரியாது. இவர்கள் அங்கு என்ன செய்கிறார்கள்? சிலவேளை அங்கு பியர் வைத்திருக்கிறார்களா? எழுந்து சென்றேன். நடக்கும்போது உலாஞ்சியது. அப்படி உலாஞ்சும் போது, ஒரு வித சந்தோஷம் ஏற்பட்டது. அவர்கள் ஊசியில் மருந்தை நிரப்பிக்கொண்டிருந்தனர். எனக்கு அதைப்பற்றிக் கவலையில்லை. எனக்கு வேண்டியது பியர். எனவே நான் அவர்களைப் பார்த்து, 'பியர் இருக்கா?' என்று கேட்டேன்.

'இல்ல. எங்களிட்ட பியர் இல்ல.'

'எனக்கு இப்ப பியர் வேணும்,'

'பியர்விட இது நல்லது. வேணுமா?'

'என்ன?'

'நல்லது. உனக்கு நல்ல வெறி வரும்.'

நான் கதைத்துக் கொண்டிருக்கும் போதே அங்கு வந்த கெய்தி, 'எனக்கு முதல்ல போடு...'என்றாள்.

அவளுக்குப் போட்டு விட்டனர்.

அடுத்ததாகப் பெத்தர் போட்டுக் கொண்டான்.

'விரும்பிறியா?'

எனக்கு எதுவுமே தெரியாத நிலை. கையைத் தூக்கிக் கொடுத்தேன். இதன் விளைவு எப்படி இருக்கும்

என்பது எனக்கு தெரியாது. அதைப்பற்றிச் சிந்திக்கும் நிலையிலும் நான் இல்லை. எப்படி என்றாலும் சந்தோஷமாய் இருந்தால் சரி எனப்பட்டது.

ஊசி போட்ட பின்பு என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியாது. இடையிடையே நினைவு வந்தபோது ஏதோ காற்றில் பறப்பது போலச் சுகமாய் இருந்தது. எழுந்திருக்க முடியவில்லை. அந்த இன்பத்தை அனுபவிப்பது மிகவும் ஆனந்தமாய் இருந்தது.

காலை எழுந்தபோது தலை இடித்தது. கை, கால் இரண்டிலும் நடுக்கம் இருந்தது. ஒரு கையில் வலி வேறு இருந்தது. அதைத் தொட்டுப் பார்க்கும்போது தான் புரிந்தது எனக்கு, இரவு ஊசி போடப்பட்டிருக்கின்றது என்பது. எனக்கு ஒரு முறை உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டியது. நான் தப்பு செய்துவிட்டேன் என என் மனம் அடித்துக் கொண்டது. பெண்ணோடு உறவு கொள்வதை நான் தப்பாய் எண்ணியதில்லை. ஆனால் ஊசி?

போதைப் பொருள்களைத் தொட்டால் விடமுடியாது என்கிறார்களே. அப்படி ஒரு நிலை எனக்கு ஏற்பட்டால்? ஐயோ, அப்படி ஏற்படக்கூடாது. நான் இதில் இருந்து தப்ப வேண்டும். எப்படித் தப்பிப்பது? ஒன்றே ஒன்றுதான் செய்யமுடியும். முடிவு செய்தவனாய் நான் படுக்கையை விட்டு எழுந்தேன்.

அவளுக்குரிய பணத்துடன் சற்று அதிகமாகவே பணம் வைத்தேன், நான் இரவு குடித்தது, அந்தப் போதை மருந்து எல்லாம் யார் பணமோ தெரியாது. யாருடையதாய் இருந்தாலும் பறுவாய் இல்லை. இவள் வைத்துக் கொள்ளட்டும். இன்னும் சற்று அதிகமாகவே வைத்தேன். அவள் நித்திரைத் தூக்கத்தில் என்னைத் திரும்பிப் பார்த்தாள்.

'காத...'

'இப்பவே போறியா?'

'ம்...'

'கொஞ்சம் இருந்திட்டுப் போவேன்.'

'இல்ல எனக்கு வேற வேல இருக்கு.'

'ஓ.கே.'

'காத.'

'காத.'

மீண்டும் தலையணையில் முகத்தைப் பதித்து அவள் நித்திரை இன்பத்தை அனுபவித்தாள். எனக்கு அவளைப் பார்க்கப் பரிதாபமாய் இருந்தது. நான் மெதுவாக வெளியே வந்தேன்.

சூரிய வெளிச்சம் என்மேல் பட்டது. இந்தச் சூரிய வெளிச்சம் எனக்கேனோ ரம்மியமாக இருந்தது. நான் இதுவரை காலமும் இப்படிச் சூரிய ஒளியைப் பார்த்து ஆனந்தப் பட்டதில்லை. இன்று ஏனோ இந்தச் சூரிய ஒளியைப் பார்க்கப் பரவசமாய் இருந்தது. துள்ளிக் குதித்து ஓடவேண்டும் போல இருந்தது.

வீட்டிற்குச் சென்றேன். நந்தன் காலை உணவுடன் இருந்தான். என்னைக் கண்டதும் சிரித்தான்.

'நீ அதிர்ஷ்டக்காரண்டா...' என்றான்.

'என்னடா சொல்லுறாய்?'

'நீ தட்டிக் கழிக்கிறாய். ஆனா அவை உன்னை தேடித்தேடி அலையினம்...?'

'யாரைச் சொல்லுறாய்?'

'உன்ர கவிதாதான்.'

'என்ர கவிதா ஆக்கிட்டியா?'

'ஏன்ரா அவளுக்கு என்ன குறை?'

'அவளுக்கு குறையில்லயடா. எனக்குத்தான் குறை. அப்பா அம்மாவ எதிர்க்க முடியாத குறை. இந்த சமுதாயத்த எதிர்கேலாத குறை. எல்லாத்துக்கும் பயந்து பயந்து சாகிற மனச வைச்சிருக்கிற குறை.'

‘[illegible] பிரசங்கத்த திப்பாட்டு. அவ எத்தின மணி வரையும் இருந்திட்டுப் போச்சினம் தெரியுமோ?’

‘எத்தின மணி வரையும் இருந்திச்சினம்?’

‘இரவு ஒரு மணிவரையும் இருந்திட்டுப் போச்சினம்.’

‘நீ ஏண்டா அப்பிடி இருக்கவிட்டா?’

‘நான் எங்க இருக்கவிட்டன்? நீ பிரன்ஸ் வீட்டுக்குப் போயிருக்கா எண்டு சொன்னன். சிவா பன்னிரெண்டோட போவம் எண்டு வெளிக்கிட்டவன்! ஆனா, கவிதாதான் இருந்தது இருந்திட்டம் றமணனச் சந்திச்சிட்டுப் போவம் எண்டு ஒரு மணி வரையும் காத்திருந்திச்சு.’

எனக்குப் பெரிய சங்கடமாய் இருந்தது. நான் எதுவும் பேசாது சவரம் செய்து முகம் கழுவுவதற்குச் சென்றேன். நந்தன் விடவில்லை.

‘பாவம்டா அதுகள்.’

‘என்ன செய்யிறதடா நான்?’

‘ஏதாவது ஒரு முடிவச் சொல்லிடு.’

‘ம்ம்...’

அன்று திங்கட்கிழமை. பிற்பகல் ஐந்து மணி இருக்கும். நான் சமைத்து முடித்துவிட்டு வீடியோவில் ‘தெய்வ வாக்கு’ படம் பார்த்துக் கொண்டிருந்தேன். படத்தில் ரேவதியின் நடிப்பைப் பாராட்டலாம். மற்றும்படி அறுவை. என்ன ரஸனை இவர்கள் ரஸனை? இப்படித்தான் படம் தொடர்ந்து எடுத்துக் கொண்டு இருக்கப் போகின்றார்களா? எல்லோரும் துணிந்து மாற்றவேண்டும். உண்மையை உள்ளபடி காட்ட வேண்டும். ஒருவன் பத்துப் பேருக்கு எப்படிய்யா அடிக்க முடியும்? என்னையே என்னால் முழுமையாய் மாற்றிக் கொள்ள முடியாத போது... சிந்தனை தொடர வில்லை; அழைப்பு மணி ஒலித்தது.

யாராய் இருக்கும் என எண்ணும்போது மனசுக்குள் ஒரு மூறை திக்கென்றது. நான் எதிர்பார்த்தது சரியாய்

இருந்தது. கவிதாதான் நின்றாள். சிரித்தவண்ணம் நின்றாள்.

‘வா கவி. வா உள்ள. அண்ணா வரேல்ல...’

‘ஏன் நான் தனிய வந்தா உள்ள விடமாட்டீங்களா?’

‘ச், என்ன கவி நீங்க இப்பிடிப் பேசுறீங்க?’

‘அப்ப எப்பிடி பேசுறது? உங்களை நான் எத்தின தரம் சொல்லிருக்கன் வீட்ட வரச்சொல்லி... என்னை ஏமாத்திட்டீங்க.’

‘அப்பிடி இல்லக் கவி. நேரமில்ல.’

‘பொய் சொல்லாதேங்க. உங்களுக்கா நேரமில்ல? பாக்கிறது ஒரு வேலை. என்னமாச் சுத்திறீங்க...’

‘முதல்ல உள்ள வந்து இருங்க...’

அவளது கதையை நிறுத்த நான் செய்த தந்திரம். அவள் உள்ளே வந்து இருந்தாள். நான் சமையல் அறைக்குள் சென்றேன். காப்பி போடுவதற்கு நீரைச் சுட வைத்துவிட்டு திரும்பியபோது, சமையல் அறை வாசலில் கவி என்னைப் பார்த்தவண்ணம் நின்றாள். நான் அசடு வழிந்தேன்.

‘எனக்கு ரீ வேண்டாம்.’

‘அப்ப என்ன வேணும்?’

‘யூஸ் குடுங்க போதும்.’

‘ஓ.கே.’ எனக் கூறிவிட்டு நான் இரு கண்ணாடிக் குவளைகளில் பழரசத்தைக் கலந்து ஒன்றைக் கவிக்குக் கொடுத்தேன். மற்றதை நான் எடுத்துக் கொண்டேன்.

சோபாவில் அமர்ந்த பின்பு திடீர் எனக் கவி என்னைப் பார்த்து, ‘நான் உங்களோட கதைக்கிறது—பழகிறது உங்களுக்குப் பிடிக்கல்லயா?’

‘ச், என்ன கவி நீங்க?’

‘நீங்க தேவையில்ல...நீ எண்டே சொல்லலாம்...’

நான் கவியைக் குறும்பாய் உற்றுப் பார்த்தேன். அவளும் என்னைச் சிறிது நேரம் பார்த்தாள்,

'எல்லாரும் இப்பிடிப் பார்க்காதே எண்டு சொல்லு வினம். ஆனா நான் அப்படி சொல்லமாட்டன். எனக்குப் பிடிச்சிருக்கு. நீங்க அப்பிடிப் பாக்கிறது பிடிச்சிருக்கு. நாங்க இப்பிடித் தனிமையா இருந்து கதைக்கிறது பிடிச்சிருக்கு...'

நான் பேசாது யோசனையில் ஆழ்ந்தேன்.

'உங்களுக்குப் பிடிக்கல்லயா? என்னப் பிடிக்கல்லயா?'

திடீரென அவள் குனிந்த வண்ணம் தேம்பித் தேம்பி அழுதாள். இவள் என்ன பெண்? எங்களுக்குள் என்ன உறவென்றே வெளிப்படையாகக் கதைக்கவும் இல்லை; சொல்லவும் இல்லை. கடிதம்? அது கூடக் கிடையாது. கட்டின பெண்டாட்டிமாதிரி என்முன்னால்அழுகிறாளே? கவி தேம்பித் தேம்பி அழுதுகொண்டே இருந்தாள்.

நான் பெரும் சங்கடத்துடன் அவளருகே சோபாவில் அமர்ந்த வண்ணம் அவளது தலையை வருடிக் கொடுக்க எண்ணினேன். தற்செயலாய் தப்பாய் ஏதாவது நினைத்து விட்டால்? ச், என்னோடு தனிமையில் இருந்து கதைக்க வேண்டுமாம். நான் தன்னைப் பாக்கிறது பிடிச்சிருக்காம். நான் வருடிக்கொடுத்தால் மாத்திரம் பிடிக்காமல் போயிடுமா என்ன? நான் துணிவை வரவழைத்துக் கொண்டு அவளது தலையை மெதுவாக வருடினேன். அப்படிச் செய்வதிலே ஒரு வகைச் சுகமும் இருந்தது.

'அழாத கவி...முதல்ல அழுகைய நிப்பாட்டு...' என்றேன்.

அவள் இன்னும் அதிகமாய் அழுதவண்ணம் எனது மார்பில் முகம் புதைத்தாள். எனக்குச் சங்கடம் ஒரு பக்கம். அவளது மேனி ஸ்பரிச இன்பம் இன்னொரு பக்கம் என்னை அல்லற் படுத்தியது. துணிந்து அவள் முகத்தை என் பக்கம் திருப்பினேன். அவள் கண் களில் இருந்த கண்ணீரைத் துடைத்தேன்.

'நீ அழக்கூடாது. இனிமேல் உன்னை நான் அழ விடமாட்டன். எனக்கும் உன்னப் பிடிச்சிருக்கு கவி. நீ பயப்பிடாத. நான் உன்ன கலியாணம் செய்யிறன்.'

'உண்மயா?'

எனது மார்பில் உள்ள ரோமங்களை எண்ணியவாறே கேட்டாள்.

'நான் உன்னிட்ட பொய் சொல்ல மாட்டன்...'

நான் கவியைச் சற்று இறுக்கி அணைத்தேன். பின்பு அவள் வதனத்தைப் பார்த்து, 'சிரி' என்றேன். அவள் முயன்றாள்.

'பிளீஸ் எனக்காகச் சிரி.'

'ம்...ம்...ம்...'

ஆ, அவள் வதனத்தில் ஓர் அழகான புன்னகைப்பூ பூத்தது! நான் அவளை இறுக்கினேன். அவள் இதழை அப்படியே கவ்வினேன். அவளும் அந்த இறுக்கத்திற்கு இறுக்கம் தந்தாள்.

'றமணா?'

தன்னை விடுவித்துக் கொண்டாள்.

'என்ன?'

'என்னப் பிடிச்சிருக்கில்ல?'

'என்ன கேள்வி இது?

'என்னக் கைவிட மாட்டாயல்ல?

'அசட்டுத் தனமா கதைக்கக்கூடாது.'

நான் மீண்டும் அவளை இறுக்கி அணைத்தேன்.

'ஐ,லவ்யூ. ஐ,லவ்யூ கவி. இப்ப நம்பிறியா? இல்ல வேற ஏதாவதும் செய்யணுமா?'

அவள் அப்படியே எனக்கு முத்த மழை பொழிந்தாள்.

'நான் அதிஷ்டக்காரி...உண்மையிலேயே நான் அதிஷ்டக்காரி...'

அதைக் கூறும்போது மீண்டும் கண் கலங்கினாள்.

'இதுக்கும் அழுகையா?'

'இது ஆனந்தக் கண்ணீர்?'

'அப்ப சிரிப்புக்கும் அழுவியா?'

'சீ, போ றமணா.'

'அப்ப நான் போறன்.'

எழுந்து செல்ல முயன்றேன். அவள் விடவில்லை. என்னை இழுத்து தன் மார்போடு அணைத்துக் கொண்டாள். நான் அவள் அணைப்பில் இருந்த வண்ணமே அவளுக்கொரு முத்தம் கொடுத்தேன். முத்தத்தோடு அவள் என்னை விட்டுத்தள்ளி இருந்தாள்.

'கவி இப்பேன் அங்க தள்ளி இருக்கா?'

'நீங்க சுத்த மோசம்.'

கதவு தட்டும் ஓசை கேட்டது. நான் எழுந்து சென்று கதவைத் திறந்தேன். வெளியே நந்தன் சிரித்த வண்ணம் நின்றான்.

'வா' எனக் கூறிவிட்டு உள்ளே வந்தேன். அவன் உள்ளே வந்ததும் கவியைக் கண்டுவிட்டான்.

உடனே, 'வாவ், சேந்திட்டீங்களாடா ரெண்டு பேரும்?' என்றான் உற்சாகமாக.

அவனது முகத்திலே களங்கமில்லாத மகிழ்ச்சி பொங்கிற்று.

கவி புறப்பட்டாள். நான் அவளை மத்திய தேவாண் (சுரங்கப் புகையிரதம்) நிலையத்திற்கு கூட்டிச் சென்று அவளை அனுப்பி மீண்டேன். எனக்கு இப்போது மனசில் ஒருவித நிம்மதி இருந்தது. என்னைவிட நந்தனுக்கு மிகவும் சந்தோஷம். 'உனக்கு இப்பதான் விடிவுகாலம் பிறந்திருக்கு' என அடிக்கடி கூறுவான்.

6

சந்தோஷத்தில் நாட்கள் விரைவாகப் போவது போலத் தோன்றியது. நான் கவி வீட்டிற்குச் சில தடவைகள்

சென்றிருந்தேன். கவி எல்லா விடையத்தைப் பற்றியும் சிவாவிற்கு சொல்லி இருக்க வேண்டும். சிவாவிற்கு இதில் பூரண சம்மதம் எனவும் அறிந்து கொண்டேன். ஒஸ்லோவுக்கு மாறி வந்தது, கவிதாவைச் சந்திக்க வேண்டிய ஊழ்வினை என்றுகூட நினைக்கலானேன்.

குறுகிய காலத்திற்குள் கவியின் நெருக்கம் கனிந்தது. அவளுடன் உடல் உறவு வைத்துக் கொண்டதில்லை. என் அடி மனதில் ஆசை இருந்தது. அது எனக்குத் தப்பாயும் தெரியவில்லை. சற்றுத் தயக்கமாக இருந்தது. கவியை எப்படிக் கேட்பது என்பதும் சங்கடமாய் இருந்தது. எப்படியோ கேட்டாக வேண்டும் என முடிவு செய்தேன்.

அன்று திங்கள். நான் அவசர அவசரமாகச் சமைத்தேன். சமைத்து முடித்து விட்டுப் புறப்படத் தயாரானேன். அப்போதுதான் அழைப்பு மணி அடித்தது. எனக்கு நிச்சயமாய்த் தெரியும். இது கவியாகத்தான் இருக்கவேண்டும். கதவைத் திறந்தேன். கவிதான் நின்றாள். என்னைப் பார்த்துச் சிரித்தாள். அவளிலே சிறிது வாட்டம் தெரிந்தது. உள்ளே வந்ததும் புத்தகப் பையை இறக்கி வைத்தாள்.

'என்ன சாகப் போறவள் மாதிரி வாறாய்?'

'பசிக்குது றமணா.'

'சாப்பாடு போடட்டா?'

'ம்...என்ன சமச்சாய்?'

'சொன்னாத்தான் சாப்பிடுவியா?'

'சும்மா சொல்லு றமணா.'

'இறச்சியும் கீரையும்.'

கவி என் பின்னாலேயே சமையல் அறைக்குள் வந்தாள். நான் சாப்பாட்டறைக்குள் சென்று தட்டை எடுத்துச் சாப்பாட்டைப் போட்டேன். நான் போடப் போடக் கறியைச் சுவைத்தாள்.

'நல்லாச் சமச்சிருக்கிறீங்க...'
'சும்மா சொல்லுறாய்...'
'இல்ல றமணா. உண்மையாவே நல்லா இருக்கு.'
'தாங்ஸ்.'
'இது நான் சொல்லணும்.'
'அப்ப சொல்லு.'
'உங்களுக்கு சொல்லத் தேவையில்லை...'

கவி சாப்பிட்டு முடித்தாள். சோபாவில் வந்து அமர்ந்தாள். நான் பக்கத்தில் போய் அமர்ந்தேன். மெதுவாக அவளது கையை எடுத்து நீவிக் கொடுத்தேன். எனக்கு இரு முத்தங்கள் கன்னத்தில் தந்தாள். அவள் என் தோளில் தலைசாய்த்தாள். நான் என் இருகைகளாலும் அவள் முகத்தை ஏந்தி இதழ்த்தேன் பருகினேன்.

'என்ன?'
'நீங்க ரொம்ப மோசம்.'
'இஞ்சபார் அநியாயத்தை. கொஞ்சநேரத்துக்குமுதல் நீயா முத்தம் கொடுத்தாய். இப்ப?'
'ம் உங்கள விட்டா என்ன இப்பவே அம்மா ஆக்கிடுவியள்.'
'அதுக்குத்தானே அலையிறன்.'
'சீ, போ றமணா...'

மீண்டும் அவள் பக்கத்தில் போய் இருந்து அவளில் வாசம் தேடினேன். இரண்டு முத்தங்கள்தான் கொடுத்திருப்பேன். என்னிடம் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டாள்.

'றமணா?'
'என்ன?'
'இப்ப இது வேண்டாம் றமணா...எனக்கு இன்னும் ஒருவருஷம் படிப்பு இருக்கு...'
'இன்னும் ஒரு வருஷமா?'
'ம்...'

'அது முடியாது...'
'முடியாட்டி என்ன செய்யப் போறீங்க?''
'நான் வேறொண்ட பார்க்க வேண்டியதுதான்.'
'நான் செத்துப் போயிடுவன்.'
'என்னை வெருட்டுறியா?'
'இல்ல, றமணா! உண்மையாவே நான் செத்துப் போயிடுவன்.'
'அப்ப என்ன பண்ணனும் என்கிறாய்?'
'நீங்க பொறுத்திருக்கணும்.'
'அது என்னால முடியாது. அட்ஜஸ்ட் பண்ணிக்கலாமா?'
'எப்பிடி?'
'அதுதான் இருக்கே 'கொண்டோம்'...'
'உங்களுக்கு எப்பிடி இதெல்லாம் தெரியும்?'
'போச்சடா?'
'சாமாளிக்காதேயுங்க நான் கேட்டதுக்குப் பதில் சொல்லுங்க...'
'அதுக்குள்ள அதிகாரமா?'
'அதிகாரம் இல்ல அக்கறை. நீங்க பதில் சொல்லுங்க முதல்ல.'
'கெல்சசோசியல் படிக்கேக்க படிச்சன்.'
'அதுதானே பாத்தன்.'
'இல்லாட்டி?'
'நீங்க அப்பிடி இருக்கமாட்டீங்க. எனக்கு நல்லாத் தெரியும்.'
'அடி அசட்டுப் பெண்ணே!' என்று மனதிற்குள் எண்ணினேன்.
'அட்ஜஸ்ட் பண்ணிக்குவமா?'
'வேண்டாம் றமணா.'
'அவளவை மாதிரியா நாங்கள்?'
'ஏன், தங்களுக்கு என்ன வித்தியாசம்?'
'அது சொல்லேலாது. அது எங்களோட கூடப் பிறந்தது.'

'இப்ப என்ன சொல்லுறாய் முடிவாக...'

'பொறுத்திரு நமணா. பிளீஸ், எனக்காகப் பொறுத்திரு...'

அவள் மீண்டும் அழுதுவிடுவாள் போல இருந்தது. கண்கள் சிவந்து கலங்கிவிட்டன. நான் அவளது முதுகில் தடவிக் கொடுத்தேன்.

'ஓகே. காம்டவுண் டார்லிங்...'

'மாற மாட்டீங்க இல்லை?'

'அப்பிடி ஒரு பயமும் இருக்கா?'

'இஞ்ச யாரையும் நம்பேலாது.'

'என்னைக் கூடவா?'

'கடவுளையே நம்பமுடியாது...'

'அடி கள்ளி!'

செல்லமாய் அவள் தலையில் குட்டு வைத்தேன். அவளும் செல்லமாய்ச் சிணுங்கினாள்.

அதன் பின் பலகதைகள் கதைத்துவிட்டு எட்டு மணி போல் தன் வீட்டிற்குப் புறப்பட்டாள். வழமைபோல் நான் அவளுடன் தேவாலய நிலையம் வரை சென்று, வழி அனுப்பி வந்தேன்.

ஒரு கிழமைக்குப் பின்பு கவிதா வந்தாள். அவளைப் பார்க்க பரிதாபமாய் இருந்தது. அவள் இதழ்கள் குளிரில் வெடித்து இரத்தம் கசிந்திருந்தது. ரணத்தில் உருவான இதழ்கள் போல!

'கவி?'

'என்ன?'

'ஏன் இதழ் வெடிச்சிருக்கு? நீ எச்சில் பண்ணுறேல் லயா? நான் எச்சில் பண்ணி விடட்டா?'

'ம் பார் ஆசைய...'

'இருக்காதா எனக்கு?'

'ஒண்ணும் சாப்பிட முடியுதில்ல. இரத்தம் கசியுது. ஒரே நோவும் எரிச்சலுமாக இருக்கு...'

'பழம் சாப்பிடுறதுதானே?'

'நீங்க ஆப்பிள் வெட்டித் தந்தா நான் சாப்பிடாமலா போயிடுவன்?'

கவிக்கு தோலோடு ஆப்பிள் சாப்பிடுவது பிடிக்காது. நான் எழுந்து சென்று ஆப்பிளையும் கத்தியையும் கொண்டுவந்து ஆப்பிளின் தோலைச் சீவினேன். கத்தி சறுக்கி விரலொன்றைப் பதம்பார்க்க விரலால் இரத்தம் கொட்டியது. 'ஆ'எனக் கத்தியவண்ணம் நான்கையைப் பிடித்திருந்தேன். இரத்தம் கட்டுப்படவில்லை. நான் இப்படி இருக்க, கவிதா என் விரலை எடுத்து இரத் தத்தை அழகிய வெடித்த இதழ்களால் உறிஞ்சினாள். அவள் இதழ்ப் புண்ணில் எல்லாம் இரத்தம் படிந்திருந் தது.

தான் உறிஞ்சியதுபோல என்னையே உறிஞ்சுமாறு கூறிவிட்டு எழுந்து சென்று துணி எடுத்து வந்து காயத் திற்குக் கட்டுப்போட்டாள்.

'தாங்ஸ் கவி...'

'இதுக்கெல்லாம் தேவையில்ல, தாங்ஸ் சொல்லி என்ன அன்னியமாக்கிடாதேங்க...'

'எங்கநீ இரத்தமெல்லாம் குடிக்கப்பழகினாய்?கேள்ஸ் லெசில இப்படி செய்யமாட்டினம்...'

'கனக்க கேள்ஸைத் தெரியும்போல இருக்கு?'

'ச், அதுக்குள்ளேயே சந்தேகமா?'

இன்னொரு திங்கட்கிழமை. வீட்டில் இருந்து போடப் பட்ட கடிதம் பழைய இடத்திற்குச் சென்று, திரும்ப அனுப்பப்பட்டிருந்தது. 'என்ன எழுதி இருக்கப் போகி னம்?' என்னும் நினைவுடன் கடிதத்தைப் பிரித்து வாசித்தேன்.

கடிதத்தில் எனக்குத் திருமண ஒழுங்கு செய்திருப்பதாக எழுதப்பட்டிருந்தது. டென்மார்க்கில் பெண் உள்ளா ளாம். போய்ப் பார்த்துப் பிடித்துக்கொண்டால், நிச்சயம்

பண்ணுமாறு எழுதப்பட்டிருந்தது. இது காலம் தாழ்த்திய பரிகாரம். என்னால் இப்போது ஒன்றும் செய்ய இயலாது. கவியை இனி என்னால் புறக்கணிக்க முடியாது. உயிர்க் காதல் என்பதில் எல்லாம் எனக்கு நம்பிக்கை இல்லை. ஆனால் ஓர் ஒப்பந்தம். ஒரு புரிந்துணர்வு. நீ இதை தந்தால் நான் அதைத் தருகிறேன் என்னும் பண்டமாற்று. தனித்து வாழ்வதால்உண்டாகும் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ளும் வழி. என்னால் இந்த வசதியான ஒப்பந்தத்தை நம்பவும் முடிந்தது.

இதைத்தான் நான் கவிதாவிடமும் எதிர்பார்க்கிறேன். அவள் எண்ணம் சிலவேளை மாறுபட்டிருந்தால் நான் அதற்குப் பொறுப்பாளியாக முடியாது. அதேவேளை கவிதா இருக்கும்போது இன்னொரு பெண்ணின் உறவு எனக்கு நிச்சயம் தேவையில்லை என்பதில் தெளிவாய் இருந்தேன்.

கவிதாவைத் திருமணம் செய்து கொள்வதால் வீட்டுடனான உறவு துண்டிக்கப்படலாம். நான் எப்படி எல்லாம் எச்சரிக்கையாக இருந்தும் கடைசியில் அப்படிப்பட்ட சிக்கலிலேயே மாட்டிவிட்டேன். இனி இதில் இருந்து தப்பிக்க முடியாது. அப்படித் தப்பிப்பது கீழ்த்தரமான ஒரு செயல். அதை நான் செய்ய விரும்பவில்லை. ஓர் உறவு வரும்போது இன்னோர் உறவு பிரியலாம். அது மனசுக்கு வருத்தம் தரும். எல்லாம் சேர்ந்ததுதான் வாழ்க்கை.

நான் வீட்டிற்குக் கடிதம் போடவில்லை. டென்மார்க் போவதாயும் எனக்கு உத்தேசம் இருக்கவில்லை. வீட்டிற்குக் கடிதம் எழுதினால் இப்போதே கத்திக் குளறி ஆர்ப்பாட்டம் செய்வார்கள். அதை தான் விரும்பவில்லை. கடிதம் போடாது இருந்தால் சில மாதங்களுக்கு இந்தப் பிரச்சனையை அமுக்கி வைக்கலாம் என எண்ணினேன்

நந்தனிடம் நான் இதைப்பற்றிக் கூறவில்லை. அன்று வேலையால் வந்தவுடன் நந்தன் என்னைக் கேட்ட கேள்வி திகைப்படைய வைத்தது.

'டேய், உனக்கு இளங்கோவைத் தெரியுமோ?'

'ஓ அவனுக் கென்ன?'

'நான் இண்டைக்கு டென்மார்க்கிற்கு போன் பண்ணினனான். அப்ப இளங்கோ என்னிட்ட உன்ர அட்றஸ் கேட்டான்.'

'சொல்லிட்டியா?'

'ம் சொல்லிட்டன்.'

'ஓ...கல்வத்த.'

'ஏன்டா?'

'சீ, எப்பிடி எல்லாம் பிரச்சனை வருகுது.'

'என்ன பிரச்சனை இதால?'

'இளங்கோன்ர தங்கச்சிய எனக்கு வீட்டுக்காரர் கலியாணம் பேசுகினம்.'

'இப்ப என்ன செய்யப்போறாய்? நீ எனக்கு முதல்ல சொல்லி இருந்தா நான் சொல்லி இருக்க மாட்டன். எனக்கு இப்பிடி எல்லாம் விஷயம் இருக்கு மெண்டு தெரியாது. அதுதான் நான் அவனிட்ட சொல்லிட்டன்.'

சில நாள்கள்தான் சென்றிருக்கும். இளங்கோ ஒஸ்லோவிற்கு வந்துவிட்டான் எனக் கேள்விப்பட்டேன். அவன் நேரடியாக எங்கள் வீட்டிற்கு வரவில்லை. எங்கள் ஊரைச்சேர்ந்த இன்னொருவர் வீட்டிலே தங்கினான். என்னைப் பற்றி மற்றவர்களிடம் கேட்டறிவது நோக்கமாக இருக்கலாம். அறியட்டும்; நான் ஒரு பெண்ணோடு பழகுவதை அறியட்டும்.

அன்று புதன்கிழமை. ஆறு மணி இருக்கும். நானும் கவியும் என் வீட்டில் தனிமையாக இருந்தோம். நாங்கள் சல்லாபித்தோம். முத்தம் பரிமாறினோம். அதற்கு மேல்

போவதற்கு கவி அனுமதிப்பதில்லை. அப்படி அவள் தடுப்பது எனக்கு சினத்தை உண்டு பண்ணும். சற்று வன்முறையாக நடந்து கொண்டால் அவளால் தாக்குப் பிடிக்க முடியாது... நான் பெண்ணை அடிமைப்படுத்தி அவளோட இன்பம் காணவேண்டும் என எண்ணிய தில்லை. அது வாழ்க்கையுமாகாது. விட்டுக்கொடுப்பது தான் வாழ்க்கை என்பது எனக்கும் புரியும்.

இருவரும் கதைத்துக் கொண்டிருக்கும் போதுதான், அழைப்புமணி ஒலித்தது. நான் கவிக்குக் கண்ணைக் காட்டினேன். அவள் எழுந்து சென்று கதவைத் திறந்தாள். இளங்கோ வெளியே நின்றான். கவி 'வாங்க' எனக் கூறிவிட்டு யார் என்பது போல் என்னைப் பார்த்தாள். முகத்தைச் சிலையாக வைத்துக் கொண்டேன்.

'தனியவா வந்தீங்க?' என்று கேட்டேன்

'இல்ல பிரேம் கொண்டந்து விட்டிட்டுப் போறான். அவனுக்கு வேலையாம்.'

'அப்புறம்?'

'எப்பிடி இருக்கீங்க?'

'நான் நல்லா இருக்கன்.'

'நீங்க?'

'நாங்களும் நல்லா இருக்கம்.'

'என்ன விஷயமா இங்க வந்தீங்க?'

கவிதா சமையல் அறைக்குள் சென்றாள்.

'எல்லாம் உங்களப் பார்க்கத்தான்.'

'நாங்க நேரடியாக் கதைப்பமா?'

'அதுக் கென்ன? உங்களுக்குப் பிடிச்சிருக்கா தங்கச்சியை?'

'அதுக்கு முதல் எனக்கு அவளப் பிடிச்சிட்டுது...' எனக் கவிதாவைச் சுட்டிக் காட்டினேன்.

'என்ன சொல்லுறியள்?'

'அவள் பெயர் கவிதா. நானும் அவளும் லவ் பண்ணுறம்...'

'அப்ப ஊரில ஏன்?'

'அது நான் ஒரு வருஷத்துக்கு முன்னம் எழுதினது... அதுக்கு இப்பதான் அவை—'

'இதில ஒரு மாற்றமும் இல்லயே...'

'இதில என்ன மாறுறதுக்கு இருக்கு?'

கவிதா தேநீருடன் வந்தாள். நான் கவிதாவைக் காட்டி, 'இவதான் கவிதா. என் வருங்கால மனைவி...' என்றேன்.

'ரீ குடிங்க...' கவிதா டீயை நீட்டினாள்.

'தாங்ஸ்' இளங்கோ எடுத்துக் கொண்டான்.

சிறிது நேரம் மௌனம் குடிகொண்டது.

'ஊருக்கு என்ன பதில் சொல்லுறது?' என்று, மௌனத்தைக் கலைத்து, இளங்கோ கேட்டான்.

'எப்பிடிச் சொன்னாலும் சரிதான்.'

'உங்களுக்கு அதால பிரச்சன இல்லயே?'

'ச், எப்பவோ ஒரு நாளைக்கு பிரச்சினையச் சந்திக்கத் தானே வேணும்?'

'சரி, அப்ப நான் போட்டுவாறன்...'

'உங்களுக் கொண்டும் கோபமில்லையே?'

'இதில நான் கோவிக்க என்ன இருக்கு? உங்க வாழ்க்கை நீங்க டிசைட் பண்ணுறீங்க...'

'தனியாப் போவீங்களா?'

'அது நான் போயிடுவன். தாங்ஸ் நீங்க கேட்ட துக்கு...'

இளங்கோ சென்று விட்டான். அவன் முகத்தில் சிறிது வாட்டம் இருந்தாலும், பெரிதாய்க் காட்டிக் கொள்ளவில்லை. அவன் பழகிய விதம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. இவன் இப்படிப் பழகினால், இவன் தங்கை எப்படி மென்மையாய் பழகுவாள்? சிறிது நேரம் நான் கற்பனையில் மிதந்தேன்.

'றமணா!' கவி உலுக்கிய பின்புதான் நான் நினைவுக்கு வந்தேன். கவி என்னைக் கட்டிப்பிடித்து முத்தமழை பொழிந்தாள். நான் சற்று கிறங்கித் தான் போய் விட்டேன்.

'இப்ப என்ன நடந்திச்சு உனக்கு?'

இனி என்ன நடக்கணும்? என்னை உங்க மனைவி எண்டு சொல்லீட்டியள்.'

அவள் கண்களில் நீர் கோத்துக் கொண்டது.

'உன்ன வைஃப் எண்டு சொல்லாமல் வேற எப்பிடிச் சொல்லுறதடா?'

'உண்மையா?'

'ம்ம் உண்மயா.'

'ம்......' எனக்கு நோகாது அடித்தாள். அவளை அப்படி அடிக்கவிடாது, என்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டேன்.

'வீட்டில என்ன கலாட்டா நடக்குதோ தெரியாது...'

'ஏன் பிரச்சனப் படுவினமோ?'

'பின்ன ஆலாத்தி எடுப்பினமா?'

7

நான் மத்திய புகையிரத நிலையத்தில் நின்றேன். நந்தனும் கவிதாவும் கூடவே நின்றனர். நான் எங்கோ புறப்பட்டிருந்தேன். என்னைப் பயணம் அனுப்பவே கவிதாவும் நந்தனும் வந்திருந்தனர். மத்திய புகையிரத நிலையம் துடிதுடிப்பாய் இயங்கியது. ஆடவரும் பெண்டிரும் வெள்ளையும் கறுப்பும்கூட்டமாக ஒரேமனித மயமாய் இருந்தது. கவியை விட்டுப் பயணம் போவதற்கு எனக்கு விருப்பம் இல்லை. நான் கட்டாயம் போக வேண்டிய நிலைமை. நான் போயே தீரவேண்டும் என்பது முடிவாகிய ஒன்று. ஆனால் என்மனம் ஒப்ப

வில்லை. என்னால் கவியை விட்டுப் போகமுடியவில்லை.

சினம் வந்தது. எப்படி வந்தேனோ தெரியவில்லை. மேல்தளத்தில் உள்ள காப்பி பாருக்கு வந்து விட்டேன். கீழே அதே இடத்திலேயே கவியும் நந்தனும் நின்றனர். அவர்களைப் பார்த்தேன். கவிக்குக் கண்கள் கொவ்வைப்பழ நிறத்தில் இருந்தன. வாய்விட்டு அரற்றாத குறை. மற்றும்படி அவள் மனசுக்குள் அழுது கொண்டிருந்தாள்.

ஒருகணம் நான் கவிக்கு ஏற்றவன் இல்லையோ எனத் தோன்றியது. நந்தனையும் கவியையும் பார்த்தால் அவர்கள் இருவரும் இணைந் திருந்தால் நல்ல பொருத்தமாய் இருக்கும் போலத் தோன்றியது. இது இனி நடக்காது. என்னால் இனி அவளை மறக்க முடியாது. அவளால் என்னை மறக்க முடியாது.

நான் காதலைப் பெரிதாக நம்பவில்லை. எனக்கும் கவிக்குமிடையில் நல்ல புரிந்துணர்வு உண்டு. அதுதான் இந்த ஈடுபாட்டிற்கு காரணம் என நான் எண்ணினேன். நாங்கள் நியாயமான வியாபாரிகள். நியாயமான வியாபாரிகளுக் கிடையேயான நட்பாய்த்தான் நான் எண்ணினேன். சற்று வித்தியாசம் உண்டு எனவும் தோன்றியது. இதில் சற்று இறுக்கம் உண்டு. அது இனக் கவர்ச்சியால் உண்டாகும் இறுக்கம். நான் கவியைப் பார்த்து அவளது உடம்பைப் பார்த்து என் உடல் தேவைகளையும் உணர்ந்துதான் அவளில் விருப்பங் கொண்டேன். என் உடல் தேவை முக்கிய காரணம். நாம் இருவரும் பழகும் வரைக்கும் எங்களுக்குள் ஒரு நட்பு இருந்தது. ஆம்; தூய நட்பு இருந்தது. எப்போது எங்கள் பண்டமாற்று முடிந்தாலும் பார்க்குமிடத்தில் நான் 'ஹாய்' சொல்லுவேன். அவளை வெட்டவேண்டும், குத்த வேண்டும் எனத் தோன்றாது. அவள்

எனக்குச் சிநேகிதி. எப்போதும் சிநேகிதியாய் இருக்க வேண்டுமெனத்தான் எண்ணுவேன்.

நான் மேல் படியில் இருந்து பார்த்துக் கொண்டிருக்கும் போதே பத்துப் பேர், அதுவும் எம் நாட்டவர், கைகளில் கட்டைகளுடன் உள்ளே வந்தனர். என்ன செய்யப் போகின்றனர்? எதற்கு இங்கு வருகின்றனர்? ஒருவன் 'சாற' த்தோடு வந்தான். இது என்ன கூத்து? யாரையோ தேடுகின்றனர்? யாரை எதற்காகத் தேடுகின்றனர்? ஒன்றும் புரியவில்லை. நந்தனும் கவியும் அதே இடத்திலேயே நின்றிருந்தனர். புகையிரத நிலையத்தில் இருந்த சுதேசிகள் எல்லாரும் ஒருகணம் திகைத்தனர். அது கலைந்து என்ன நடக்கின்றது என உன்னிப்பாய்ப் பார்க்கத் தொடங்கினர்.

தேடி வந்தவர்களில் ஒருவன் மேலே பார்த்தான். என்னைப் பார்த்துவிட்டான். பார்த்தவன் கத்தினான். 'டே, இஞ்ச நிக்கறானடா... ஓடியாங்க... இங்க நிக்கிறானடா...'

நான் திகைத்துப் போய் சிலகணம் நின்றேன். அவர்கள் முன்னேறி வந்தனர். என்னைத் தாக்கவேண்டும் என்கின்ற வெறி அவர்கள் கண்களில் தெரிந்தது. நான் அகப்பட்டால், என்னைக் கொல்லுவார்கள் எனத் தோன்றியது.

நான் தப்பிப்பதற்கு வழி பார்த்தேன். அவர்கள் இயந்திரப் படியால் ஏறி வந்தனர். நான் ஓடிப் போய் சாதாரண படிகளால் இறங்கத் தொடங்கினேன். (இது ஏறுவதற்கு இயந்திரப் படியையும் இறங்குவதற்கு சாதாரணப் படியையும் கொண்டது.) அவர்களுக்கு என் நோக்கம் புரிந்துவிட்டது. சிலர் ஓடும் இயந்திரப்படியை எதிர்த்து இறங்கத் தொடங்கினர். அது இலகுவல்ல. அதிக நேரம் அதில் போராட வேண்டி இருந்தது.

ஆனால் எல்லோரும் அப்படிச் செய்யவில்லை. சிலர் மேலே சென்று பின்பு சாதாரண படிகளால் இறங்கி என்னைத் துரத்தத் தொடங்கினர்.

நான் இப்போது ஓடத் தொடங்கினேன். என் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதே எனது நோக்கமாய் இருந்தது. நான் யாரையும் பார்க்கவில்லை. கவியும் நந்தனும் என்னவானார்கள் எனப் பார்க்கவில்லை. அவர்கள் எங்கே? கவியையும் நந்தனையும் விட்டுவிட்டுப் போக மனம் வரவில்லை. திரும்பிப் பார்த்தேன். மிக அருகில் என்னைத் துரத்திக் கொண்டிருந்தனர். இனி எதைப் பற்றியும் சிந்திக்க நேரமில்லை. நான் ஓடினேன். என்னால் இயன்ற கடைசி வேகமெடுத்து ஓடினேன். எங்கு செல்வதெனத் தெரியாது ஓடினேன். அவர்கள் விடவில்லை. மூர்க்கத்தனமாகத் துரத்திக் கொண்டு வந்தார்கள். நான் என்ன செய்வது, ஏது செய்வது எனப் புரியாமல் இயலுமட்டும் வேகமெடுத்து ஓடினேன். நெஞ்சுக்குள் வலித்தது. இனி என்னால் ஓடமுடியாது போல் தோன்றியது. நான் ஓடாமல் நிற்க முடியாது. அப்படி நின்றால் என்னைக் கொன்று விடுவார்கள். நான் சாக விரும்பவில்லை. வாழ விரும்பினேன். இவர்களிடம் இப்போது தப்பினால்தான் நான் இந்த உலகத்தில் வாழ முடியும். எப்படி இவர்களிடமிருந்து தப்பிப்பது? எங்கு செல்வது? எவரிடம் செல்வது? எல்லோரும் என்னை வேடிக்கை பார்க்கிறார்கள். எனக்கு எவரும் உதவி செய்ய முன்வரவில்லை. எல்லோரும் என்னை அந்நியமாகப் பார்க்கிறார்கள். பரிதாபப் படுகின்றனர். ஆனால், எனக்கு எவரும் உதவி செய்ய முன்வரவில்லை. நான் இயலுமட்டும் ஓடினேன். ஆனால் இப்போது ஓட முடியவில்லை. அதே வேளை நிற்கவும் முடியவில்லை. கண்ட பாட்டிற்கு ஓடினேன். கட்டடங்களுக்குஊடாகவும் சனங்களுக்கு ஊடாகவும் நுழைந்து ஓடினேன். எப்படி ஓடியும் பயனில்லை. அவர்கள் தொடர்ந்து கொண்டே

வந்தனர். எனக்கு மயக்கமே வரும்போல் தோன்றியது. இப்படியான நிலையில் இருக்கும்போதுதான் நான் அந்தக் கட்டடத்திற்குள் நுழைந்தேன். அது ஆறு மாடிக் கட்டடம். எல்லா விதமான கடைகளும் நிரம்பிய ஒரு கட்டடம். நான் உள்ளே ஓடினேன். லிப்ட் மூடுவதற்குத் தயாராய் இருந்தது. நான் ஓடிப் போய் அதில் ஏறிக் கொண்டேன். லிப்ட் உயர்ந்தது. இரண்டு பக்கமும் கண்ணாடியால் ஆன லிப்ட். அதனால் கீழே பார்க்கக் கூடியதாக இருந்தது. அவர்கள் மற்ற லிப்டுக்காக காத்திருந்தனர். எல்லோரும் காத்திருக்கவில்லை. ஒரு பகுதி படிகளால் ஏறத் தொடங்கியது. எனக்கு மூளை வேலை செய்தது. எப்படி இவர்களிடத்தில் இருந்து தப்புவது? நான் லிப்டில் இருந்து இறங்கி ஓடினேன். எப்படியாவது தப்ப வேண்டும் என்பதுதான் என் நோக்கம். அடுத்த லிப்ட் வந்துவிட்டது. அதில் இருந்து அந்தத் தடியர்கள் ஓடி வந்தார்கள். நான் எதுவும் செய்ய முடியாது ஒரு கணம் திகைத்து நின்றேன். பின்பு என் நிலையை நினைத்து அவர்களிடமிருந்து தப்பிக்க கீழே ஓடினேன்.

கீழே ஓட முடியவில்லை. படிக்கட்டால் ஓடிவந்தவர்கள் வந்து சேர்ந்துவிட்டார்கள். இனித் தப்பிப்பதற்கு வழி இல்லை. எந்த வழியும் இல்லை. நான் சாகப் போகின்றேன். எனக்கு சாவு நிச்சயிக்கப்பட்ட ஒன்றாகி விட்டது. அவர்கள் இரு பக்கமும் 'பொல்லு'களுடன் என்னை நெருங்கினார்கள். நான் எங்கும் ஓட முடியவில்லை. கையிரண்டும் தடுப்புக் கம்பிகளைப் பிடிக்க நான் அசைய முடியாது நின்றேன். என்னை அவர்கள் நெருங்கினார்கள். ஒருவன் என் நெஞ்சைப் பிடித்துத் தள்ளினான். நான் எகிறுப்பட்டு தடுப்பிற்கும் அப்புறம் தொங்கினேன். என் கைகளிரண்டிலும்தான் என் வாழ்க்கை தொங்கிக் கொண்டிருக்கிறது. நான் கீழே பார்த்தேன். நெஞ்சு திக்கென்றது. கையை விட்டால்?

நான் முடிவு செய்துவிட்டேன்; இதுதான் என் வாழ்க்கையின் கடைசி நிமிடங்களென. அந்தத் தடியர்கள் என்னை கொடூரமாகப் பார்த்தனர். அவர்கள் என்னைக் காப்பாற்றவோ உதவி செய்யவோ விரும்பவில்லை. நான் உயிருக்கு ஊஞ்சலாடுவதைப் பார்த்தும் அவர்கள் முகத்தில் பழிவாங்கும் குரோதம் தாண்டவமாடியது. நான் கத்தினேன். 'ஹெல்ப்...ஹெல்ப்' எவரும் பொருட்படுத்தவில்லை. காது கேட்காதவர்கள் போல அவரவர் பாட்டில் சென்று கொண்டிருந்தனர். நான் சாப் பயத்தில் அஞ்சி நடுங்கினேன். எனது நடுக்கம் அந்தத் தடியர்களுக்கு இரக்கத்தை உண்டு பண்ணவில்லை. அதற்குப் பதிலாய் அவர்களில் வளர்ந்த ஒருவன் 'முறை'த்த வண்ணம் என்னை நோக்கி வந்தான். நான் எதிர்பார்க்காத நேரத்தில் ஓங்கி என் கைமீது அடித்தான். 'கவ்!' என்னால் இயன்ற மட்டும் கத்திய வண்ணம், நான் கீழே விழுந்தேன்.

'என்னடா, என்ன நடந்திச்சு?'

நந்தன் என்னை உலுக்கினான். நான் 'திருதிரு' என விழித்தேன். உடலெல்லாம் வியர்த்திருந்தது. ஓ, நான் இவ்வளவு நேரமும் கனாவா கண்டேன்? நந்தன் உலுப்பினான்.

'கனாக் கினா கண்டியா?'

'ம்ம்ம்...?

'ச், கனாக் கண்டியா? இப்பிடிக் கத்துறாய்?'

'ம் கனாத்தான்.'

'ஏன்ரா உடம்பெல்லாம் வேர்த்திருக்கு?'

'அது...பயங்கரமான கனா.'

'ரொம்பப் பயந்திட்டா போல இருக்கு...'

'ம்...'

'ஏன் அப்பிடி என்ன கண்டாய்?'

'என்னை கொல்ர மாதிரிக் கனவு கண்டன். என்னை மாடில இருந்து தள்ளி விழுத்திக் கொல்லுர மாதிரி கனவு கண்டன்.'

'சும்மா, இந்தத் தமிழ்ப்படங்களப் பாக்கிறதால வாற வில்லங்கம்...'

'உண்மைதான். இண்டைக்கு எனக்கு என்னவோ பயமா இருக்கு...'

'சே, படடா. மனச ஈசியாக்கிட்டுப் படு. கவிதாவ நினைச்சுக் கொண்டு படு...'

நந்தன் தூங்கிவிட்டான். எனக்குத் தூக்கம் வரவில்லை. என் மனசில் ஏதோ ஒரு இனந்தெரியாப் பயம் நிலைத்தது. ஏன் என்பது புரியவில்லை. இது அர்த்தமற்றது என்பது புரிந்தது. அதே வேளை, அதை ஒதுக்கிவிடவும் முடியவில்லை. எதற்காக இப்படிக் கனவு வந்தது? நான் ஊரை மறந்தே பல வருடங்களாகிவிட்டன. அப்படி இருந்தும் இன்னும் என் மூளையில் ஊர் நினைவின் எச்சங்கள் இருந்து கொண்டுதான் இருக்கின்றன.

நந்தன் சாதுவாய் குறட்டைவிடும் சத்தம் கேட்டது. எனக்கு அவன் அப்படித் தூங்குவதைப் பார்க்க பொறாமையாகவும் எரிச்சலாகவும் இருந்தது. நானும் அப்படித் தூங்கமுடியவில்லையே என மனசு அலட்டிக்கொண்டது. காலை நான்கு மணிக்குப் பிறகுதான் தூக்கம் வந்தது. ஆறு மணிக்கு அலாமடித்தது. மணிக்கூட்டின்மீது கோபமாய் வந்தது. நான் மணிக்கூட்டைக் கோபித்துக்கொண்டிருக்கும் போதே, நந்தன் எழுந்து சென்று அலாமை அடக்கிவிட்டான். நிம்மதியாய் இருந்தது. நான் மீண்டும் இழுத்துப் போர்த்திக்கொண்டு படுத்தேன். அப்படியே அசந்து தூங்கிவிட்டேன். சிறிது நேரம்தான் சென்றிருக்கும். நான் எழுந்திருக்காததைப் பார்த்த நந்தன் என்னை எழுப்பினான். 'றமணா, றமணா எழும்புடா! வேலைக்குப் போறேல்லேயே?'

நந்தன்தான் எனக்கு இப்போது முதல் எதிரியாகத் தோன்றினான். நீ, இப்படித் தொந்தரவு செய்கிறானே என எண்ணிய வண்ணம் எழுந்திருந்தேன்.

எழுந்த பின்பு நான் சற்று முன்பு கோபித்தது சரியானதா என்னும் கேள்வி என்னுள் எழுந்தது. தப்புத்தான். நான் இப்படிக் கோபப்படுவது தப்புத்தான். நந்தன் தன் நலத்திற்காக என்னை எழுப்பவில்லை. என் நலத்திற்காகத்தான் என்னை எழுப்பினான். அதற்குமேல் நான் படுக்கையில் இருக்கவில்லை.

மத்திய புகையிரத நிலையத்தில் நிற்கும்போதுதான் எனக்கு அந்த நினைவு வந்தது. உடனேயே நான் அதைச் செயற்படுத்தினேன். கவிதாவுக்கு போன் பண்ணினேன். அதிர்ஷ்டவசமாய் அவள் வீட்டில் நின்றாள்; போன் அடித்ததும் அவள்தான் எடுத்தாள்.

'ஹலோ?'

'நான் றமணன் கதைக்கிறன்.'

'சொல்லுங்கோ என்ன விசயம்?'

'உன்னோட கதைக்கோணும்.'

'அதுதான் டெயிலி செய்யிறமே.'

'இல்ல கவி. நான் இப்ப சீரியஸாக கதைக்கிறன்.'

'என்ன றமணா? என்ன நடந்திச்சு?'

'ஒண்டும் பெரிசா இல்ல. நீ வீட்டுக்குவா அங்க சொல்லுறன்.'

'ம்...சரி.'

'அப்ப வைக்கிறன்.'

'எத்தின மணிக்கு வாறது?'

'வழம போல வா.'

'சாத.'

'சாத.'

எனக்கு இப்போது ஓரளவு நிம்மதியாய் இருந்தது. கவியுடன் கதைத்தால் மனசு முழுநிம்மதியையும் அடையும் போல் தோன்றியது. நான் சந்தோஷமாய் வேலைக்குச் சென்றேன். என் மனதில் பல கேள்விகள். நான் கவி மூலம் நிம்மதி அடைகிறேன் என்றால் அதற்கு என்ன காரணம்? அவள் எனக்குக் கிடைத்த பெண் நட்பு என்ப

தால் நிம்மதி அடைகிறேனா? அல்லது அவளை நான் காதலிப்பதால் அவளுடன் கதைப்பது எனக்கு நிம்மதியைத் தருகின்றதா? முதலில் இப்படி எண்ணுவதையே நிறுத்த வேண்டும். ஏன் நான் அர்த்தமற்ற விதமாய் எல்லாம் எண்ணுகிறேன். முடிவாய் இருக்கவேண்டும். நானும் கவியும் பழகுவதற்குப் பெயர் காதல் அல்ல. இது நட்பு. தூய்மையான நட்பு. அவளின் மென்மையான நட்பை என் முரட்டு மனம் தேடுது. இது பால்க் கவர்ச்சியால் தோன்றியது. பின்பு இறுக்கமான நட்பாய் மாறியது. இந்த நட்பு எப்போதும் இறுக்கமாய் இருக்கும். இது காதல் அல்ல.

ஆணுக்கும் ஆணுக்கும் இறுக்கமான நட்பு இருந்தால் அதை காதல் என்று எவராவது கூறுவதுண்டா? அதே நட்பு ஏன் ஆணுக்கும் பெண்ணுக்கும் இருக்கக்கூடாது? ஆணும் பெண்ணும் இறுக்கமான நட்புகொண்டிருந்தால் அதையேன் இவர்கள் காதல் எனக் கொச்சைப் படுத்துகின்றனர்?கேள்விகள். ஆயிரமாயிரம் கேள்விகள். விடை காணமுடியாத கேள்விகள். விடை காண வேண்டும்.

கவி இன்று அழகாய் இருந்தாள். அவள் நமது மரபு உடையில் வராவிட்டாலும், இந்த ஐரோப்பிய உடை அவளுக்கு அழகாய்த்தான் இருந்தது. ஜீன்ஸ் அணிந்திருந்தாள். அதே நிற அதே துணியிலான சட்டை போட்டிருந்தாள். ஜீன்சுக்குள் சட்டையைவிட்டுமெல்லிய பட்டியால் இறுக்கி இருந்தாள். அவள் இடை எனக்கு சூடேற்றியது. இந்த இடை என்னைத் தாங்குமா என நினைத்தேன். கட்டை ஜீன்ஸ் கணுக்காலுக்கு மேலே அரையடி இருக்கும் போதே நின்று விட்டது. அந்த இடைவெளியை சொக்ஸ்கூட மறைக்கவில்லை. அதுவும் கட்டையே. அவள் காலில் தெரிந்த அந்த இடைவெளி ஒருவித கவர்ச்சியையும் அழகையும் தந்தது.

முகம் இலேசான உதட்டுச் சாயத்துடன் அன்று மலர்ந்த பூவாக அழகு காட்டியது. அவளைப் பார்க்கப் பார்க்க

இன்பம் பொங்கியது. நான் மூர்க்கமாய் அவளைக் கட்டி அணைத்து முத்தமிட்டேன். அவள் என் உடல் மீது படர்ந்தாள். அவள் காதைக் கடிக்க வேண்டும் போல் தோன்றியது. நான் அப்படிச் செய்யாது, அதில் மென்மையாய் முத்தமிட்டேன். அவள் தலையில் முத்தமிட்டேன். அவள் நெற்றியில் முத்தமிட்டேன். அவள் மூக்கில் முத்தமிட்டேன். அவள் இதழில் முத்தமிட்டேன். அவள் எலும்பு முறியுமளவிற்கு அவளை என்னுடன் இறுக்கி அணைத்துக் கொண்டேன்.

'றமணா?'

'இது பிடிக்காம போகுமா?'

'அப்படி ஏன் கேக்கிறாய்?'

'இல்ல உங்க மனசில ஏதோ இருக்கு றமணா...அது தான் இண்டைக்கு நீங்க இப்பிடி...'

நான் கவியை என் அணைப்பில் இருந்து விடுவித்தேன். கவிக்குப் புரிகிறது. மற்றவர்களின் மனசைப் படிக்கத் தெரிகிறது. இவளுக்கு நல்ல புரிந்துணர்வு இருக்கின்றது. இவளால் என்னைப் புரிந்து கொள்ள முடிகிறது. என்னால்......?

'நான் கதைச்சது பிடிக்கல்லயா?'

'இல்லடா. உன் நட்புக்கு நான் ஏத்தவனா எண்டு இன்னும் புரியல்ல...'

'ஏன் உங்களுக்கு என்ன குறை?'

'நான் செத்துப் போயிடுவனோ எண்டு தோன்றுது.'

'என்ன றமணா குழந்தை மாதிரி.'

அவள் தன் மார்போடு சேர்த்து என்னை அணைத்துக் கொண்டாள்.

'இல்லைக் கவி, எனக்குப் பயமா இருக்கு...'

'என்ன நடந்திச்சு றமணா? ஏன் இப்பிடிக் கதைக்கிறாய் றமணா?'

'நான் ராத்திரிக் கனாக் கண்டன். மாடில இருந்து தள்ளி விட்டுச் சாகிறதா கனாக் கண்டன். எனக் கேதோ பயமா இருக்கு. என் மனசே சரியில்ல...'

'என்ன றமணா?'
'ஏதோ நடக்கப் போகுது. எனக்கு கனவில எல்லாம் நம்பிக்க இல்ல. நான் இத நம்புறன்.'
'இப்பிடி எல்லாம் கதைக்காத றமணா. நீ இப்பிடிக் கதைச்சா நான் செத்திடுவன்.'
'சரி நான் அப்பிடிக் கதைக்கேல்ல.'
'உனக் கொண்டு தெரியுமா றமணா?'
'என்ன?'
'கனவுக்கு பலன் எதிர்மாறா இருக்குமாம்.'
'எப்பிடி?'
'சாகிறது மாதிரிக் கனாக் கண்டா நல்லது நடக்குமாம்...'
'நல்ல தெண்டா?'
'கலியாண வீடு...அப்பிடி ஏதாவது...'
'அப்ப எனக்கு நல்லதுதான் நடக்குமா?'
'நிச்சயமா நல்லதுதான் நடக்கும் றமணா.'

நான் சிரித்தேன். என்மனதில் உள்ள கவலைகள் நீங்கி விட்டது போன்ற உணர்ச்சி என்னுள் இருந்தது. அவளின் மடியில் தலை வைத்துப் படுப்பது ஒருவித சுகத்தைத் தந்தது. அப்படியே சிறிது நேரம் படுத்திருந்தேன்.

'இராத்திரி கானாக்கண்டு எழும்பேக்க உடம்பெல்லாம் வேர்த்து நனைஞ்சு போய் இருந்திச்சு...'
'கனாக்கண்டு பயந்திருப்பியள்...' அவள் இதழோரம் நமட்டுச் சிரிப்பொன்று தவழ்ந்தது.
'ச்......எல்லா நாளும் கனவா காண்றன்?'
'கனகாலமா வேர்க்குதா?'
'ஒரு வாரமாகவே இரவில வேர்க்குது. தலை இடி வேற.'
'ஜன்னலை திறந்திட்டோ படுக்கிறனீங்கள்?'
'ம்......'
'டீனர்?' (போர்வை)

'மெல்லீசுதான்.'
'அப்ப எப்பிடி?'
'தெரியேல்ல.'
'ஏதும் சின்ன வருத்தமா இருக்கும். ஆவ்தால (நேரம் பதிவு பண்ணுதல்) எடுத்திட்டு போய் டொக்ரரைப் பாக்கிறதுதானே?'
'ம்...பாக்கத்தான் வேணும்...'
'பாக்கத்தான் வேணுமில்ல; பாருங்க...'
'ஓகே மேடம்!'
'சீ...உங்களுக்கு எப்பவும் பகிடிதான்...'

நான் அவளைக் கூட்டிச் சென்று புகையிரத நிலையத்தில் விட்டேன். புகையிரதம் செல்லும்போது அவள் கைகாட்டினாள். நானும் காட்டினேன். புகையிரதம் சென்றுவிட்டது. நான் வீட்டிற்குத் திரும்ப எண்ணிய போதுதான் கெய்தியின் எண்ணம் ஏனோ என் மனசில் திடீர் எனத் தோன்றியது. எவ்வளவு காலம் அவளைப் பார்த்து? ச், உடலுறவு தேவையில்லை.
சிறிது நேரமிருந்து கதைத்து விட்டுத் திரும்பிவிட வேண்டும் என முடிவு செய்தேன். தொலைபேசியில் தொடர்பு கொண்டு போவதுதான் நாகரிகம். தொடர்பு கொண்டேன். உபயோகத்தில் இல்லாத எண் என பதிவுநாடா கூறியது. என்ன நடந்தது இவளுக்கு? அதற்கிடையில் ஏன் தொலைபேசியை துண்டித்து விட்டாள்? கேள்விகள் பல என்னுள் எழுந்தன. திரும்பி போய் விடலாம் என ஒரு கணம் எண்ணினேன். உடனேயே ஓர் ஆர்வமும் பிறந்தது. என்னதான் அவளுக்கு நடந்தது எனப் பார்த்துவிட வேண்டும் என முடிவு செய்து கொண்டு புறப்பட்டேன்.

அவளின் வீட்டுற்குச் சென்று அழைப்பு மணியை ஒரு முறை அழுத்திவிட்டு அவள் வரவிற்காக காத்திருந்தேன். அவள் வரவில்லை. மறுமுறையும் அழுத்தினேன். அலுப்படித்தது. இருந்தும் பலமுறை முயன்

றேன். எந்தப் பதிலும் இல்லை. திரும்ப நினைத்தேன். அப்பொழுது முன் வீட்டிற்குச் செல்வதற்கு ஒரு பெண் வந்தாள். அவள் அழகு என்னை ஒருமுறை அசத்தியது. 'ஒகாட்' என்னை அறியாமலே முணுமுணுத்தேன். பின்பு என் மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு செய்தியைப் பற்றி அவளிடம் விசாரிக்க எண்ணினேன்.

'ஹாய்...'

அவள் கேள்விக் குறியோடு என்னைப் பார்த்துவிட்டு, 'ஹாய்...' என்றாள்.

'உன்சில் (மன்னிக்கணும்). இந்த வீட்டில இருந்த வங்க எங்கே?'

'இல்ல எண்டு நினைக்கிறன்.'

அங்கு நிற்க விருப்பம் இல்லாதவள்போல் விரைவாகச் சென்றுவிட்டாள். அப்படி போகும்போது அவள் பார்த்த பார்வையில் ஏதோ ஒரு விநோதம் இருந்தது. அவள் என்னை ஏன் அப்படி விநோதமாய்ப் பார்த்துக் கொண்டு செல்கின்றாள்?

நான் குழம்பிக் கொண்டிருக்கும்போது அந்த வழியால் ஒருவன் வந்தான். அவன் பார்வைகூடஏதோபாவப்பட்ட விலங்கைப் பார்ப்பது போல இருந்தது. என்ன நடந்தது இவர்களுக்கு? ஏற்கனவே எங்களைப் பார்க்கும்போது கறுப்பர் என்கின்ற இழிவுடன்பார்ப்பார்கள். அது எமக்கு பழகிய ஒருவிதமான பார்வை. ஆனால், இது மிகவும் வித்தியாசமானதொரு பார்வை.

ஏன் இப்படிப் பார்க்கிறார்கள்? செய்திக்கு ஏதாவது நடந்திருக்குமோ? அப்போதுதான் அது எனக்கு மூளையில் உறைத்தது. இவள் தூள் பாவித்தவள் அல்லவா? அதோடு அல்வும் பெத்தரும் தூள் வியாபாரம் செய்பவர்களாய் இருக்கலாம். இருக்க வேண்டும். அது சிலவேளை காவலர்களுக்குத் தெரிந்து கைது செய்து விட்டனரோ? அதுதான் என்னை இவர்கள் இப்

படிப்பார்த்துக் கொண்டு செல்கின்றனரோ? மூளை குழம்பிக் கொண்டிருந்தது.

மத்திய புகையிரத நிலையத்திற்கு வந்து சேர்ந்தேன். இனி எங்கு செல்வது? வீட்டிற்குத்தான்.

8

வீட்டில் நந்தன் வந்திருந்தான். நான் உள்ளே சென்றேன். அவன் சாப்பாடு எடுத்து வந்து சாப்பிடத் தொடங்கினான். நான் தொலைக்காட்சியை இயக்கினேன். அதில் ஏதோ ஒரு இசை நிகழ்ச்சி போய்க் கொண்டிருந்தது. சுத்த அறுவை. நான் அலைவரிசையை மாற்றினேன். இரண்டாவது அலைவரிசையில் 'அம்மா காதல்' என்னும் படம் போய்க் கொண்டிருந்தது. இவர்களின் படங்கள் பார்க்கலாம். அதில் நிஜம் இருக்கும். நூற்றுக்கு எண்பது வீதமாவது நிஜம் இருக்கும். சில வேளை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாய் இருந்தாலும், நடக்கக் கூடியதாய் இருக்கும். கற்பனையைக்கூட நிஜம்போல எடுப்பார்கள். இப்படியான படங்கள் பார்க்கும் போதுதான் தமிழ்ப்படங்களின் மட்டமான தரம் புரியும். தமிழ்ப்படமே பார்க்கக்கூடாது என்று எண்ணத் தோன்றும்.

நான் சிந்தனையில் ஆழ்ந்திருக்கும்போதே நந்தன் சாப்பிட்டு முடித்து, சோபாவில் வந்து அமர்ந்தான்.

'என்ன யோசிச்சுக்கொண்டுஇருக்காபோல இருக்கு.' நீ படம் பார்க்கிற மாதிரித் தெரியல்ல...'

'ச், அதொண்டுமில்ல'

'ஒரு விஷயம் தெரியுமோ?'

'என்ன?'

'இளங்கோவத் தெரியும் எல்லோ?'

'சுத்தி வளைக்காம சொல்லு?'

'அவர்ர தங்கச்சிக்கு வாற சனி கல்யாணமாம்.'

'வாவ்'

'சந்தோஷப் படுறா போல இருக்கு?'

'ஒரு தொல்ல தீந்த சந்தோஷம். இதுக்கு சந்தோஷப்படாம வேற எதுக்கு சந்தோஷப்பட முடியும்?'

'என்னை வரச்சொல்லிச் சொன்னார் போன்ல... உனக்கும் சொல்லச் சொன்னார்...'

'ச் டென்மார்க் போயிட்டுவர, இஞ்ச வேல இருக்காது...'

'ம் அதுதான் நடக்கும். காட்டும் பிரசெண்டும் அனுப்பி விடுவம்.'

'நீ சொல்லுறது நியாயம்.'

'படுப்பமாடா?'

'நந்தா!'

'என்ன?'

'கொஞ்சம் ஜன்னல கூடுதலா திறந்துவிடு.'

'இன்னுமா? உனக்கு குளிரல்ல?' அவன் முகத்தில் ஆச்சரியம்.

'வேர்க்குதடா இரவில.'

'சரியாக் கொழுப்பிருக்கு உடம்பில... அதுதான் இப்பிடி வேர்க்குது...'

'கொழுப்போ வருத்தமோ தெரியல்ல, ஆனா வேர்க்குது...'

நாங்கள் தூங்கிவிட்டோம். தூக்கம் நீடிக்கவில்லை. ஒரு இரண்டு மணித்தியாலம் தூங்கி இருப்பேன். என் தூக்கம் கலைந்தது. நான் விழித்தபோது அதிர்ந்து போனேன். என் உடம்பெல்லாம் தெப்பமாய் வியர்த்து நனைந்திருந்தது. நான் படுக்கையில் இருந்து எழும்பினேன். 'டுனரை' எடுத்து தூரே தள்ளினேன். டுனரைப் பார்க்கக் கோபம்தான் வந்தது.

நான் இப்படிச் சிறிதுநேரம் இருந்தேன். நான் இப்படி இருப்பதை எப்போது உணர்ந்தானோ தெரியாது, நந்தன் விழித்திருந்தான்.

'ஏண்டா? ஏன் இப்ப எழும்பி இருக்கா?'

'கல்வத்த, வேர்க்குதடா.'

'என்ன?'

எழுந்து சென்று வெப்பமானியைப் பார்த்து 'அடக் கடவுளே?' என்றான்.

'என்னடா?'

'பிளஸ் ஐஞ்சில நிக்குதடா.'

'எனக்கு கொஞ்சநாளா உடம்பு சரியில்ல...'

'என்ன செய்யுதடா?'

'இப்பிடித்தான் இரவில வேர்க்குது, தலையிடிக்குது. பயங்கரக் கனவெல்லாம் வருகுது...'

'நாளைக்கு நீ வேலைக்கு போகாதை... லீவு போட்டுட்டு நேர ஹொஸ்பிட்டலுக்கு போ...'

'ம், இவங்கள் கண்டுபிடிச்ச மாதிரித்தான்...'

'அதுக்கென்ன செய்யிறது? சிலோனுக்கு போக முடியுமா என்ன? அப்ப நாளைக்கு கட்டாயம் போ.'

'ம் போறன்.'

'குநாத்.'

'குநாத்.'

அவன் படுத்துவிட்டான். எனக்குத் தொடர்ந்தும் தூக்கம் வரவில்லை. தூங்குவது போலப் பாசாங்கு செய்தேன். அப்புறம் தூங்கியிருக்கவேணும்.

காலைக் கடனை முடிக்கும்போது பத்து மணியாகிவிட்டது. அவசர அவசரமாகப் புறப்பட்டு எமது இடத்தில் உள்ள சிறிய மருத்துவ மனைக்குச் சென்றேன். அங்கும் இலகுவில் நேரமெடுத்துவிட முடியாது. காலில் நோகிறது கையில் நோகிறது என்று கூறினால், நேரம் தந்துவிட மாட்டார்கள். திறமையாக நடிக்க வேண்டும். நான் ஒரளவுதான் நடித்தேன். ஏதோ எனது நல்ல காலம். எனக்கு நேரம் குறித்துத் தந்தாள் அந்த வரவேற்பறையில் இருந்த பெண்மணி. ஒரு மணிக்குத்தான் நேரமிருந்தது. இன்னும் இரண்டு மணித்தியாலங்கள்

காத்திருக்க வேண்டி இருந்தது. எந்த நேரமும் வேலை செய்து கொண்டிருப்பவர்கள் போல அங்குமிங்கும் ஓடித்திரிவார்கள் மருத்துவர்கள். காப்பி குடிக்கும் நேரம் நோயாளிகளைப் பார்க்கும் நேரத்தைவிட அதிகம். நான் அங்கிருந்த சோபாவில் இருந்து பராக்குப் பார்த்துக் கொண்டு இருந்தேன். மனம் எங்கெல்லாமோ அலைந்தது. கெய்திக்கு என்ன ஆகி இருக்குமோதெரியவில்லை. சிலவேளை ஏதாவது சிறையில் இருப்பாளோ? இப்போ போன் செய்து பார்த்தால் என்ன? எதிரே ஒரு நர்ஸ் வந்தாள். அவளைப் பார்த்து,

'ஹாய், எங்க ரெலிபோன் இருக்கு?' என்று கேட்டேன்.

'மேல் மாடிக்கு போங்க, அங்க இருக்கு.'

'தக்.'

'வசகு' (எல்லா இடத்திற்கும் பொருந்தும். பெற்றுக் கொள்ளுங்கள் எனவும் பொருள்படும்.).

ம்...... அழகாகவே இருந்தாள் அந்த தாதி. அவளோடு ஏதாவது கதைத்திருக்கலாம். சீ, இது என்ன சபலம் என என்னையே நொந்த வண்ணம் தொலைபேசியை நோக்கி நடந்தேன்.

டயல் செய்துவிட்டு இன்றாவது பதில் கிடைக்கும் எனக் காத்திருந்தேன். எனக்கு ஏமாற்றமே. நான் அலுப்புடன் போனை வைத்துவிட்டு வந்து இருக்கையில் மீண்டும் அமர்ந்தேன்.

சும்மா இருக்க முடியவில்லை. அங்கு இருந்த புத்தகங்களைப் புரட்டினேன். பல புத்தகங்கள் இருந்தன. அந்தப் புத்தகம்தான் என்னைக் கவர்ந்தது. கர்ப்பத்தடை முறைகள்... உள்ளே சகல கர்ப்பத்தடை முறைகளும், அதைக் கையாளும் முறைகளும், மாதவிடாய் சக்கரமும் படங்களுடன் விபரமாக விளங்கப்படுத்தப் பட்டிருந்தன. இந்தப் புத்தகத்தின் அச்சு எவ்வளவு நன்றாய் இருக்கிறது? அதேபோல் உள்ளேயும் எவ்

ளவு அருமையாக விளங்கப்படுத்தி இருக்கின்றனர். இவர்கள் எதையும் ஒளிவு மறைவின்றி செய்வதால் இவர்கள் உடலுறவுகொள்ளும் வீதத்திற்கு இங்கு கர்ப்பமாகும் வீதம் மிகவும் குறைவு. சராசரிப் பிறப்பு வீதமே ஒன்று தசம் எட்டு. எங்கள் நாட்டில்? நினைக்க எனக்கே சிரிப்பு வந்தது. நான் என்னுள் சிரித்துக் கொண்டிருக்கும் போதுதான் மருத்துவர் வந்து மிகவும் கஷ்டப்பட்டு, 'றம்...ணன்?' என அழைத்தார்.

'நான்தான்'

'உள்ள வாங்க.'

அவர் பின்னால் உள்ளே சென்றேன். எல்லா மருத்துவர்களின் அறையைப் போலவும்தான் இவரது அறையும் இருந்தது. இப்போது ஒவ்வொரு அறைக்கும் ஒவ்வொரு கொம்பியூட்டரும் இருந்தது.

அறைக்குள் வந்த மருத்துவர் தனது சக்கர நாற்காலியில் இருந்த வண்ணம், 'குடாக்' (குடாக் என்றால் நல்லநாள்) என்றார்.

'குடாக்'

'இரு.'

'தக்.'

'ம்...என்ன பிரச்னை?'

'கொஞ்ச நாளா எனக்கு இரவில வேர்க்குது.'

'ரூம் பூட்டிட்டா படுப்பீங்க?'

'இல்ல.'

'டினர் எப்பிடி?'

'மெல்லிசுதான்.'

'கீற்றர் போட்டிட்டுப் படுப்பியளா?'

'கீற்றர் போடுறதில்ல. ஜன்னலும் திறந்திட்டுத்தான் படுக்கிறனான். அப்பிடி இருந்தும் இரவில வேர்க்குது. நேற்றிரவு எழும்பிப் பார்த்ததும் பிளஸ் ஐஞ்சில இருந்திச்சு.?'

'வேற ஏதாவது?'

'தலை யிடிக்கும்.'
'ம்...கலியாணமாயிட்டுதா?'
'இல்ல.'
'சம்பூரா இருக்கியா?' (சம்பூர் என்றால் திருமணம் செய்யாது சேர்ந்து வாழ்தல்)
'எப்பவாவது உடல் உறவு?'
'ம்...ம்......'
'அவளுக்கு ஏதாவது வருத்தம் கிருத்தம்?'
'எனக்கு தெரியாது.'
'தூள் பாவிப்பியா''
'இல்ல......ஆனா ஒருநாள் வெறியில இருக்கேக்க ஊசி போட்டுட்டாங்க.'
'அவள் என்ன தாசி...?'
'ம்ம்...ம் நீங்க நினைக்கிறது சரி...'
'அவள் இப்ப எங்க இருக்கிறாள்?'
'தெரியாது.'
'ஹோமோ செக்ஸ் பீலீங் இருக்கா?'
'இல்ல.'

'இரவில என்னென்ன செய்யுது?' மீண்டும் கேட்டார். எனக்கு இப்போது சலிப்பும் கோபமும் வந்தது. ஒரு சின்ன வருத்தத்திற்கு எவ்வளவு கேள்விகள்? என்றாலும் பொறுமையாக மீண்டும் அவரது கேள்விகளுக்கு விடை கூறினேன்.

'தலையிடிக்குது. சாதுவா காச்சல் காயுது. வேர்க்குது.'
'இன்னுமொரு கேள்விக்கு விடைசொல்லுங்க.'
'என்ன?' எரிச்சலுடன் கேட்டேன்.
'வெளிநாட்டுக்கு போனீங்களா?'
'இல்ல.'
'யா......'பின்புஅமைதியாய் ஏதோ சிலவற்றை எழுதி விட்டு, 'உங்க பெயர இந்த கடுதாசியில எழுதுங்க?'
'ம்...' எழுதிக் கொடுத்தேன்.

'தக்'
'நீங்க லாப்புக்கு போய் இரத்தம் கொடுக்கணும்.'
'ஓ கே. காத.'
'காத.'

நான் வரவேற்பறைக்கு வந்து மருத்துவர்க்கான பணம் தொண்ணூறு குறோணர்களைக் கட்டிவிட்டு லாப் பிற்குச் சென்றேன்.

லாப்பில் ஒரு பெண்ணிருந்தாள். அவள் பெயரை நான் கேட்கவில்லை. இங்கிருந்து சென்றுவிட்டால் போதும் போல் இருந்தது. அந்தப் பெண் தனது கொம்பியூட்டரில் கடதாசி விளையாடிக் கொண்டிருந்தாள். என்னைக் கண்டதும் விளையாடுவதை நிறுத்திவிட்டு சிரித்த வண்ணம் வந்தாள்.

மருத்துவர் தந்த சீட்டை அவளிடம் கொடுத்தேன்.
'நாங்க முதல்ல இரத்தமெடுப்பம்...' எனக்கூறி, எனது வலது முழங்கைக்கு மேலே ஒரு பட்டியால் இறுக்கிக் கட்டினாள். எனக்கு கெய்தி வீட்டில் ஊசி போட்ட ஞாபகம் வரவே எனக்குள் சிரித்துக் கொண்டேன்.

தாதி ஊசியைச் செலுத்தினாள். நான் எதிர்பார்த்தளவிற்கு கடுப்பில்லாமல் இதமாகவே ஏற்றினாள். மூன்று சின்ன 'குப்பி'களில் இரத்தத்தை சேகரித்துக் கொண்டாள்.

'யூரின் வேணும். வீட்டில இருந்து கொண்டரப் போறிங்களா? இல்லாட்டி இங்க இப்ப எடுத்து தர முடியுமா?'
'இப்ப எடுத்துத் தரலாம்.'
'அங்க இருக்கு ரொயிலட்' என எனக்குக் கழிப்பறையைக் காட்டி விட்டாள். நான் சிறுநீர் கொடுத்ததும், விடுதலை பெற்றேன்.

வைத்திய சாலையைவிட்டு வெளியே வந்தபோதுதான் எனக்கு அது உதைத்தது. ச் 'நெறி' போட்டிருப்பதை சொல்லவில்லையே. சரி இனித் திரும்பிப் போக முடியாது என எண்ணிய வண்ணம் நான் மீண்டும் வீடு நோக்கி புறப்பட்டேன்.

அடுத்த நாள் காலை கவிதா வந்தாள். அவளிடம் பரபரப்புத் தெரிந்தது.

'என்ன காலங் காத்தால இவ்வளவு அவசரமா வந்து நிக்கிறாய்?'

'காலம வாறது உங்களுக்கு பிடிக்கல்லயா?'

'ஜொள்ளுவிடாம, கேட்டதுக்கு பதில் சொல்லு...'

'நானும் அண்ணனும் டென்மார்க் போறம்.. வரப் பத்து நாளாகும்.'

'அதுக்கு?'

'உங்களுக்கு சொல்லீட்டு போகலாம் எண்டு வந்தன்.'

'நான் ஒண்டும் தாலி கட்டல்லயே?'

'நம்பிக்க இல்லாம தாலிகட்டிக்கிற உறவா நான் இதை நினைக்கல்ல?'

'அப்ப?'

'அதைவிட உயர்ந்த நட்பா நினைக்கிறன்.'

'ம்......நீ என்னெ மிஞ்சிட்டாய்?'

'நான் யாரையும் மிஞ்சவில்லை. என் அவிப்பிராயம் இதுதான்...'

'நான் நல்ல பிரன்ஷிப்ப தேடி இருக்கன். நான் வெறி லக்கி...'

'சரி கதைச்சது போதும். றயில்வே ஸ்டேசனுக்கு வர்றியளா?'

'இரண்டு நிமிஷம் வெயிற் பண்ணு.'

நான் பாத்ரூமிற்குள் உடுப்பு மாற்றியபோது, நந்தன் கவிதாவிடம், 'ரொம்ப நெருங்கீட்டியள் போல இருக்கு?' என்று கேட்டான்.

'சீ அப்பிடி இல்ல...'

'அப்ப எப்பிடி?'

நான் தயாராக வந்தேன். நந்தனும் வரவே, மூவரும் மத்திய புகையிரத நிலையத்துக்குச் சென்றோம்.

நாங்கள் புகையிரத நிலையத்தை அடைந்ததும், நந்தன் விடைபெற்றுச் சென்றுவிட்டான். நானும் கவியும் புகையிரத நிலையத்திற்குள் சென்றோம். அங்கு சிவா எங்களுக்காக காத்துக்கொண்டு நின்றான். என்னையும் கவியையும் கண்டதும் அவன் முகத்தில் சந்தோஷம் குடி ஏறியது.

எங்களை நோக்கி வந்து 'நீ வருவாய் எண்டு நான் எதிர்பாக்கெல்ல றமணா' என்றான்.

'ஏன் நீ அப்பிடி நினைக்கிறாய்?'

'ஏன் அண்ணா அவரை அப்பிடிக் கேக்கிறாய்?' என்று கவிதா குறுக்கிட்டாள்.

'ஏன் கேக்கக் கூடாதா?கேட்டா அம்மாவுக்கு கோபம் வந்திடுமோ?'

'சும்மா இரண்ணா. அவர் வீட்ட அடிக்கடி வாறார். நீதான் வீட்டில இருக்கிறேல்ல, லலிதாட்ட போயிடுவாய்; பிறகு எப்பிடி உனக்கு நேரம் இருக்கும் அவரோட கதைக்க?'

'ஓகே, ஓகே. நான் இந்தக் கதைய விடுறன்.'

'யாரடா லலிதா?'

'ஒண்டுமில்ல சொந்தக்காரப்பிள்ள...'

கவிதா 'கிளிக்' எனச் சிரித்தாள். நான் கவிதாவுக்குப் பக்கத்தில் சென்று, 'யாராள்'? என்று கேட்டேன்.

'அவரின்ர லவ்.'

என்னை அறியாமலே சிவா—லலிதாவின் காதல், திருமணத்தில் நிறைவேற வேண்டுமென என் மனசு வாழ்த்தியது.

அன்று புதன்கிழமை. நான் வேலையால் வரும்போது கடிதப் பெட்டியைப் பார்த்தேன். ஏயார்மெயில் உறை

யின் நிறம் தெரியவில்லை. அதனால் இலங்கைக் கடிதம் வரவில்லை என்பதைப் புரிந்து கொண்டேன். உள்ளூர்க் கடிதங்கள் வந்திருந்தன. அதில் ஒன்று எனக்கும் இருந்தது. கடிதத்தை திறந்து பார்த்தேன். அது மருத்துவ நிலையத்திலிருந்து வந்திருந்தது.

கடிதம் நோர்வே மொழியில் எழுதப் பட்டிருந்தது. எனக்கு நோர்வே மொழியில் கொஞ்சம் பயிற்சி உண்டு. அதில் என்னை மீண்டும் வெள்ளி அன்று வந்து சந்திக்குமாறு எழுதப்பட்டிருந்தது. ஏன் இவர்கள் மீண்டும் என்னைக் கூப்பிட்டு இருக்கிறார்கள்? இந்தக் கேள்வி என் மனதை உறுத்தத்தான் செய்தது. ஏதாவது சிக்கலா? வெள்ளி அன்று சென்று வந்தால் எல்லாம் புரியுமென எண்ணியவனாய் கடிதத்தை வைத்துவிட்டு சமையல் வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினேன்.

நான் வரவேற்பறையில் இருந்த பெண்ணிடம் எனது கடிதத்தைக் காட்டினேன். அவள் குறிப்பிட்ட நேரத்திற்கு என்னை அழைப்பதாய் கூறினாள். நான் சிறிது நேரம் காத்திருக்கவேண்டி இருந்தது.

இதயம் ஏனோ அதிகமாகத் துடித்தது. மருத்துவர் என்ன சொல்லப் போகின்றாரோ என்னும் எதிர்பார்ப்பின் விளைவே இந்த இதயத் துடிப்பின் அதிகரிப்பு என என்னால் உணர முடிந்தது. இப்படி ஏதாவது இக்கட்டான நிலைமையில் இருக்கும்போது சிறுநீர் கழிக்க தன்னிச்சையாகத் தோன்றும். எழுந்து அங்கிருந்து கழிப்பறையில் சிறுநீர் கழித்துவிட்டு வந்து மீண்டும் அமர்ந்தேன்.

சிறிது நேரம் செல்ல மீண்டும் சிறுநீர் வருவதுபோலத் தோன்றியது. நான் கழிப்பறைக்கு மீண்டும் போக எண்ணினேன். அதற்குள் வந்த மருத்துவர் அரை ஞாபகத்துடன், 'நீயா றமணன்?' என்று கேட்டார்.

'ம்...ம்...'

'வா உள்ள'

'அப்பிடி இரு...' என எனக்கு இருக்கையைக் காட்டினார்.

'தக்...'

'நீ ஏற்கனவெ இங்க வந்திருக்கிறாய்...'

'ம்...ம்...'

'நான் புதிதா இன்னுமொரு றிப்போட் தயாரிக்கணும்...'

'ஓ.கே.'

'நான் கேக்கிறதுக் கெல்லாம் சரியான பதிலைச் சொல்லணும்.'

'நான் ஏற்கனவே சரியாத்தான் சொல்லி இருக்கன்.'

'நான் மீன் பண்ணினது... விரிவாகப் பதில் சொல்லணும்.'

'ஓ.கே.'

'பிறந்த திகதி?'

'27.09.63.'

'நாடு?'

'இலங்கை.'

'உனக்கு சாரஸ்த இருந்திச்சா இலங்கையில'

'இல்ல.'

'யாராவது பெண்ணோட உடலுறவு?'

'இல்ல.'

'நல்லா யோசிச்சு சொல்லுங்க.'

அவர் நம்பாதவராய் என்னைப் பார்த்தார்.

'எங்க நாட்டுக்கும் இந்த நாட்டிற்கும் நிறைய கலாசார வேற்றுமை இருக்கு. இங்க என்னப்போல ஒருத்தன் எத்தனையோ பேரோட உடலுறவு கொண்டிருக்கலாம். கொண்டிருப்பினம். இலங்கேல அப்பிடி இல்ல. அங்க கலியாணம் செய்தாப் பிறகுதான் உடலுறவு. கலியாணமும் சின்ன வயசில செய்து வைக்க மாட்டினம்.'

'சரி எப்ப நோர்வேக்கு வந்தீங்க?'
'87 ஆம் ஆண்டு ஏப்பிரல் பத்தில்'
'வந்த உடன மெடிக்கல் செக்கப் எடுத்தாங்களா?'
'இல்ல.'
'எங்க முதல்ல தங்கினீங்க?'
'சண்வீக்காவில.'
'அங்க எதுவுமே எடுக்கேல்ல...?'
'இல்ல.'
'அங்க ஏதாவது பெம்பிளையோட...'
'ச் இல்ல?'
'பிறகு எங்க இருந்தீங்க?'
'பொசைமில.'
'அங்க?'
'இல்ல.'
'பிறகு?'
'வாடோவில.'
'அங்க?'
'இல்ல.'
'எப்ப இஞ்ச வந்தீங்க?'
'ஒரு வருஷமாகுது.'
'இங்க உங்களுக்கு பெம்பிள இருந்திருக்கு?'
'ம்...ம்...'
'எவ்வளவு நாளுக்குப் பிறகு ஆளப் பிடிச்சீங்க?'
'வந்த மூன்று வாரத்தில...'
'எவ்வளவு காலம் வரையும் தொடர்பு இருந்திச்சு?'
'கிட்டத் தட்ட பத்து மாதம்.'
'போதைப் பொருள் பாவிச்சிருக்கீங்களா?'
'நான் விரும்பி ஏத்திக்கல்ல. வெறியில ஏத்தி விட்டுட்டாங்க. அது ஒருநாள்தான். அதுக்குப் பிறகு நான் அங்க போறதையே விட்டிட்டன்...'
'எப்பவாவது ஆம்பிளைளோட... ஐ மீன் ஹோமோ செக்ஸ்.'
'இல்ல. அந்த மாதிரி இல்ல.'

'அப்பிடியான ஆள்களைத் தெரியுமா?'
'ம்...நான் போற வீட்டுக்கு பெத்தர் எண்டு ஒருத்தன் வாறவன். அவன் அப்பிடியான ஆள்.'
'அவனும் ஊசி போடுவானா?'
எனக்கு எரிச்சலாய் இருந்தது. இவர் என்ன இப்படி அறுக்கிறார் எனத் தோன்றியது. நான் பேசாது இருந்தேன்.
'பிளீஸ் சொல்லுங்கோ...'
'ம்...அவனும் அண்டைக்கு போட்டுக் கொண்டான்.'
'உமக்கு முதலா அல்லது பின்னுக்கா?'
'சரியா ஞாபகம் இல்ல. ஆனா முன்னுக் கெண்டுதான் நினைக்கிறன்...'
'ஊசி கிளீன் பண்ணினாங்களா?'
'வெறியில நான் கவனிக்கல்ல. கிளீன் பண்ணல்ல எண்டுதான் நினைக்கிறன்.'
'இப்ப அவங்க எங்க இருக்கிறாங்க?'
'சரியாத் தெரியாது...'
சிறிது நேரம் மருத்துவர் அமைதியாய் இருந்தார். அவர் தனது கொம்பியூடரைப் பார்த்தவண்ணம் ஏதோ சிந்தித்தார். பின்பு ஒரு முடிவுக்கு வந்தவராய்
'நான் சொல்லப் போறதை நீங்க கவனமாக் கேக்கோணும். அதோட நீங்க நான் சொல்லுறத கேட்டு அதிர்ச்சி அடையக்கூடாது. இன்னும் சரியான முடிவு தெரியல்ல. இப்பிடி இருக்கலாம் எண்டு ஒரு எச்சரிக்க பண்ணத்தான் அத நான் இப்ப சொல்லுறன்.'
'என்ன டொக்ரர் சுத்தி வளைக்கிறியள்? சுத்தி வளைக்காம சொல்லுங்க டொக்ரர்.'
'நீ தயார்தானே?'
'ம் ம்...'
'உமக்கு எச் ஐ வி பொசிட்டிவ்...'
'அப்பிடி எண்டா?'
'எயிட்ஸுக்கான வைரஸ் கிருமி உம்முடைய இரத்தத்தில இருக்காம்...'

நான் எதுவும் பேசவில்லை, எயிட்ஸ் வந்தால் சாவார்கள் என்பது எனக்குத் தெரியும். அது உடலுறவால் தான் தொற்றுகிறது என்பதும் தெரியும். அந்த விடயங்கள் தெரிந்துதானே நான் 'கொண்டம்' பாவித்தேன்? அப்பிடி இருந்தும் எப்படி எனக்கு? 'கொண்டம்' பாவிப்பது பாதுகாப்பு எனக் கூறி இருக்கிறார்கள். நான் பாதுகாப்பாய் இருந்தும் எப்படி எனக்கு...? என்னால் நம்ப முடியவில்லை.

'என்னால நம்ப முடியல்ல டொக்ரர்.'

'நீங்க இப்ப நம்ப வேண்டிய அவசியம் இல்ல. உல்லவுல் ஹாஸ்பிற்றலுக்கு உங்க பிளட் அனுப்பிறன். அதோட முடிவ நீங்க வாற புதன் போய் தெரிஞ்சுக்குங்க.'

எனக்குத் தலை இடிக்கத் தொடங்கியது. சாதுவாய்க் கண்கள் திரையிட்டுக் கொண்டன. என்னால் நம்ப முடியவில்லை. எனக்கு எயிட்ஸா?

'இன்னொரு விஷயம்.'

'என்ன?'

'நீங்க பிறன்ஸ்சோடதானே இருக்கீங்க?'

'ம்ம்...'

'சவரம் பண்ணுற சாமான்கள மாத்தி பாவிக்கிறது உண்டா?'

'இல்ல.'

'குட். ஆனா இனிமே உங்க சாமான்கள அப்புறப்படுத்தி தனியா வைச்சிருங்க...'

'எப்பிடி டொக்ரர் எனக்கே இன்னும்...?'

'பிளீஸ் உங்க பிறன்ஸில உங்களுக்கு அக்கறை இல்லயா?'

'சரி டொக்ரர்.'

'ஒகே. நீங்க இப்ப போகலாம். ஆனா நான் சொன்னத எல்லாம் ஞாபகம் வைச்சிருங்க. இன்னுமொரு விஷயம்.'

'என்ன?'

'இன்னுமொருக்கா இரத்தம் கொடுத்திட்டு போங்களேன்.'

'ஒகே...காத.'

'நல்லதா முடியட்டும். காத.'

நான் வீட்டிற்குப் போகவில்லை. எனக்கு மனமெல்லாம் துடித்தது. கைகால் சோர்ந்துவிட்டது. இனி எப்படி இந்த உலகத்தில் வாழப் போகின்றேன்? எனக்குப்புரியவில்லை. அதைவிட எப்படி கவியின் முகத்தில் விழிப்பது என எண்ணும்போது தற்கொலை செய்து கொண்டால் நல்லதெனத் தோன்றியது.

நான் வீட்டுக்குச் செல்லாது, எங்கேயாவது தெருத்தெருவாய்த் திரிந்தால் நல்லாய் இருக்கும் போலத் தோன்றியது. நடந்தேன். என் கால்கள் என்னை அறியாமலே தேவாண் நிலையத்திற்குச் சென்றது. நான் எதையும் சிந்திக்காதவனாய் தேவாணில் ஏறிக் கொண்டேன். ஏறிய பின்புதான் எனக்கு என் நிலை புரிந்தது. அந்த நிலையிலும் எனக்கு என்னை நினைக்க சிரிப்பு வந்தது. சரி ஏதாவது செய்ய வேண்டும். இப்படியே மனம் குழம்பிக் கொண்டிருப்பதால் எந்த வித பிரயோசனமும் இல்லை. என்ன செய்யலாம்? நூலகத்திற்குச் சென்று எயிட்ஸைப்பற்றி ஏதாவது ஒரு புத்தகம் எடுத்து வாசித்தால் என்ன? அதுதான் நல்லது.

நூலகத்தில் அதிக கூட்டம் இல்லை. நான் உள்ளே சென்று அங்கு இருந்த பெண்ணிடம் எயிட்ஸை பற்றிய புத்தகங்கள் எங்கே இருக்கின்றன எனக் கேட்டேன். அவளில் எந்த மாறுதலும் இல்லை. அவள் குறிப்பிட்ட புத்தகங்கள் அடுக்கி இருந்த இடத்தைக் காட்டினாள். பல புத்தகங்கள் இருந்தன. நான் அவற்றில் மூன்றை எடுத்துக் கொண்டு வந்தேன். பதிந்துவிட்டு வீட்டிற்கு அவற்றை எடுத்து வந்தேன்.

புத்தகங்களை வாசிக்கவாசிக்க எனக்கு உண்மை புரியத்
தொடங்கியது. நான் ஒஸ்லோ வந்தபின் நடந்து
கொண்ட முறைகள் அனைத்துமே எயிட்ஸ் பரவ
ஏதுவான முறைகளே. வாசிக்க வாசிக்க என்னை அறி
யாமலே அழுகை வந்தது.

கடவுளே எனக்கு எயிட்ஸ் இல்லாமல் இருக்கவேண்டும்.
என் மன உறுதி உடைய உடைய பயம் என்னைப்
பீடித்துக் கொண்டது. வாசித்து முடியும்போது எனக்குள்
இருந்த நம்பிக்கை இற்று விட்டது. எனக்கு நிச்சயம்
எயிட்ஸ் தொற்றி இருக்கும் என்னும் பயம் என்னை
உலுக்கியது. எப்போது புதன்கிழமை வரும்? புதன்
கிழமையை எண்ணும்போது சாப் பயம் தோன்றியது.
அதே வேளை அதை தெளிவாய் அறியவேண்டும் என்
னும் ஆவலும் பிறந்தது.

நேரத்தைப் பார்த்தேன். நந்தன் வரும் நேரமாகிவிட்
டது. நந்தன் வந்தான். கைகளைக் கழுவிவிட்டு சாப்
பிடத் தொடங்கினான். அப்போதுதான் அவன் கவனித்
திருக்க வேண்டும், நான் புத்தகங்களுடன் இருப்பதை!
சாப்பாட்டுடன் வெளியே வந்த நந்தன் 'என்ன படிக்
கிறாய்? செக்ஸ் புத்தகமா?' என்று கேட்டான்.

'ச், இல்ல!'

'என்ன மூஞ்சி எல்லாம் வீங்கி இருக்கு. அழுதியா?'

'சீ, நா ஏன் அழுகிறன்?' சொல்லும்போதே அழுது
விடுவேன் போல் தோன்றியது.

'ஏதோ என்னிட்ட மறைக்கிறாய்.'

'இல்லயடா.' எரிச்சல் மண்டக் கூறினேன். இவனிடம்
இப்போதே என் நிலைமையைக் கூறிவிட முடியாது.
எதற்கும் உல்லவுல் மருத்துவமனைக்குப் போய்வந்த
பின்புதான் இதைப்பற்றிய உண்மையை நானும் முற்
றாய் அறியலாம்; இவனுக்கும் கூறலாம். ஏற்கனவே
நான் எனது சவரச் சாமான்களை எல்லாம் எடுத்து
எனது பெட்டிக்குள் பத்திரப்படுத்தி வைத்துவிட்

டேன். இனிச் சரியான முடிவு வரும்வரையும் பயம்
இல்லாது இருக்கலாம் என எண்ணினேன்.

'என்னடா கடுமையா யோசிக்கிறாய்?'

'ச், ஒண்டும் இல்லயடா...'

'ஒண்டும் இல்ல எண்டா ஏதோ இருக்கெண்டு
அர்த்தம்...'

'இப்ப என்னவண்டுறா?'

'அது சரி டொக்ரர் என்ன சொன்னார்?'

இவன் சுத்திச் சுத்தி என்னை நோண்டுகிறான்.
எனக்கு கோபம் கோபமாய் வந்தது. அமைதியாய்ப்
பதில் சொல்ல முடியவில்லை.

'உனக்கேன் அது? சும்மா தேவை யில்லாமல் நொய்
நொய் எண்டு கொண்டு...' அவன்மீது என் கோபத்
தைக் காட்டினேன்.

'சும்மா கேட்டன். அதுக்கேன் நீ இப்பிடிக் கோவிக்
கிறாய்?'

அவனுக்கு கோபம் வந்துவிட்டது. 'உம்'மென மூஞ்
சையை வைத்திருந்தான். பின்பு திடீர் என வெளியே
சென்று விட்டான். அப்படி போகும்போது அவன்
கதவைச் சாத்திவிட்டுப் போன சத்தத்தில் இருந்து
தெரிகிறது, அவனது கோபத்தின் உச்சம்.

எனக்கு என்மீது கோபம் கோபமாய் வந்தது. அவன்
இப்போ என்ன செய்துவிட்டான் என இவ்வளவு கோபப்
பட்டேன்? வந்த நாள் தொடக்கம் எவ்வளவு புத்திமதி
களைச் சொன்னான்? நான்தான் அவன் சொன்ன
எதையும் கேட்கவில்லை. அவன் சொன்னவற்றைக்
கேட்டிருந்தால் இப்பிடி ஒருநிலைமை வந்திருக்காது,
அல்லவா?

மீண்டும் அப்பா அம்மா மீது கோபம் கோபமாய்
வந்தது. எல்லாம் அவர்களால் வந்த வினை. என்
அழிவுக்கு அவர்கள்தான் காரணம். ஒழுங்காக காலா
காலத்தில் எனக்குத் திருமணம் செய்து வைத்திருந்தால்

நிச்சயம் நான் இப்படி அழித்திருக்கமாட்டேன். எல்லாரும் எனக்கு எதிரிகளாய்த் தோன்றினர். நான் பிறந்த சமூகம் எனக்கு முதல் எதிரி. அந்த தடைகளை உடைக்க முடியாத நான் எனக்கு இரண்டாவது எதிரி. என்னை என் விருப்பத்திற்கு விடாத பெற்றோர் எனக்கு மூன்றாம் எதிரிகள்.

நான் மீண்டும் அழுதேன். வாய்விட்டு அழுதேன். அப்படி அழுதால்தான் நிம்மதி வரும்போல் தோன்றியது.

9

இந்த மருத்துவமனை மிகவும் பிரமாண்டமானது. இது ஒஸ்லோவில் உள்ள பெரிய மருத்துவமனை. இங்கு அநேகமான வியாதிகளுக்கு சிகிச்சை அழிக்கப்படுகிறது. முதல் முறை சென்றதால் எங்கு போவது எப்படிப்போவது என்பதே புரியவில்லை. நான் சிறிதுநேரம் செய்வதறியாது திகைப்பில் நின்றேன். என்னைச் சமாளித்துக்கொண்டு அங்கு வந்த தாதியை மறித்து உரிய இடத்தை கேட்டறிந்தேன். அவள் விளக்கியது அரை குறையாகத்தான் விளங்கியது. அவள் நோர்வே நாட்டைச் சேர்ந்தவள் அல்ல. டென்மார்க் நாட்டைச் சேர்ந்தவள்.

நான் மிகவும் அல்லற் பட்டுத்தான் உரிய இடத்திற்கு வந்து சேர்ந்தேன். நான் காத்திருந்தேன். மருத்துவரின் அழைப்பிற்காய்க் காத்திருந்தேன். நெஞ்சுக் கூட்டிற்குள் இருந்த நீர் எல்லாம் வரண்டுவிட்டது போன்ற உணர்ச்சி. தாகமாய் இருந்தது. அடிக்கடி கொட்டாவி வந்தது. என்னால் அந்த அவஸ்தையைத் தாங்கமுடியாது இருந்தது. வெளியே சென்று சிறிது குளிர் காற்றுப்பட்டால் நல்லாய் இருக்குமெனத் தோன்றியது. என்னால் மேலும் காத்திருக்க முடியுவில்லை. காத்திருந்

தால் மயக்கம் வரும்போலத் தோன்றியது. மருத்துவர் 'றமணன்' எனப் பெரும் உபத்திரவப்பட்டு என் பெயரை உச்சரித்தார்.

மருத்துவரின் பின்னே சென்றேன். என்னை இருக்குமாறு கூறிவிட்டு என் கோப்பைத் தட்டிப்பார்த்தார். அதில் நிறையக் கடதாசிகள் சேர்ந்து விட்டன. கோப்பைப் பார்த்துவிட்டு பின்பு நெற்றியைச் சுருக்கிக் கொண்டு ஏதோ சிந்தித்தார்.

என்னால் சும்மா இருக்க முடியவில்லை. அவருக்கு இருந்த பொறுமை எனக்கு இருக்கவில்லை.

'கடைசியா எடுத்த பிளட் ரெஸ்ற் என்ன மாதிரி?'

'நீ றெடியா இருக்கிறீரா நான் சொல்லப் போறத கேக்க?'

நான் ஒருமுறை எச்சிலைக் கூட்டி விழுங்கிக்கொண்டேன். மருத்துவர் என்ன கூறப் போகின்றார் என்பதை யூகித்தேன்.

'எதெண்டாலும் சரி. உண்மையை சொல்லுங்க டொக்ரர்...'

'நாங்க இதில மறைக்கமுடியாது. அப்பிடி மறைச்சமெண்டா உம்மைச் சார்ந்த பலரை நாங்க காவு கொடுக்க வேண்டிவரும். நீ இதைத் தப்பா புரிஞ்சுக்க மாட்டீர்...'

'நீங்க சொல்லுங்க டொக்ரர்...'

'உங்களுக்கு எச் ஐ வி கிருமி தொற்றி இருக்கிறது நிச்சமாயிட்டுது...' நான் பேசாது இருந்தேன்.

'அதோட, தாக்கம் வலுக்கூடியதா இருக்கு...' நான் எதுவும் பேசவில்லை. என்னால் பேசமுடியவில்லை.

'நான் சில மாத்திரைகள் எழுதித் தாறன். இது உங்களுக்கு வலியை குறைக்க மட்டும் உதவும். அதோட இந்த வருத்தத்தைப்பற்றி உங்களுக்கு விளங்கப்படுத் தோணும்...'

'அது தேவையில்ல.'

'இல்ல நீங்க கட்டாயம்...'

'எனக்கு தேவையில்ல. நான் லைபிறரியில புத்தகமெடுத்து எல்லாம் விபரமா படிச்சிட்டன்...'

'ஓகே. ஆனால், உங்களுக்கு நெருங்கியவங்க ஒரு தரம் டெஸ்ட் பண்ணிட்டா நல்லா இருக்கும்...'

'என்ன?'

'அவங்க நன்மைக்காகத்தான்.'

'நீங்க பெயரச் சொல்லுங்க. மிச்சம் நாங்க ஏற்பாடு செய்யிறம்...'

சிறிதுநேரம் சிந்தித்தேன். அவர் கூறுவது நியாயமாகவே பட்டது. அவருக்கு விபரங்களைக்கூறினேன். அதோடு 'வேலை செய்யிற இடத்தில சொல்லணுமா?' எனவும் கேட்டேன்.

'தேவையில்ல. சொல்லவேண்டாம்...' அவரின் சொற்களில் அழுத்தம் இருந்தது.

வெளியே வந்தேன். எல்லாம் இருண்டுவிட்டது போன்ற பிரமை. என் வாழ்க்கை சூனியத்தில் முடியப்போவது எனக்குசிறிய சிறியதாய்ப் புலப்பட்டது. பசித்தது. களைப்பாய் இருந்தது. எங்கு செல்வது என்ன செய்வது என எனக்குப் புரியவில்லை. எப்படி நந்தனின் முகத்தில் விழிக்கப் போகின்றேன்? எப்படிக் கவியின் முகத்தில் விழிக்கப் போகின்றேன்? எப்படி மற்றச் சனங்களின் முகத்தில் விழிக்கப் போகிறேன்? உலகத்தைப் பார்க்கப் பயமாய் இருந்தது.

வாழ்க்கையை முழுமையாக அனுபவிக்க வேண்டும். ஒரு வருடத்தைக்கூட அநியாயமாக்கிக் கொள்ளக்கூடாது என்பதற்காகத்தானே நான் கெய்தியின் உறவை நாடினேன். அப்படி ஆசைப்பட்டுவிட்டு இப்போது நான் சாவைக்கண்டு பயப்படவில்லை என்றால் என்ன அர்த்தம்? நான் சாதாரண மனிதன். எனக்கு இப்போது பயமாக இருந்தது. என் வாழ்க்கையின் முடிவை எண்ண

எண்ண எனக்கு பயமாக இருந்தது. நான் தப்பிக்க முடியாது. கடவுள்தான் மருத்துவராகி வந்தாலும் என்னை இனிக் காப்பாற்ற முடியாது. நான்சாவை எதிர்பார்க்கத் தொடங்கிவிட்டேன். இந்த நிமிடம் தொடக்கம் நான் எப்போதும் சாவை எதிர்பார்க்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றேன்.

பாவம் எதுவும் அறியாத நந்தனும் கவியும். நம்பாத கடவுளிடங்கூட நான் இப்போது மண்டியிடத் தயாராய் இருந்தேன். அவர்கள் இருவருக்கும் தொற்றி இருக்கக் கூடாது. நான் ஆவது அனுபவித்துவிட்டு சாகிறேன்; இல்லை சாகப்போகின்றேன். அவர்கள் எந்தத் தப்பும் செய்யாத அப்பாவிகள். எனக்கு நட்பாய் இருந்ததற்கு அவர்களுக்கும்? அவர்களுக்கு நிச்சயம் இருக்காது. எனது இரத்தம் அவர்கள் யார் உடம்பிலும் செல்லவில்லை. நான் கவியோடு உடலுறவும் கொள்ளவில்லை. நாங்கள் ஒரே ஊசியைப் பாவித்ததும் இல்லை.

நந்தன் வந்து சாப்பிட்டான். நான் சமையல் வேலை முடித்திருந்தேன். நந்தன் சாப்பிட்ட பின்பு, சாறத்தைக் கட்டிக்கொண்டு வந்தான். என்ன இவன் வேலைக்குச் செல்லவில்லையா? இரண்டாவது வேலையுண்டல்லவா?

'வேலைக்கு போகல்ல.

'இல்ல.'

'ஏன்?'

'தலையிடிக்குது. அதுதான் ஏக்கமல்லிங் எடுத்திருக்கிறன்...அதுசரி, இண்டைக்கு ஹொஸ்பிற்றலுக்கு போனனீ எல்லோ? என்னவாம்?'

'ம்'...சோகமாகத் தலையை ஆட்டினேன்.

கண்களில் நீர் கோத்துக் கொண்டது. வாய்விட்டு அழுதுவிடுவேன் போலத் தோன்றியது.

'என்னவாம்...'

என் நா பதில் அளிக்கவில்லை. கண்களில் இருந்து வழிந்த கண்ணீர் அவனுக்கு பதில் கூறின. அவன் எனக்கு கிட்டே வந்து அமர்ந்த வண்ணம், எனது தலையைத் தடவினான். எனது கண்ணீரைத் துடைக்க எத்தனித்தான். நான் ஒரு கணம் பதறித்தான் போய் விட்டேன். அவனைத் துடைக்க விடாது அவனிட மிருந்து விலகிச் சென்று வெளியே வெறித்துப் பார்த் தேன்.

'என்னடா? என்ன நடந்திச்சு? என்னவாம்?'

'......'

'என்னண்டு சொல்லன்ரா!'

'எனக்கு எயிட்ஸ்ஸாம்.'

'என்ன?' அவன் அதிர்ந்து போனான்.

'என்ன சொல்லுறாய்?'

'நான் செத்துப் போயிடுவன் கெதியா.'

'அப்பிடிச் சொல்லாதே. அப்பிடி நினைக்காத...'

'ஆனா உண்மை. இன்னும் கொஞ்ச நாள்தான் என்ர வாழ்க்கை'

சிறிது நேரம் அவன் எதுவும் கதைக்கவில்லை. புத்தகங்களைப் புரட்டிப் பார்த்தான். அங்கு அமைதி குடிகொண்டிருந்தது. இந்த அமைதி பெரும் வேதனையைத் தந்தது.

'நான் செத்தாலும் பறுவா இல்ல. உனக்கும் கவிக்கும் ஒண்டும் வரக்கூடாது.'

'என்ன சொல்லுறாய்?'

அவன் கேள்வியில் அதிர்ச்சி கலந்திருந்தது.

'இல்ல சிலவேள உங்களுக்கு தொத்தி இருக்குமோ எண்டு பயமா இருக்கு.'

'கல்வத்த, நீ என்னடா சொல்லுற? உந்தப் புத்தகம் எல்லாம் படிச்சியே அதில என்ன எழுதி இருக்கு?'

'அவன் எழுதி இருக்கிற மாதிரிக்கு உனக்குத்தொத்தி இருக்காது. நீ பயப்பிடாதடா.'

'அப்ப கவிதாவுக்கு?'

'அவளுக்கும் இருக்காது எண்டுதான் நினைக்கிறன்.'

'எப்பிடி சொல்லுறாய்? நீங்கதான் தனியா இருந் தீங்களே?'

'அவள், நல்லகாலம். அவள் என்னத் தொடவிடல்ல; கிஸ்சோட சரி. அதுக்குமேல நான் போக முடியல்ல,'

'இப்ப என்ன செய்யிறது?'

'நாளைக்கு கடிதம் வரும். எடுத்துக்கொண்டு போனா சிலவேளை நாளைக்கே நேரம் கிடைச்சாலும் கிடைக் கலாம். அப்பிடி கிடைச்சிட்டு தெண்டா கெதியாவே எங்க சந்தேகம் தீந்திடும்.'

'எனக்கு பயமா இருக்கு.'

'டேய், நீ பயப்பிடாத. உனக்கு சான்ஸ் இல்ல.'

அடுத்த நாள் கடிதம் வந்திருந்தது. மருத்துவ மனைக்கு நானும் சென்றிருந்தேன். மிகவும் சிரமப் பட்டுத்தான் மருத்துவரைப் பார்க்க முடிந்தது. நந்த னிடம் இரத்தம் எடுத்துக் கொண்டார்கள். இரண்டு நாள் கழித்துத்தான் அதன் முடிவைத் தெரிவிப்போம் என்றார்கள்.

இரண்டு நாள்களுக்கிடையில் நந்தன் மெலிந்து போய் விட்டான். இன்னும் முடிவு தெரியாததால் மிகவும் பயமாகவும் பரபரப்பாகவும் இருந்தது.

நான் வெளியே சென்று போன் பண்ணினேன். மூன்று நாளாய் வேலைக்குச் செல்லவில்லை. இன்னும் மூன்று நாள்களுக்கு என்னால் வரமுடியாது எனக் கூறினேன். மறுமுனை எகிறிக் குதித்தது. அவனுக்கு என் வேதனை புரியாது. நான் அதைக் கூறவும் இல்லை. நாளைக்கு வேலைக்கு வராவிட்டால் என்னை வேலையால் இருந்து நிற்பாட்டி விடுவேன் என எச்சரித்தான். நான் போனை வைத்துவிட்டு வந்துவிட்டேன்.

நந்தன் வந்தான். அவன் முகத்தில் இவ்வளவு நாளும் இருந்த சோகம் இல்லை. அவன் முகம் பிரகாசித்தது. அவனைப் பார்க்க அவனைவிட எனக்குத்தான் சந்தோஷம் அதிகமாய் இருந்தது. ஆவலை அடக்க முடியாமல் அவனைக் கேட்டேன்.

'ஏன்டா போன் பண்ணின்னியோ?'

'ம்...'

'என்னவாம்.'

'எனக்கு பொசிட்டிவ் இல்லையாம்.'

'ஓஓஓ...' சிலுவையை இறக்கி வைத்தது போன்ற ஆறுதல்.

'கவிதாவும் டெஸ்பண்ணினா நல்லது.'

'அவள் இன்னும் வரேல்ல. வந்ததும் போகச் சொல்லோணும்'

'எப்ப வருவா?'

'இண்டைக்கு சில வேளை வருவாள்.'

பின்பு சிறிது அமைதி எங்களுக்குள் நிலவியது. என்னை பற்றி இனி யார் கவலைப்படப் போகிறார்கள்? ஏனோ எனக்கு இந்த எண்ணம் திடீர் எனத் தோன்றியது.

10

தனிமையாய் இருந்தது. இந்தத் தனிமை இப்போது எனக்குப் பிடித்தது. என்னைப் பற்றி எண்ணுவதும் எனது கடந்தகால வாழ்க்கையை அசை போடுவதுமே எனக்கு ஆறுதலைத் தந்தது. சின்னப் பருவத்திலே என்னவென்று புரியாத நிலையில், அவள் பெயர் எனக்கு சரியாய் ஞாபகம் இல்லை... அவளுடன் செய்ததை எண்ணும்போது சிரிப்பு வந்தது. அதேமாதிரி இப்போது கவியோடு நடந்து கொண்டால் எப்படி இருக்கும்? தனிமையில் கவி வரும்போது அவளோடு நான் அப்படி நடந்து கொண்டால் என்ன?

என் மனம் சிறிது நேரம் காமத்தில் தத்தளித்தது. நான் எவ்வளவு சுயநலவாதி என்பது புரிகிறது. பாவம் கவி. என்னோடு பழகியதற்காக அவளையும் சாகடிக்க எண்ணுவது எவ்வளவு கொடுமையானது? என்னோடு ஒருமுறை உறவு கொண்டால் போதும், பின்பு அவளும் என்னைப்போல சாவை எண்ணிக்கொண்டு இருக்க வேண்டியதுதான். என்னோடு பழகியதற்காக நான் அவளைக் கொலை செய்வது போல்வது நான் அவளுடன் உறவு கொள்வது. கவி நல்லாய் இருக்கவேண்டும். நல்லாய் வாழவேண்டும்.

எனது சிந்தனையை அழைப்புமணி துண்டித்தது. எழுந்து சென்று கதவைத் திறந்தேன். கவிதாதான் சிரித்த வண்ணம் நின்றாள்.

'உனக்கு ஆயுள் நூறு.'

'எதுக்கு சொன்னீங்க?'

'ம்...?'

'எதுக்கு ஆயுள் நூறு எண்டு சொன்னீங்க.'

'உன்ன நினைச்சுக் கொண்டிருந்தன்.'

'உண்மையாவா?' அவள் குழந்தைபோலக் கேட்டாள்.

'ம்...'

'அதுக்கேன் 'ம்' எண்டு வைச்சிருக்கிறியள் மூஞ்சய? அது சரி என்னைப் பற்றி என்ன நினைச்சீங்க?'

நான் எதுவும் கூறவில்லை. வெளியே பார்த்தேன். அவள் எனதருகில் வந்து என் கன்னத்தில் முத்தமிட முயன்றாள். நான் பதறிப் போய்விட்டேன். இனி இவள் எனக்கு முத்தமிடக்கூடாது. அப்படி முத்தமிட அனுமதித்தால் அது நான் அவளுக்கு செய்யும் பெரிய துரோகம். எச்ஐவி முத்தத்தின்மூலம் பரவாது என்பதை அறிந்தாலும், மனசு ஏற்றுக் கொள்ளவில்லை. நான் அவளைப் பிடித்து என்னிடம் இருந்து தூரத் தள்ளிப்பிடித்தேன். அவள் என்னைக் கேள்விக் குறியுடன் பார்த்தாள்.

'றமணா, கிஸ்.மீ...'
சிலையாய் நின்றேன்.
'விருப்பமில்லயா? உனக்கு என்ன நடந்திட்டுது? அலைவியே நீ இதுக்கு?'
'.........'
அவள் திரும்பவும் முத்தமிட முயன்றாள்.
'எனக்கு இனி நீ கிஸ் பண்ணக்கூடாது.'
'பகிடி பண்ணுறியா?'
'இல்ல.'
'விளையாடாத றமணா.'
'நான் விளையாடல்ல. நீ எனக்கு இனிமேல் கிஸ் பண்ணக்கூடாது.'

'ஏன்?'- இந்தக் கேள்வி கேட்கும்போது அவள் குரல் உடைந்து விட்டது. அவள் கண்கள் கண்ணீரால் மூடப்பட்டுவிட்டன. அவள் சோபாவில் இருந்து தனது கால்களுக்குள் முகம் புதைத்து குமுறி அழுதாள். நான் அவளருகில் சென்று அமர்ந்தேன். மெதுவாக அவளது கூந்தலை வருடினேன். அவளின் அழுகையின் வேகம் குறைந்தது. கவலையோடு கவலையாக என் சோகத்தை சொல்லி விடுவதென முடிவு செய்தேன்.

'கவி...'
'ம்...' அவள் தலை நிமிராது பதிலளித்தாள்.
'நான் ஒரு விஷயம் சொல்லனும்.'
'என்ன றமணா? உனக்கு என்னவோ ஆயிட்டுது. என்னாச்சு றமணா உனக்கு?'
'நீ நான் சொல்லுறத கேட்டு கவலப்படமாட்டன் எண்டு புறமிஸ் பண்ணு பாப்பம்...'
'ச், என்ன றமணா நீ? சரி ஓகே...'
'எனக்கு வருத்தமாம்...'
'வருத்தம் எல்லாருக்கும் வாறதுதானே?'
'ஆனா எயிட்ஸ் எல்லாருக்கும் வராது...'

'றமணா...' அவள் பெரிதாய்க் கத்திவிட்டு, உறைந்தாள். என்னையே வெறித்துப் பார்த்தாள். எனக்குப் பயம் வந்து விட்டது.

'கவி...கவி' எனக்கத்திய வண்ணம் அவள் தோள்களைப் பிடித்து குலுக்கினேன். அந்தக் குலுக்கலோடு அவளின் உறை நிலை கலைந்தது. வாய்விட்டு அழுதாள். பெரும் சத்தமாய் அழுதாள். எனக்கு பெரும் சங்கடமாய் இருந்தது.

'அழாதே கவி, பிளீஸ் அழாதே...' கெஞ்சினேன்.

'முடியல்ல றமணா. என்னால முடியல்ல. என்னால தாங்க முடியல்ல. எனக்குப் பைத்தியம் பிடிச்சிடும் போல இருக்கு றமணா. நான் இப்பவே செத்திடணும் போல இருக்கு றமணா...'

'பைத்தியம் மாதிரிக் கதைக்காதை கவி.'

'உனக்கு இப்பிடி எண்டா நான் பைத்தியமாயிடுவன். என்னால இனி சாதாரணமா இருக்கேலாது றமணா. உன்ன நினைக்கிற நேரமெல்லாம் நான் பைத்தியமாயிடுவன். என்னால உன்ன நினைக்காம இருக்கேலாது றமணா.'

'என்ன மறந்திடு. என் நினைவை விட்டிடு.'
'ஒரு வழிதான் இருக்கு றமணா.'
'என்ன?'
'நான் செத்திடுவன் றமணா...'

நான் அவளை இழுத்து என் மார்போடு அணைத்துக் கொண்டேன். என் கண்ணீர் அவள்மீது படாது கவனமாக இருந்தேன். இதனால் பரவுவதற்குச் சந்தர்ப்பம் இல்லை.

'கவி!'
'...'
'நான் ஏற்கனவே நொந்து போய் இருக்கிறன்.'
'......'

'நீயும் இப்பிடி இருந்தா நான் செத்துப் போயிடுவன். கெதியாச் செத்துப் போயிடுவன்.'
'இரண்டுபேரும் செத்துப் போயிடுவம் றமணா! சேர்ந்தே செத்துப் போயிடுவம்!'
'பிளீஸ் என்ன இப்பிடிக் கொல்லாதை.'
'என்ன சொல்லுறாய் றமணா?'
'நீயே இப்பிடிக் கதைச்சா...நான் எப்பிடி?'
'சரி நான் இனி அப்பிடிக் கதைக்கல்ல.'
'அப்ப முகத்த கழுவிட்டு வா.'
'பிரயோசனம் இல்ல றமணா. உன்ன பாக்கப் பாக்க அழுகையா வருகுது.'
'அழுது ஆகப்போறது ஒண்டுமில்ல.முதல்ல கழுவிட்டு வா, பிளீஸ்.'

அவள் எழுந்து சென்று முகத்தைக் கழுவினாள். துடைப்பதற்கு என் துண்டைக் கேட்டாள். நான் கொடுக்க வில்லை. ரிஸ்ஸுவால் துடைக்குமாறு கூறினேன். இது முட்டாள்த் தனமான பயம் என்பது தெரிந்தும் என்னால்த் தவிர்க்க முடியவில்லை.

'எப்பிடி றமணா? உனக்கு எப்பிடி இது வந்திச்சு?'
நான் வரட்சியாகச் சிரித்தேன்.
'றமணா?'
'என்ன?'
'எனக்கொரு கடிதம் வந்திருக்கு?'
'எங்க இருந்து?'
'உல்லவுல் ஹொஸ்பிற்றல்ல இருந்து...'
'நான் எதிர்பாத்ததுதான்.'
'அப்பிடி எண்டா?'
'பிளட் டெஸ்டுக்கு.'
'நான் போகப் போறல்ல.'
'இல்லக் கவி நீ கட்டாயம் போகோணும்...'
'ஏன் றமணா?'
'உன்ன நீ பாதுகாத்துக்கணும்.'

'நான் உன்னோட சாகணும் எண்டு விரும்புறன்.'
'முட்டாள்தனமாக் கதைக்கக் கூடாது.'
'என்னாலே வேற யாரையும் நேசிக்க ஏலாது றமணா.'
'நீ நினைக்கிற இடத்தில நான் இல்ல.'
'நான் உன் கடந்த காலத்தைப் பற்றி அறிய விரும்பேல்ல.'
'நான் உனக்கு அதைக் கட்டாயம் சொல்லித்தான் ஆகணும்.'
'இப்ப உங்க நெஞ்சில நான் இருக்கேனா இல்லையா?'
'அதில சந்தேகம் தேவையில்ல.'
'நான் கட்டாயம் போகோணுமா?'
'என்ன நீ நேசிக்கிறியா?'
'றமணா!' உரத்து கத்தினாள். அவள் முகம் கோபத்தில் சிவந்து விட்டது. சிறிது நேரத்தில் அமைதி அடைந்தேன்.
'அப்பிடிக் கேக்காத றமணா.'
'ஆனா, நீ ஒண்டு கட்டாயம் செய்யோணும்...'
'என்ன... ஹொஸ்பிற்றலுக்கு போறதா?'
'உனக்காக இல்ல எனக்காக செய்யோணும்...'
'செய்யிறன்.'

நாம் புறப்பட்டு புகையிரத நிலையத்திற்குச் சென்றோம். அப்போதுதான், 'வேற யாருக்கும் தெரியுமா?' என்று கவி கேட்டாள்.

'என்ன?'
'இல்ல. உங்களுக்கு இந்த வருத்தம்... இருக்கு எண்டு...?'
'ஏன் தெரிஞ்சா என்ன?' இயலாமையின் ஆத்திரம். அவள் முகத்தில் கவலை கவிந்திருந்தது.
'இல்ல உங்கள மற்றவங்க கேவலமா நினைப்பாங்க. அதை என்னால தாங்கேலாது.'

'பயப்பிடாத. ஒருத்தருக்கும் தெரியாது.'

'நந்தனுக்கு?'

'அவனும் டெஸ்ட் பண்ணினான்.'

'உண்மையாவா?'

'இதில் எல்லாம் பொய்யா சொல்லுவாங்க? அவனுக்கு நெகட்டிவ்.'

'ஓ காட்...தாங்ஸ் காட்.'

எதை எண்ணினாளோ அவள் முகம் இருண்டது. முகத்தில் ஆயிரம் கேள்விக்குறிகள் தெரிந்தன.

'என்ன யோசிக்கிறாய்?'

'ஒண்டுமில்ல.'

'பாத்தியா என்னிட்டயே... ஒளிக்க... பாக்கிறியா?'

'ச், அண்ணனிட்டக் கூடச் சொல்லக்கூடாது எண்டு நினைக்கிறன்.'

'உன்ர விருப்பம்.'

'நீங்க உளறிடாதீங்க.'

'சீ...'

'நந்தன்...?'

'சொல்லுறன்.என்ர கவிக் குட்டியின்ர பிளான் எண்டு சொல்லுறன்.'

'ஆசையைப் பாரு!'

'ஆசை மாத்திரம்தான் படலாம் கவி. அதுக்குமேல நான் இனி எதுவும் செய்யேலாது.'

இருவருக்கும் கண்கள் கலங்கி விட்டன. நான் என்னைச் சமாளித்துக் கொண்டு மீண்டும் சிரித்தேன்.

கடைசியாக நான் அவளை புகையிரத்தில் ஏற்றும்போது அவள் கூறினாள். 'எனக்கும் ஒரே ஒரு ஆசைதான். அதுக்காக நான் எல்லாக் கடவுளையும் வேண்டுறன்.'

'என்ன ஆசை?'

'எனக்கும் பொசிட்டிவா இருக்கோணும்; நெகட்டிவா இருக்கக்கூடாது.'

புகையிரதம் இரைச்சலோட புறப்பட்டுச் சென்றது. நான் அப்படியே சிறிது நேரம் அதிர்ந்து போய் நின்றிருந்தேன். இவள் என்ன விசித்திரப் பெண்?

நான் இரண்டாவது முறையும் மருத்துவப் பரிசோதனைக்குச் சென்று வந்திருந்தேன். உடம்பில் உண்டாகிய சில நோய்கள் இப்போது மாறுவதே இல்லை. மருத்துவர்கள் ஏதோ சில மாத்திரைகளைத் தந்தனர். வலியைக் குறைக்க உதவும் என்றனர். எனக்கு உடல் நோயைவிட மனநோய் அதிகமாக இருந்தது. கவி கடைசியாகக் கூறியதை என் மனசு ஏற்க முடியாமல் தவித்தது. அவளின் நட்பை எண்ணும்போது பெருமையாக இருந்தது. அவளை வாழவைப்பதுதான் என் வாழ்வின் சாரமாகத் தோன்றலாயிற்று.

நந்தன் இப்போது என்னைச் சமைக்க விடுவதில்லை. நோய் தொற்றி விடுமெனப் பயப்படுவதாய் தெரியவில்லை. அவனும் எயிட்ஸைப்பற்றி அறிய நான் எடுத்து வந்த புத்தகங்களை வாசித்து முடித்தான். அந்த புத்தகங்களைப் பார்க்க இவற்றைத் திருப்பிக் கொடுத்துவிடுவது நல்லது எனத் தோன்றியது.

நான் எண்ணியதை உடனே செயற்படுத்தினேன். வெளியே வந்த பின்புதான் எனது உடல் எவ்வளவு பவீனப்பட்டு விட்டது எனத் தெரிந்தது. துணிவை வரவழைத்துக் கொண்டு சென்றேன். குளிர் காற்றுப்பட கொஞ்சம் நல்லாய் இருந்தது. அது சிறிது நேரம்தான். பின்பு குளிர்ந்தது. புத்தகங்களைக் கொடுத்து விட்டு, கவி வீட்டிற்குச்சென்று வந்தால் நல்லா இருக்குமென்த் தோன்ற நான் கவி வீட்டிற்குச் செல்வதற்காய் மத்திய தேவாண் நிலையத்திற்குச் சென்றேன்.

தேவாண் இன்னும் வரவில்லை. சலிப்புடன் அங்குமிங்கும் பார்த்துக் கொண்டு நின்றேன். எனக்கு ஒரு

கணம் 'திக்' கென்றது. கவியும் சிவாவும் வீட்டிற்குச் செல்வதற்காய் வந்து கொண்டிருந்தனர். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது என்பார்களே அதுமாதிரியே.

கவி என்னைக் கண்டு குனிந்து கொண்டே வந்தாள். சிவா, 'ஹாய் றமணா,' என்றான்.

'ஹாய்.' சும்மா எதிரொலி.

அவன் என்னையும் கவியையும் ஒருமுறை ஊடறுத்துப் பார்த்தான்.

'என்ன ரெண்டு பேருக்கும் ஏதாவது பிரச்சனையோ?'

'இல்லயே.'

'அப்ப கவி உன்னப்பாக்க பிடிக்கல்ல எண்டுச்சி.'

'அப்படியா? ஏனாம்?'

'கவிகிட்ட கேட்டுக்க.'

எனக்கு எப்படி வந்ததோ அந்தக் கோபம்? நான் என் இடத்திற்குச் செல்லும் பிளாட்பாரத்திற்கு வந்தேன். நான் வரவும் தேவாண் வந்து கொண்டிருந்தது. நான் உள்ளே ஏறிக்கொண்டேன். கதவு சாத்தும் நேரத்தில் தான் கவி இரைக்க இரைக்க உள்ளே புகுந்தாள்.

கவி என்னைப் பார்த்தாள். எனக்குப் பக்கத்தில் வந்து அமர்ந்தாள். நான் வெளியே பராக்குப் பார்த்தேன். என் விஷமம் கலைந்தது. கவி விசும்பினாள். அவ்வளவு சனங்கள் இருக்கும் அந்தப் புகையிரத பெட்டிக்குள் அவள் விசும்பினாள். அதில் ஒருசில தமிழர்களும், ஒரு சில பாக்கிஸ்தான்காரர்களும் இருந்தனர். எனக்கு பெரும் சங்கடமாய் இருந்தது. நான் ஒருவாறு கவியைச் சமாதானப்படுத்த முயன்றேன்.

'கவி......கவி அழாதே...'

அவள் தொடர்ந்தும் அழுது கொண்டிருந்தாள். எனக்கு சற்றுக் கோபம் வந்தது.

'கவி இப்ப அழுகிறத நிப்பாட்டபோறியா இல்லயா?'

'முடியல்ல றமணா. என்னால தாங்க முடியல்ல.'

என்னில் சாய்ந்து என் மார்பில் முகம் புதைத்தாள். அவளது அழுகை ஓரளவில் அடங்கியது.

'இப்ப ஏன் அழுகிறாய்?'

'என்னால் தாங்க முடியல்ல. உன்னோடயே செத்திடோணும் போல இருக்கு றமணா.'

நான் எதுவும் பேசவில்லை. அவளும் சிறிது நேரம் எதுவும் பேசவில்லை. நான் தப்பு செய்து விட்டேன். இவளோடு பழகி இருக்கக்கூடாது. ஒரு பெண்ணின் வாழ்வைக் கெடுக்காமல் இருந்திருக்கலாம். எனக்கு அப்போதே தெரியாதே இந்தப் பாழாப்போன வருத்தம் வருமென்று. சரி நடந்ததுதான் நடந்துவிட்டது. இவளாவது நிலைமையைப் புரிந்து கொண்டு வேறோர் வாழ்க்கைக்குத் தயார் பண்ணலாம்தானே? அதைவிட்டு விட்டு என்னோடு சாகிறேன் என அடம்பிடிக்கிறாளே? இவளை நான் என்ன செய்ய முடியும்? இவளுக்கு எப்படி புரிய வைக்க முடியும்?

புகையிரதம் ஓடிக்கொண்டே இருந்தது. நாங்கள் இறங்க வேண்டிய இடத்தில் தரித்தது.

அவள் கீழே இறங்கியதும் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

நான் அவளை என்னுடன் அணைத்த வண்ணம், 'என்ன நடந்திச்சு குட்டிக்கு? ஏன் இப்பிடி எல்லாம் கதைக்கிறாய்?' என்று கேட்டேன்.

'அதை விடு றமணா. எனக்கொரு ஆசை.'

'என்ன?'

'எங்கயாவது ஒரு ஹோட்டல்ல இரண்டு நாளைக்கு ரூம் போட்டு தங்குவமா? நான் உங்களோட இரண்டு நாளைக் கெண்டாலும் வாழணும்...'

என் கைகளைப் பற்றி முத்தமிட்டாள்.

'அசடு மாதிரிக் கதைக்காதை.'

'போ றமணா உனக்கு கொஞ்சங்கூட இரக்கமில்லை.'

'எனக்கு இரக்கமிம்லாமல் இருக்கலாம், உன்னிலை அக்கறை இருக்கு.'

'என்ன அக்கறை?'

'நீ உயிரோட வாழனும் எண்ட அக்கறை.'

'வெறும் வாழ்க்கை. உடல் உறவை மட்டும் அனுபவிக்கலாம். செத்த மனதோட நடக்கிற நடப்பிணமான வாழ்க்கை.'

திடீரென்று அவளிலே ஒரு முதிர்ச்சியைப் பார்த்தேன்.

வீட்டிற்குள் வந்துவிட்டோம்.

'எனக் கொண்டு சொல்லல்ல நீ?'

'என்ன?'

'என்னாச்சு?'

'எது?'

'ச்...பிளட் டெஸ்ட்?'

என்னைக் கூர்மையாகப் பார்த்தாள்.

'பொசிட்டிவ்.'

'அரைஞ்சனென்டா!'

'செய்யுங்க.'

எனக்கு கோபம் வந்து விட்டது. அவளது தோள்மூட்டை பிடித்து குலுக்கிய வண்ணம், 'என்னாச்சு?' கத்தினேன்.

அவள் அழத் தொடங்கி விட்டாள். நிலத்தில் இருந்து முகத்தை கால்களுக்குள் புதைத்துக்கொண்டு அழுதாள். அழுகையினுடே, 'பொசிட்டிவ் இல்ல பாழாய்ப்போன நெகட்டிவ்.'

நான் கீழே இருந்து அவளை இறுக அணைத்தேன். அவள் என் அணைப்பில் சுகம் கண்டாள். நான் இப்போது முத்தமிடுவதுகூட இல்லை. ஆபத்து இல்லை எனப் புரிந்தாலும் ஏதோ என்னைத் தடுத்தது.

'நமணா!'

'என்ன?'

'எனக்கு நீ வேணும்.'

நான் அவளை விட்டுவிட்டு எழுந்தேன்.

'கவி நீ வீட்டபோ.'

அவள் புரியாது விழித்தாள்.

'இப்ப என்ன வந்திச்சு உங்களுக்கு?'

'நீ என்னை மறக்கோணும். அதுக்கு நீ இஞ்ச வராமல் இருக்கிறதுதான் நல்லது.'

அவள் எதுவும் பேசவில்லை. சிறிது நேரம் என்னை முறைத்தாள். நான் அதைத் தாங்க முடியாது என் பார்வையைத் திருப்பிக் கொண்டேன். சிறிது நேரத்தின் பின்பு திரும்பியபோது அவள் வாயிலைத் தாண்டிச் சென்று கொண்டிருந்தாள். அவளை நான் நிறுத்தவில்லை. அவளை இனி கூடிய மட்டும் 'வெட்டி' விட வேண்டுமென முடிவு செய்தேன்.

எனக்கு இருந்த மன நிம்மதி எல்லாம் போய்விட்டது. கவிதாவை மாற்றிவிடலாம் என நான் எண்ணியது நடக்காது போலத் தோன்றியது. மூச்சு வாங்கக் கடினமாய் இருந்தது. சிறிது நேரம் நான் பெரும் அவஸ்தைப் பட்டிருப்பேன். பின்பு அப்படியே மயங்கிப் போய் விட்டேன்.

நந்தன் வந்து முகத்தில் தண்ணீர் தெளித்த பிறகுதான் சுய நினைவு பெற்றேன்.

'என்ன நடந்திச்சு?'

'தெரியல்ல மயக்கம் வந்திட்டுது.'

'சும்மா மயக்கம் வந்திச்சா?'

அவன் முகத்தில் பயம் கோடிட்டு இருந்தது.

'கவி வந்தாள். என்னோட கதைச்சுக் கொண்டு இருந்திட்டு அவள் போயிட்டாள். அதுக்குப்பிறகு அப்பிடியே இருக்க மயக்கம் வந்திட்டுது. ஏன் என்றுதான் தெரியல்ல.'

'சாப்பிட்டனியா?'

'இல்ல.'

'சில வேள அதனால இருக்கலாம்,'
'ம்...ம்...'
'வா சாப்பிடு.'

11

'நான் கேட்டதுக்கு பதில்சொல்லேல்லேயே றமணா?' என்று கவி கேட்டாள்.

'ச், எனக்கு என்ன தெரியும் கவி? நோய் முத்தினால் இதெல்லாம் அடிக்கடி வருமெண்டு நினைக்கிறன்.'

'அப்பிடி எல்லாம் சொல்லாத றமணா.'

'நான் உண்மையை உள்ளபடி சொல்லவேணும் எண்டு நினைக்கிறன். அதில தப்பிருக்கிறதாவும் நினைக்கல்ல. பொய்யான விஷயங்கள உண்மையா நினைச்சிட்டு வாழ்றது தப்பு. உண்மையை புரிஞ்சுக் கணும். உன்னை நீ மாத்திக்கணும். எப்பவும் உணர்ச்சி பூர்வமாவே சிந்திக்கக் கூடாது. இதை எல்லாம் சொல்லுற நான் உன்னிட்ட ஒண்ட சொல் லாமல் மறைச்சிட்டன்.'

'என்ன மறைச்சீங்க?'

'எப்பிடி எயிட்ஸ் வந்தது எண்டு கேட்டியே, அதுக்கு நான் இன்னும் பதில் சொல்லேல்ல.'

'ம்... இப்ப சொல்லுங்க.'

'நான் ஒண்டும் உத்தமனில்ல. ஏற்கனவே ஒருத்தி யோட எல்லா விஷயமும் செய்து முடிச்சிட்டன்.'

'பொய் சொல்லுறியள்.'

'அப்ப எப்பிடி எனக்கு எயிட்ஸ் வந்ததெண்டு நினைக் கிறாய்?'

நான் தொடர்ந்து சொன்னேன்.

'அவள் ஒண்டும் சாரஸ்த் இல்ல. காசுக்கு போறவள். சென்றல் ஸ்ரேசனுக்குப் பக்கத்தில அவள் வீடு இருக்

குது. நான் அங்க அடிக்கடிபோய் வந்தனான். சந்தே கம் எண்டா நந்தனக் கேட்டுப்பார். நான் நோர்த்தில இருந்து வந்ததுக்கே காரணம் செக்ஸ் பிரச்சினதான். என்னால தாங்க முடியல்ல. அதோட குளிர்,பிரச்னை தரும் பக்றி, அதுகளும் காரணம்தான்! நான் இங்க வந்ததுக்கு அனுபவிச்சிட்டன். அவளுக்குப் பெயர் கெய்தி. கெய்தியோட நான் நல்லா அனுபவிச்சிட் டன். ஒவ்வொரு சனிக்கிழமையும் தப்பியதில்ல.. நீயும் சிவாவும் முதல்நாள் சந்திக்க வரேக்க நான் எங்க போய் இருந்தன் தெரியுமா? அவளிட்டத்தான். அண்டைக்கிரவு அவளோடதான் படுத்திருந்தன்.'

'சோ வட்?'

'அவளோட வியாபாரம் செய்தன். உன்னிடம் அப்பிடி எண்டு சொல்லல்ல. உன் உறவு வேறை. சந்தர்ப்பம் கிடைத்திருந்தா உன்னை அனுபவிச்சிருப்பன். காசு தேவைப்படாது. எங்களுக்குள்ள ஒரு ஒப்பந்தம் இருந் திருக்கும். இரண்டு உறவுக்கும் அவ்வளவுதான் வித்தி யாசம். உன்மேல எனக்கு காதல் எல்லாம் கிடையாது. அப்பிடி சொல்லி நான் என்னையோ அல்லது உன் னையோ ஏமாற்றிக் கொள்ள விரும்பேல்ல. இப்ப நானொரு எயிட்ஸ்காரன். உன்ன விரும்பின குற்றத் திற்காக அழிக்க விரும்பேல்ல. ஆண் பெண் உறவை தேவையில்லாமல் சிக்கலாக்கி வச்சிருக்கிறாங்க. அந்த சிக்கல ஏற்படுத்திற வார்த்தையே இந்த காதல் தான்.'

'இப்ப நாங்க வெளிய போவமா?'

'இவ்வளவு நேரமும் சொன்னது எல்லாம்...'

'றமணா, யூ மீன் வெல்... என்ன மாத்திக்க முடியாம இருக்கு!'

'மாத்திக்க வேணும் கவி. இலங்கேல இருந்தா சமுதா யத்துக்காக பயப்பிடணும். இங்க யாருக்கு பயப்பி

போணும்? இவங்களப் பார். எங்களுக்கு முன்மாதிரியா இல்ல?'

'உங்களுக்கு மாத்திரம் சமுதாயத்துக்குப் பயமில் லையாக்கும்.'

'நான் பயப்பிட்டன் கவி. அதின்ர விளைவுதான் நான் இப்பிடி.. எயிட்ஸ்காரனா.. நிற்கிறன்.. நீ வாழனும் கவி. தேவையில்லாமல் அனுபவிக்க வேண்டியதை வரட்டுக் கோள்பாடுகளுக்காக மிஸ்பண்ணக் கூடாது. நல்லா யோசி. நாங்க பிரன்ஸ்! கண்டம்; பழகினம். பிரிய வேண்டிய நேரம் வந்தால் பிரியவேண்டியது தான். யாருக்காவோ யாரும் சாகேலாது.. எதிர் காலத்தில் வைச்சிருக்கிற நம்பிக்கைதான்வாழ்க்கை!'

அவளை ஒரு கையால் அணைத்த வண்ணம் 'வா போவம்' என்றேன். அவள் எதுவும் பேசாது என்னுடன் வந்தாள்.

தேவாணுக்குள்ளும் அமைதியாகவே இருந்தாள்.

'என்மேல கோவமா?'

'சீ..சீ'

'நான் கெய்திய வச்சிருந்ததுமா?'

'அது நீங்க என்ர நட்புக்கு முதல் தேடிக் கொண்டது. நானும் ஆணா இருந்தா சிலவேள அப்பிடி நடந்திருப் பனோ என்னவோ?'

'அப்பிடி எண்டா ஆம்பிளையள் எப்பிடியும் நடக்க லாமோ?'

'அப்பிடி நடந்தாலும் அதை யாரும் பெரிசு படுத்த மாட்டினம். பெம்பிளையள் அப்பிடி நடந்தா நடத்தை கெட்டவளாயிடுவாள்.'

'ஆம்பிளையள அப்பிடி நடக்க விடுறதும் பெம்பிளை யள்தான்...'

'ச், அது தலை எழுத்து.'

'இப்பிடிச் சொல்லியே இடங்கொடுங்க. நீ எனக்கு இடம் தரல்ல, அது மாதிரி...'

'நான் என்ன செய்யிற றமணா? நீ தனியா இருக் கேக்க தேடிக்கொண்டது அது. அதுக்கு நான் இப்ப சண்டைபிடிச்சு என்ன பிரயோசனம்? அப்பிடிச் செய் யிறதில அர்த்தமும் இல்ல. நீங்க தனியா இருக்கேக்க உங்க வாழ்க்கை எப்பிடி இருக்கோணும் எண்டு முடி வெடுக்கிறது உங்க சுதந்திரம். இது நான் வரமுதல் நடந்த விஷயம்.'

நாங்கள் மருத்துவரின் அறைக்குள் சென்றோம். மருத் துவர் முகமலர்ச்சியுடன் எங்களை வரவேற்றார்.

'இருங்க.'

'நன்றி.'

'யார் இவர்?'

'என்ர சினேகிதி.'

'ஹாய்'

'ஹாய்'

'பிளட் ரெஸ் பண்ணினீங்களா?'

'ம்...'

''நெகட்டிவா?'

'யா.'

'கடவுள் நல்லவர்.'

'இப்ப ரெம்பக் கவனமா இருக்கோணும்... உடல் உறவு நினைச்சுக்கூட பார்க்கக் கூடாது...'

'அது தெரியும். நாங்க கவனமா இருக்கிறம்.'

'குட்.'

'என்ன விசயம்?'

'எனக்கு நேற்று மயக்கம் வந்தது.'

'ஓ அப்பிடியா?'

'எவ்வளவு நேரம் மயக்கத்தில இருந்தீங்க?'

'கிட்டத்தட்ட ஒரு மணித்தியாலம்.'

'பிறகு எப்பிடித் தெளிஞ்சுது? ஹொஸ்பிற்றலுக்கு வந்திங்களா?'

'....'

'அதில படுங்க.'

அவரின் பரிசோதனை முடிய அரைமணி நேரம் எடுத்தது. அளவிலாக் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டி இருந்தது. சலிப்பும் கோபமும் வந்தாலும் அவற்றை அடக்கிக் கொண்டு அவரின் கேள்விகளுக்கெல்லாம் பதில் கூறினேன்.

பரிசோதனை முடிந்ததும் சிறிது நேரம் ஆழ்ந்த யோசனையில் இருந்தார். பின்பு ஏதோ முடிவு செய்தவராய் சொன்னார்.

'உங்களுக்கு நிலம மோசமாகி வருகுது.'

நான் எந்த உணர்ச்சியையும் வெளிக்காட்டாது என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டேன். கவியின் கண்கள் கலங்கிவிட்டன.

'நான் என்ன செய்யோணும் டொக்ரர்?'

'நான் ஒரு துண்டு தாறன். நீங்க அட்மிட் ஆயிடுங்க.'

'இண்டைக்கேவா?'

'அப்பிடி இல்ல; இன்னும் மூன்று நாளைக்குள்ள.'

நானும் கவிதாவும் வெளியே வந்தோம். கவிதாவுக்கு என்னைப் பார்க்க முடியவில்லை. எங்கேயோ எல்லாம் பராக்குப் பார்ப்பதுபோல பாசாங்கு பண்ணி வந்தாள். எனக்கு சிரிப்பாயும் இருந்தது; கவலையாக இருந்தது.

'ச், ஏதோ எல்லாம் நடந்து எப்படி எல்லாமோ முடிஞ்சுது.'

'ரூ லேட் றமணா.'

'புரியுது. ஓரளவுக்கு நிம்மதியாத்தான் போறன். அதோட நல்ல சினேகிதி கிடைச்ச மனத்திருப்தி.'

'என்னாலதான் உங்களை மறக்க முடியாது.'

'மறக்க நாள் செல்லும்மெண்டு சொல்லு.'

'எப்பிடியோ...?' தன்னை வெறுத்துச் சொன்னாள்.

'காலம் நல்ல மருந்து. உறவுகளை மறப்பதற்கு நல்ல மருந்து. நீ நம்ம உறவை முற்றாக மறந்திடணும்.'

'எப்பிடி உங்களால இப்பிடிப் பேச முடியுது?'

'இதுதான் முடிவு எண்டு தெரியும். அதை யாராலும் மாற்றேலாது எண்டும் தெரியும். அப்பிடி இருக்க நான் கவலைப்பட்டு என்ன பிரயோசனம்? அதுக்காக நான் கவலையே படேல்ல எண்டு நினைக்காத. மனசு எப்போவும் அழத்தான் செய்யுது.'

'சொறி றமணா.'

'இதுக்கெல்லாம் எதுக்கெடா சொறி?'

'இந்த உரிமை வேறை ஒருத்தனுக்கு போறதில எப்படி நீங்க சந்தோஷப்படுவியள்?'

'வேறவழி? இது கட்டாயம். மற்றவர்கள் வாழவேணும் எண்டு நினைக்கிறது மானிடம்.'

மிக விரைவாகவே நாங்கள் வீட்டிற்கு வந்து சேர்ந்து விட்டோம். வீட்டிற்கு வந்து சேர்ந்தபோது எனக்கு சோர்வாய் இருந்தது. கவியிடம் நான் அதைச் சொல்ல வில்லை. சொன்னால் தான் சமைக்கிறேன் என சமைக்கத் தொடங்கி விடுவாள்.

ஒருவாறு கவியை வீட்டுக்கு அனுப்பிவிட்டு இருக்கும் போது நான் ஏதோ வனாந்தரத்தில் இருப்பதுபோலத் தோன்றியது. எத்தனை நாள்களுக்கு இப்படி வாழப் போகின்றேனோ தெரியாது. இந்த நோயைப்பற்றி யாருக்கும் எதுவும் சரியாயும் தெரியவில்லை. மருத்துவரிடமும் ஒவ்வொரு சின்ன சின்ன விடையங்களை எல்லாம் கேட்டுக்கொண்டு இருக்க முடியாது. ச், எப்போது நான் சாவேன் என்பதுபோல இருந்தது. ஆனால் நான் தப்பிவிட்டேன். பலபேரின் அவமானங்களில் இருந்து தப்பிவிட்டேன். எனக்கு எயிட்ஸ் என்பதுஎனக்கும், கவி, நந்தன் ஆகியோருக்கு மட்டுமே தெரியும். மருத்துவரைப்பற்றி பிரச்சனையில்லை. அவர் சொல்லமுடியாது. அப்படி இங்குள்ள சட்டம் இருக்கிறது.

நான் உண்மையை மற்றும்சிநேகிதரிடம் கூறமுடியாது. அதை ஜீரணிக்க மாட்டார்கள். வேறு பலரிடம் கூற

வார்கள். இதைப் பெரிய அவமானமான செயலாய் பேசுவார்கள். ஏன் அந்த வில்லங்கங்கள் எல்லாம் என நானும் யாரிடமும் கூறாமல் மூடி மறைத்துவிட்டேன். கவி தன் அண்ணனுக்கே கூறவில்லை. உண்மையி லேயே கவியின் நல்ல மனசுக்கு நான்தான் கொடுத்து வைக்காதவனாகி விட்டேன்.என் வாழ்க்கையில் உயிரை இழப்பது பெரிதல்ல. ஆனால் கவியை இழக்கவேண்டி யதுதான் பெரிய துரதிர்ஷ்டம்.

மனசு அலைந்தது. நிம்மதி அற்று அலைந்தது. நான் செய்தவற்றில் எது தப்பு, எது சரி? என் நிலைக்கு யார் காரணம்? அப்பா அம்மாவா? அல்லது சமுதாயமா? அப் படி என்றால் நான் காரணமே இல்லையா? அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணம். நான்தானே எனது வாழ்க்கைக்கு மாலுமி? அப்படி என்றால் இதில் பெரும் பங்கு குற்றம் என்னைத்தான் சாரும். என் வாழ்க்கையை நான் நல்ல முறையில் அமைத்திருக் கலாம். தவற விட்டுவிட்டேன்...

நந்தன் சாப்பிட்டபின் வந்து அமர்ந்து தொலைக் காட்சி பார்த்துக் கொண்டிருந்தான். திடீரென ஏதோ நினைத்தவனாய், 'என்ன சொன்னார் டொக்ரர்?' என்று கேட்டான்.

'இரண்டு நாள்ள அட்மிற்றாகட்டாம்.'

'போறதா முடிவு பண்ணிட்டியோ?'

'ம்...அதிருக்கட்டும் நந்தன். கவிதாவைப் பற்றி என்ன நினைக்கிறாய்?'

'நல்ல பிள்ளை.'

'எனக்கு குடுத்து வைக்கல்ல, உனக்கு கேட்டுப் பாக் கட்டா?'

'சும்மா போ! எனக்கு அதெல்லாம் வேண்டாம்.'

'ஏன் எயிட்ஸ் வந்திருக்கு மெண்டு பயப்பிடுகிறியா? அவளுக்கு நெகட்டிவ். கவிதாவைப் பற்றி எனக்கு

சிபார்சு பண்ணினியே, இப்ப உனக்கெண்டோண்ண பிடிக்கல்ல. அப்பிடித்தானே?'

'நீ இருக்க கவி என்னோட?...' என்று வார்த்தையை மென்றான்.

'நான் கொஞ்ச நாள் தான்டா.'

'அப்படி சொல்லாத ரமணா.'

'உண்மைய மறைக்கக் கூடாது.'

'இப்பிடியே சொல்லிச் சொல்லி அழிஞ்சு போனாய்..'

'இப்ப நான் கேட்டதுக்குச் சம்மதிக்கிறியா?'

அவன் மௌனமாய் இருந்தான். மௌனம் சம்மதத் திற்கு அறிகுறி என நான் விளங்கிக் கொண்டேன்.

எல்லோரும் அமைதியாய் இருந்து சாப்பிட்டோம். ஆனால் கண்கள் மாத்திரம் பேசின. எப்படித் தொடங்கு வது, எங்கே தொடங்குவது? தொடங்கியபின் கவியின் எதிர்வினைவு எப்படி இருக்கும்? புரியாத நிலையில் நானும் எதுவும் செய்யமுடியாது சிலகணம் அப்படியே இருந்தேன்.

'கவிதா...?'

'என்ன ரமணா?'

'நான் நாளைக்கு அட்மிற்றாகப் போறன். பிறகு நான் திரும்பி வரமாட்டன்.'

எங்கும் அமைதி. கவிதா எச்சில் விழுங்கும் சத்தம் கேட்டது. நான்தான் தொடர்ந்தும் கதைத்தேன்.

'அதுக்குள்ள நான் நல்லதொரு காரியம் செய்திட்டு போகலாம் எண்டு இருக்கிறன். கவிதான் இதுக்கு முழு ஒத்துழைப்பும் தரவேணும்.'

'என்ன செய்யோணும் ரமணா?'

'நான் சொல்றத செய்வன் எண்டு புரமிஸ் பண்ணு.'

'ம்...ம் நீங்க சொல்லுங்க. அதுக்குப் பிறகு புரமிஸ் பண்ணுறன்.'

'பிளீஸ் கவி என்ர கடைசி ஆசை இது...'

'புரமிஸ்...' என் கையைத் தன் கையால் மூடி அழுத்திக்கொண்டாள். நான் என் மற்றக் கையையும் அதன் மேல் வைத்தேன்.

'என்னத்திக்கு இப்பிடி சத்தியம்?'

'நீ நந்தனைப்பற்றி என்ன நினைக்கிறாய்?' நந்தன் எழுந்தான். நான் விடவில்லை. அவனது கையைப் பிடித்து இழுத்து இருத்தி விட்டேன். கவி, எதுவும் புரியாது நந்தனைப் பார்த்துவிட்டு, 'அவருக்கென்ன? அவர் நல்ல ஒரு நண்பன்.'

'எந்தக் கெட்ட பழக்கமும் இல்ல. என்னைவிட அமைதியானவன். அழகானவனும் கூட.'

'நான் இல்லை எண்டு சொல்லேல்லேயே.'

'உனக்கு ஒரு நல்ல துணை வேண்டாமோ?'

கவிக்கு இப்போது விளங்கி இருக்கவேண்டும். என்னை எரித்து விடுவது போலப் பார்த்தாள்.

'நீ நந்தனக் கலியாணம் செய்யோணும்.' வார்த்தைகளுக்குத் தட்டுப்பட்டு, விஷயத்தைப் 'பட்'டென்று போட்டுடைத்தேன். அவள் விருட்டென நிமிர்ந்தாள். அவள் கண்களில் அனலும் புனலும் இருந்தன.

'சீ இவ்வளவு கீழ்த்தரமான ஐடியாவோட இருப்பீங்க எண்டு நான் நினைக்கல்ல.'

'கவிதா இதில என்ன கீழ்த்தரம் இருக்கு? ஒரு நல்லவனை உன்னோட சேத்து வைக்கிறது கீழ்த்தரமா?' சற்று உரக்கக் கத்தினேன்.

'உங்கள் காதலிக்கே...சீ...ஆர் வீ நொட் லவ்வர்ஸ்...'

'வீவேர் ஒன்லி பிரன்ஸ்.'

'நோ. ஐ கான்ட் பிரீஃப் தட்...'

அங்கிருந்த பாண்பெட்டியைத் தூக்கி மேஜையில் அடித்து விட்டு அவள் விருட்டென வெளியேறிச் சென்றாள்.

அடுத்தநாள் காலை. எட்டரை மணிவரையும் நானும் நந்தனும் காத்திருந்தோம். கவி வரவில்லை. எனக்குச்

சற்று ஏமாற்றமாய்த்தான் இருந்தது. என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு நான் மருத்துவமனையை அடைந்தேன். அங்கு ஏற்கனவே மற்ற மருத்துவரால் தரப்பட்ட துண்டைக் காட்ட, என்னை அழைத்துச் சென்று ஓர் அறையில் படுக்க விட்டார்கள்.

அறை மிகவும் வசதி உடையதாயும், சுத்தமாகவும் இருந்தது. ஹொட்டல் அறை போன்று காட்சி தந்தது. கட்டில்களையும் அதில் இருக்கும் வசதிகளையும் பார்க்கும்போது சற்று பிரமிப்பாய்தான் இருந்தது. எது எப்படியானாலும் என்மீது எனக்கு பரிதாபம் உண்டாகியது. அத்தோடு சிறையில் வாழப்போவது போன்ற உணர்வும். என்னை இவர்கள் பார்த்து பரிதாபப்படுவது போன்ற உணர்ச்சியும் உண்டாகியது. சிலர் என்னைக் கண்டு பயப்படுகின்றனரோ என்னும் ஐயம் கூட உண்டாகியது. மொத்தத்தில் என்னுள் நானொரு பாவப்பட்டவன் போன்றதொரு உணர்ச்சி தோன்றியது.

'போயிட்டு வாறேண்டா...' என்றான் நந்தன்.

'ம் போயிட்டுவா...'

அவன் சென்ற பின்பு கத்தி அழுதால் என்னவென்று தோன்றினாலும், அப்படிச் செய்யாது என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டேன். சிறிது நேரம் நான் அப்படியே கண்களைமூடி இருந்தேன். பின்பு. 'குடாக்' என்னும் குரல் கேட்டு விழித்தேன். கையை நீட்டிய வண்ணம், 'என்பெயர் றொன்னி' என்றார் அவர். நான் தயங்கிய வண்ணம் கையை நீட்டினேன். அவர் எந்தத் தயக்கமும் இன்றி கையைப்பற்றி குலுக்கினார். இது ஒருவித சந்தோஷத்தை எனக்கு உண்டு பண்ணியது.

'எந்த இடம்?'

'இலங்கை.'

'கலியாணம் செய்தாச்சா?'

'இல்ல.'
'சாறஸ்த்.'
'ம்......'
'அவளுக்குத் தொற்றல்ல?'
'இல்ல...'
'எப்பிடி இரண்டு பேரும் உடலுறவு...?'
'இன்னும் இல்ல.'
'நம்ப முடியல்ல.'
'இப்பதான் தொடங்கினதும், அதுக்குள்ள என் நோய் தெரிஞ்சிட்டுது.'
'உங்க நாட்டுப் பெண்ணா?'
'ம்......'
'ஓ அதுதானே? நான் கொழும்பில கொஞ்சக்காலம் இருந்தனான்.'
'எங்கட கலாச்சாரம் தெரியுமா?'
'கொஞ்சம் கொஞ்சம் தெரியும்.'

பின்பு நான் எப்படி எப்படி எல்லாம் இருக்க வேண்டும், எவற்றை எவற்றை எப்படி எல்லாம் பாவிக்க வேண்டும் என்பதை எல்லாம் விபரமாக விளக்கிக் கூறினார்.

வெளி ஆள்கள் வரும் நேரம். எனது கதவு தட்டப்படும் ஓசை கேட்டது.

'கம் இன்.'

கவிதான் வந்தாள். கோபமாய் இருந்தாள். கையில் சில தமிழ்ப்புத்தகங்கள் கொண்டு வந்திருந்தாள். அவற்றுள் மஹாகவியின் கவிதை நூல்கள் இரண்டும் இருந்தன. நாற்காலியில் அமர்ந்தவண்ணம் என்னைக் கோபமாய்ப் பார்த்தாள். நான் எழுந்திருந்தேன்.

'என்னடா, என்ன இன்னும் கோபமா இருக்கிறியா?'
'பின்ன என்ன? காலம உங்க வீட்டுக்கு எவ்வளவு கஸ்ரப்பட்டு வந்தன். உங்களுக்கு நான் அலையிறதைப் பற்றி கவலை இல்லையே?'

'ச் நாங்க எட்டரவரையும் நிண்டு பாத்தம். அதுக்குப் பிறகுதான் நானும் நந்தனுமா......'
'ஓ, எல்லாம் அவர் வேலையா?'

நான் சிரித்தேன்.

'நந்தனில கோபப்படுறியே... அதுதான் உனக்கு நிரந்தரம்...'
'றமணா!'
'கத்திப் பிரயோசனமில்ல. அதுதான் உண்மை. அதை நீ ஏத்துக்கணும் கவி.'
'நடக்காது... நிச்சயமா அது நடக்காது.'
'நடக்கோணும். சாகப்போற என்ர கடைசி ஆசை. பிளீஸ்...'

என் கண்களில் நீர் வழிந்தது. கவி விசும்பினாள்.

நான் அவளைக் கும்பிட்ட வண்ணம், 'பிளீஸ்.'
'கும்பிடாதேங்க. பிளீஸ் றமணா. என்ன கும்பிடாதேங்க...'

அவள் அழுத வண்ணம் எழுந்து வெளியே சென்று விட்டாள்.

கவியை இனிப் பார்க்கவே கூடாது என்பது போலத் தோன்றியது. கவிமீது கோபம் கோபமாய் வந்தது.

எதுவுமே சொல்லாது இவர்களேன் அங்குமிங்கும் ஓடுகிறார்கள் என்பதும் எரிச்சலைத் தந்தது.

சரியாக ஒரு மணிபோல் எகில் வந்தார்.

'எப்பிடி இருக்கு?'
'நீங்கதான் சொல்லோணும். எனக்கு வர வர ஏலாமல் இருக்கு.'
'உமக்கு வேற ஒரு வருத்தமும் வந்திருக்கலாம் எண்டு சந்தேகப்படுகினம். அதனால இண்டைக்கு இரவு உங்கள இஸ்லாத்போஸ்த் மூன்றுக்குக் கொண்டு போகப் போகினம்.'
'அதுக்குமிதுக்கும் என்ன வித்தியாசம்?'

'அங்க யாரும் வரேலாது...' அதற்குமேல் எகிலால் விளக்க கூறமுடியவில்லை.

'பிறன்ஸுூம் வரேலாதா?'

'இல்ல; கஸ்டம்.'

'நான் அவைய அங்க போகமுதல் சந்திக்கோணும்.'

'போன் பண்ணப் போறியா?'

'ம்...ம்'

போனை இழுத்து வந்து என்முன்னால் வைத்துச் சென்றார். எனக்கு ஒரே படபடப்பாய் இருந்தது. கவிதா நிற்க வேண்டும். அப்போதுதான் நந்தனையும் உரிய நேரத்திற்கு கூட்டி வருமாறு கூறிச் செயற்படுத்தலாம். நான் கவிதாவின் எண்ணிற்கு டயல் செய்தேன். மறுமுனை உயிர் பெற்றது.

'ஹலோ?'

12

உலகத்தை விட்டுப் பிரியும் நாள் வந்துவிட்டது. என்ன கொடுமை? ஒரு வருடத்திற்குள் எப்படி எல்லாம் மாறிவிட்டது என் வாழ்க்கை? யாரை நோவது?

எத்தனை வேதனை? இப்படி ஒரு நோய் வந்தால் எவ்வளவு துன்பம்? இந்த நோயிலும் பார்க்க தூக்குத் தண்டனை எவ்வளவு மேல். ஒரு கணத்தில் உயிர் பிரிந்துவிட்டால் எவ்வளவு இன்பமாய் இருக்கும்.

சீ, கண்டதுகளையும் எண்ணி எண்ணி நான் ஏன் குழம்புகிறேன்? என்மீதே எனக்கு வெறுப்பு வந்தது. நான் கவி கொண்டு வந்த புத்தகத்தில் ஒன்றை எடுத்து வாசித்தேன்.

முத்தெடுக்க மூழ்கின்றான் சீலன்
முன்னாலே வந்து நின்றான் காலன்

சத்தமின்றி, வந்தவனின்
கைத் தலத்திற் பத்து முத்தைப்
பொத்தி வைத்தான். போனான் முச்சூலன்!

என் நிலையிலும் மஹாகவியின் இந்தக் குறும்பாவை நயக்க முடிந்தது. எமன் இந்த எயிஸ்ட் நோயாளியை நோக்கி வரும் பொழுது, அந்த முச்சூலனுக்கு எதைக் கொடுத்து ஏமாற்றலாம் என்பது வேடிக்கையான சிந்தனை. இந்தக் கற்பனையைக் கலைத்து, கதவு தட்டும் ஓசை கேட்டது.

'கம்மின்' என்று கதவைப் பார்த்தேன். கதவைத் திறந்து கொண்டு முன்னுக்கு கவியும், பின்னுக்கு நந்தனுமாய் உள்ளே நுழைந்தனர். உண்மையிலேயே எனக்கு இன்ப அதிர்ச்சியாய்த்தான் இருந்தது. என் மனசு துள்ளிக் குதிப்பதுபோல...

'வாங்க...'

உள்ளே வந்து என் கால்மாட்டில் கவி இருந்தாள். நந்தன் நாற்காலியில் அமர்ந்தான்.

'உங்க கடைசி ஆசைய நிறவேற்றது எண்டு முடிவு பண்ணிட்டம். அதுதான் நந்தனோட இவ்வளவு நேரமா கதைச்சு முடிவு பண்ணிக்கொண்டு வந்தம்.'

'நியலி?' நான் நந்தனைப் பார்த்துக் கேட்டேன்.

'ம்...உண்மைதான்.'

'நான் நம்பமாட்டன்.'

'என் தாய்மீது சத்தியமா நானும் அவளும் சேர்றதா முடிவு பண்ணிட்டம்...'

'கவி உண்மைதானே?'

'சத்தியமா, உண்மை றமணா.'

என் மனசு மகா இலேசாகியது. அழிவின் சக்கரச் சுழற்சி என்னுடன் நின்றுவிடும் என்கிற மகத்தான நிம்மதி. இவ்விருவரையும் [illegible] பெற்

றது என் வாழ்க்கையை அர்த்த முள்ளதாக்கி விட்ட தாகத் தோன்றியது.

அவர்களால் என்னுடன் அதிக நேரம் இருக்க முடிய வில்லை. தாதிமார்கள் அவசர அவசரமாய் அவர்களை வெளியே துரத்தி விட்டார்கள். போகும் போதும், 'றமணா றமணா' எனக் கண்ணீருடன் போன கவிதா வையும் நந்தனையும் எண்ணும்போது என் இதயம் நொந்தது.

நந்தனும் கவியும் போன சிறிது நேரத்திலேயே என்னை இஸ்லாத்போஸ்த் ரூன்றிற்கு கொண்டு சென்றார்கள். இதற்குள் யாரும் உள்ளே நுழையமுடி யாது என விவரப் பலகை கூறிக்கொண்டிருந்தது. இந்த இடத்தில், என்னைப்போல மேலும் பத்துப் பேர்.

இங்கு கிட்டத்தட்ட நான் ஒரு நோய் பரப்பும் கிருமி யைப்போல் கையாளப் பட்டேன். ஒன்றொன்றும் மனசுக்கு மிகவும் வருத்தத்தை தந்தது. தாதியாய் வேலை செய்பவர் எல்லாம் மூக்கிற்குக்கூட துணிகட்டிக் கொண்டனர். மிகமிக அவதானமாய் இருந்தனர். எயிட் ஸுக்கு மாத்திரம் அவர்கள் பயப்படவில்லை. வேறு ஏதோ ஒரு தொற்று நோய்க்கும் பயப்பட்டார்கள். அதே வேளை தங்களிடம் இருந்த ஏதாவது நோய் எனக்குப் பரவாமலும் அவதானம் செலுத்தினர். என் வியர்வை, சழி போன்றவற்றை மிகவும் அவதானமாய் கையாண் டனர்.

இந்த வாட்டில் இருப்பது அதிக பயத்தைத் தந்தது. இதுதான் மரண பயமா என்னும் கேள்வி என்னுள் எழுந் தது. வரவர நெஞ்சுக்குள் நோய் கூடிக் கொண்டு வந் தது. நான் மருத்துவரிடம் கூறினேன். அவர் சுகமாகு மெனக் கூறினார்.

நடுநிசியில் நான் ஒரு கனவு கண்டுதான் விழித்தேன். அதே சமயம் வெளியே ஆரவாரம் கேட்க எழுந்து அமர்ந்து கொண்டேன்.

'என்னாச்சு?'

'அவள் செத்திட்டாள் என்றே நினைக்கிறன்.'

'நிச்சயமாத் தெரியுமா?'

'அவள் செத்திட்டாள். ஐஸ்ரூமுக்கு கொண்டு போங்க.'

நான் அப்படியே இருந்தேன். எனக்கு மிகவும் பயமாக இருந்தது. தலைமைத் தாதிகளில் ஒருவர் எனது அறைக்குள் வந்து விளக்கை ஏற்றினார். நான் இருப்ப தைப் பார்த்தவுடன் அவருக்கு அதிர்ச்சியாய் இருந் திருக்கும். அதை அவர் முகமே காட்டிக் கொடுத்தது.

'நீ இன்னும் தூங்கல்ல?'

'நித்திரை கலைஞ்சிட்டுது.'

'பயப்படுறியா?'

'இல்ல...கொஞ்சம் பயமா இருக்கு.'

'அவளொரு பெம்பிள. மற்றதொழில்ல பிழைச்சவள்.'

'என்ன பெயர்?'

'கெய்தி...'

எனக்கு மின்சாரம் தாக்கியது போல இருந்தது.

'கெய்தியா...' என மீண்டும் கேட்டேன்.

'உனக்கு தெரியுமா?'

'எனக்கு தெரியும். சென்றல் ஸ்ரேசனுக்கு பக்கத்தில தானே?'

'போயிருக்கிறியா அவளோட?'

'ம்...'

'அட கடவுளே.'

கண்களை மூடிக் கொண்டேன். நித்திரை வரவில்லை. கெய்தி இப்படி என்றால் அல்வும் பெத்தரும் என்ன ஆனார்கள். ஏற்கனவே இறந்துவிட்டார்களா? இல்லை இன்னும் உயிருடன் இருக்கின்றார்களா? சிலவேளை அவர்களுக்கு எயிட்ஸ் தொற்றி இருக்காதோ? அது சாத்தியமாய் இருக்காது. அவர்களின் அந்த ஊசியைப் போட்டுக் கொண்டதின் மூலமாய்த்தான் எனக்கும்

கெய்திக்கும் எயிட்ஸ் தொற்றி இருக்க வேண்டும். அவர்களைப் பற்றி அறியவேண்டும் போல இருந்தது.

நான்கு மணிவரையும் நித்திரை வராது உழன்று படுத்தேன். ஒருவாறு தூங்கிப் போய்விட்டேன். காலை எட்டரைமணி அளவில்தான் சத்தம் கேட்டு விழித்தேன். இப்போது புதிய பெண் தலைமைத் தாதி ஒருத்தி வந்திருந்தாள்.

'ஹாய், என் பெயர் ஏலின்...'

'ஏலின்!'

'ம்...எதும் வேணுமா?'

'எனக்கொரு விசயம் சொல்லவேணும்?'

'என்ன?'

'இங்க அல்ப்,பெத்தர் எண்டு ரெண்டுபேர் இருந்தாங்களா?'

எதுவும் பேசாது நின்றாள்.

'உங்களுக்கு விருப்பமில்லாட்டி வேண்டாம்.'

'இல்ல அது கவலையான செய்தி...'

'ஏன், செத்திட்டாங்களா?'

'ம்...'

அவள் சென்று விட்டாள். நான் பல்துலக்கி முகம் கழுவி வந்தேன். வரும் போதுதான் என் ருத்பிறஸ் தவறி விழுந்து, படுக்கைக்குக் கீழே சென்றது. நானும் அசண்டையாக குனிந்து அதை எடுத்தேன். மீண்டும் மேலே எழும்பும் போதுதான் கையை வேகமாக எடுக்க, அது அங்கு நீண்டு கொண்டிருந்த ஒரு முனையிலே பட்டது. தோலுடன் சிராய்ந்து கிழிபடவே இரத்தம் கொட்டத் துவங்கியது. இரத்தம் மிகவும் ஆபத்தானது என்ற உண்மை உறைக்க, அழைப்பு மணியை இழுத்தேன். சில கணத்திலேயே அங்கு வந்த தாதி இரத்தத்தைக் கண்டு பயந்து போனாள். தூரத்தில் நின்றபடியே 'என்ன நடந்திச்சு?' என்று கேட்டாள்.

நான் நடந்ததை விபரித்தேன். வெடி குண்டைச் செயலிழக்க செய்பவள் போலத்தன்னை பாதுகாப்பதற்கான கையுறை,குளோரின்,அதிக துணி,கடுதாசி இவற்றுடன் வந்தாள். என் கையையும் நிலத்தில் இருந்ததையும் முதலில்கடுதாசியால் துடைத்தாள்.பின்பு அவசர அவசரமாய் நிலத்தைத் துடைத்து குளோரின் போட்டாள். என் கையைத் சுத்தம் பண்ணி பிளாஸ்டர் போட்டாள். இவ்வளவற்றையும் அவள் செய்த முறையும், தன்னைப் பாதுகாத்த முறையும் என்னை வியக்கச் செய்ததோடு, இந்த நோயின் விபரீதம்-கொடுமை ஆகியவற்றைப் புரியவும் வைத்தது.

அந்த கடுதாசிகளையும் மிகவும் கவனமாக எரித்து சாம்பலாக்கி, அதையும் குளோரின் கொண்டு சுத்தம் செய்தாள். எல்லாவற்றையும் முடித்துவிட்டு வந்து என்னைப் பார்த்துப் பெருமூச்சு விட்டாள். எனக்கு அவளைப் பார்க்கப் பாவமாய் இருந்தது. எவ்வளவு ஆபத்தான வேலை இது. இதை அவளிடம் கேட்டும் விட்டேன்.

'இல்ல...கொஞ்சம் ஆபத்துதான். ஆனா ஒழுங்கா செய்தா எங்கள பாதுகாத்து கொள்ளலாம். எங்களப் காத்து கொள்ளுறது எங்கட கவனத்தப்பொறுத்திருக்கு. இரத்தம் கொஞ்சம் ஆபத்துத்தான்...'

'வீண் ரிஸ்க்.'

'ச் நான் அப்பிடி நினைக்கல்ல...நீங்க யோசிக்காம ஏதாவது படியுங்க.'

'தாங்ஸ், உங்கமாதிரி எல்லாரும் இருக்கமாட்டினம்.'

'தூசன் தக்' (ஆயிரம் நன்றி)

அவள் சிரித்துக் கொண்டு சென்றாள். அவள் சிரிப்பில் நான் கருணையின் மொத்த வடிவத்தையே கண்டேன். இவ்வளவு ஆபத்து என்பதுபுரிந்தும் இதைச்செய்வதற்கு வருகின்றாள் என்றால் அவளைப் போற்ற வேண்டும்.

நான் என் மனசுக்குள் இங்கு வேலை செய்யும் அத்தனை பேரையும் வாழ்த்தினேன்.

ஒரு வாரம் ஒரு வருடம் போல் சென்றது. கெய்தியுடன் மூன்று பிணங்கள் இங்கிருந்து சென்று விட்டன. இங்குள்ள மனிதர்கள் பழக்கமாகி விட்டார்கள். ஆனாலும் ஏதோ சிறையில் இருப்பது போன்ற உணர்வுதான் உண்டாகின்றது. இப்படி இருப்பதிலும் பார்க்க சாவது நல்லாய் இருக்குமெனத் தோன்றியது. சாவும் வந்த பாடில்லை. எனக்குச் சலிப்புத்தான் உண்டாகியது.

எனக்கு வேதனை வர வர அதிகமாக இருந்தது. இரவில் மாத்திரை இல்லாவிட்டால் என்னால் நித்திரை கொள்ளவே முடிவதில்லை. இப்போது நாள் முழுவதும் வலியும் தாங்க முடியவில்லை. பகலிலும் மாத்திரை சாப்பிட்டுவிட்டுப் படுத்தால்தான் நல்லாய் இருக்குமெனத் தோன்றியது. மதியச் சாப்பாடு முடிந்ததும் இவர்களிடம் கூறி, ஏதாவது மருந்து சாப்பிட வேண்டும் போலத் தோன்றியது.

ஏலின் வந்தபொழுது எனக்கு ரொம்ப வலிப்பதாக முறையிட்டேன்.

'கஸ்ரமா இருக்கா? நித்திர கொள்ள முடியல்லயா? எப்ப இருந்து?'

'இப்ப இரண்டு மூண்டு நாளா... வரவரக் கூடிக் கொண்டு போகுது.'

'நான் ஒழுங்கு செய்யிறன்.'

அவள் கையில் ஒரு இலங்கைக் கடிதம் இருந்தது. நானும் வந்த நேரம் தொடக்கம் அதை என்னிடம் தருவாள் என்று எதிர்பார்த்திருந்தேன். அவள் தராமலே திரும்பிச் சென்றாள். என்னால் ஆவலைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

'கடிதம் எனக்கா?'

'ஓ, நான் மறந்து போயிட்டன்...' எனச் சிரித்த வண்ணம் தந்தாள்.

அவள் சென்று விட்டாள். இப்போதுகூட அவள் பின்னழகை என்னால் ரசிக்க முடிந்தமை எனக்கே சிரிப்பை உண்டாக்கியது. என்ன மனசு இது, சாகும் தறுவாயில் கூட சபலம் விட்டு விடவில்லை. மனசுக்குத் தடை போடுவதுதான் மகத்தான துறவுநிலை.

கடிதத்தைப் பிரித்து வாசிக்கத் தொடங்கினேன்.

மூளாய்
27.11.93

அன்பின் மகன் அறிவது; நாங்கள் நல்ல சுகமே உள்ளோம். அதுபோல நீரும் நலமுடன் வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மேலும் உமது புதினங்களை அறிந்து நாங்கள் அளவில்லாத் துன்பம் அடைந்தோம். உனக்கேன் இப்படிப்புத்தி போகின்றது? எங்களுக்குப் புரியவில்லை. ஏன் நீ இப்படி அவசரப்படுகின்றாயோ தெரியவில்லை. டென்மார்க்கில் பேசி வந்ததை ஏன் வேண்டாம் என்று மறுத்தாய்? நாங்கள் எவ்வளவு கஸ்டப்பட்டு எங்கட ஊருக்க எங்கட சாதி சனத்தில் பேசி அனுப்பி வைச்சம். நீ என்னடா என்றால் வேண்டாம் எண்டு சொல்லி அனுப்பிட்டியே. ஏண்டா இப்பிடி எல்லாம் செய்யிறாய்? எங்களை இப்பிடி அலைய வைக்கிறதிலதான் உனக்கு சந்தோசமாடா?

உன்னப்பற்றி தப்பா கேள்விப் பட்டம். அது உண்மையா? நீ உங்க யாரோ ஒரு பெட்டையோட திரியிறியாம். அதுதான் அந்த டென்மார்க் கலியாணத்த வேண்டா மெண்டிட்டியாம். எங்கட குலமென்ன, கோத்திரமென்ன, சாதி என்ன, சனம் என்ன? ஏன்ரா உனக்கு இப்பிடிப் புத்தி போகுது?

ஊருக்க நாங்க தலை நிமிந்து கௌரவமா வாழ்றம். அதைக் கெடுத்துப் போடாதை. எங்களைக்கண்டு சனம்

காறித் துப்ப வைச்சிடாதை. அப்பிடி ஒன்று நடந்திட்டா அதுக்குப் பிறகு நாங்க உயிரோட இருக்க மாட்டம்.

நீ நல்ல பிள்ள. ஒழுங்கா இரு. இன்னும் ஒரு வருசத்துக் குள்ள உனக்கு நல்ல இடமாப் பாத்து நல்ல சீதனம் வேண்டி கலியாணம் செய்து வைக்கிறன். உங்க அந்த பெட்டக் கழுதையோட சுத்தாதை. என்ன குலமோ கறுமமோ? கண்டை கண்டை இடத்தில ஆம்பிளையள மடக்க இப்பிடித்தான் திரிவாளவை.

அடிக்கடி கடிதம் போடு. அந்த சிறுக்கியோட இனிக் கதைக்காதை. அப்பா அம்மாவின்ர சொல்லுக் கேட்டு சகோதரங்களோட சேந்து ஒழுங்கா வாழணுமடா. எல்லாத்துக்கும் விபரமாக் கடிதம் போடு. இங்க இப்ப அடை மழை பெய்யுது. காசுகளும் கையில இல்ல. காசும் அனுப்பிவை. ஊரெல்லாம் ஒரே பிரச்சனை.

எதுக்கும் விரைவா பதில் போடு. நாங்க கெதியா உனக்கு கலியாணம் செய்து வைக்கப் பாக்கிறம்.

வேறு அதிகம் புதினம் இல்லை. எனவே இத்துடன் முடிக்கிறன்.

இப்படிக்கு
உனதன்பின் அம்மா
சுந்தரி.

கவியைப் பற்றி என்ன மாதிரி எழுதி இருக்கிறார்கள்? அவள் எனக்கு இந்தக் குறுகிய காலத்தில்தந்த அன்பை என்னால் மறக்க முடியவில்லை. மறுக்கவும் முடியாது. இவர்கள் என்னிடம் எதிர்பார்த்துத்தானே எல்லாம் செய்தார்கள்?மகன் வளர்வான், தங்களைக் காப்பாற்று வான், தங்களுக்கு பணமனுப்புவான் என எதிர்பார்த் தார்கள்தானே? எந்த கடிதத்தில் பணத்தைப் பற்றி எழுதாது விட்டார்கள்? அன்பு-பாசம் எல்லாம் எதை அடிப்படையாக கொண்டது? எல்லாம் ஒருவித பொரு ளாதாரக் கொடுக்கல்-வாங்கலை அல்லவா அடிப்படை யாக உள்ளது? நாம் அதைச் செய்தோம் நீ இதைத்தா,

இப்படி நட என்கின்ற ஒப்பந்தம்! ஆம் பண்டமாற்று ஒப்பந்தம்.

இவர்களுக்கு கவியைப்பற்றி எழுத என்ன யோக்கியதை இருக்கின்றது? அவள் எதை எதிர்பார்த்தாள்? அவள் எதை எதிர்பார்த்து தன் உயிரையே துச்சமாய் மதித்தாள்? அப்படி ஒரு நிலையில் இவர்கள் தங்கள் உயிரைவிடத் துணிவார்களா? ஒருவித பம்மாத்து உறவுகள், பரிசுத்தமான உறவுகளைப் பழிக்கலாமா? எவ்வளவு நியாயமற்ற செயலிது? கவிக்கிருக்கும் தியாக மனப்பான்மையும் பெருந் தன்மையும் இவர்களுக்கு வருமா? சீ, இவர்கள் என்ன மனிதர்கள்? உடல் வேதனையைவிட மனசு அதிக வேதனையால் துடித் தது. இந்தக் கணமே செத்து விடக்கூடாதா என ஏக்க மாய் இருந்தது.

நான் அவர்களுக்கு உடன் பதில் எழுதத் தொடங் கினேன். எனது வாழ்க்கையில் எழுதப் போகும் கடைசிக் கடிதம். இதன் பின்பு எனது அஸ்திதான் அவர்களுக்கு போகும் என்பது எனக்கு நன்கு தெரியும்.

கடிதம் எழுதத் தொடங்கியபோது ஒரு சிக்கலான கேள்வி என் முன் தோன்றியது. வீட்டிற்கு உண்மையை எழுதுவதா இல்லையா என்பதுதான் அந்தச் சிக்கல். எழுதிவிட்டால் என்ன? இப்போதிருந்தே வேதனைப் படத் தொடங்குவார்கள். எப்படி என்றாலும் அவர் களுக்கு வேதனையாக இருக்கத்தான் செய்யும். என் அஸ்தி போகும்போது அழுது தீர்க்கட்டும். அதுவரை யும் அவர்கள் நிம்மதியாய் இருக்கட்டும்.

நான் துன்பம் அனுபவித்தாலும் மற்றவர்கள் அதை அனுபவிக்கக்கூடாது. கவியைப் பார்த்து நான் கற்றுக் கொள்ள வேண்டும். தியாகத்தைப்பற்றி அவளிடம் படிக்கவேண்டும். நான் சாவதற்காய் ஏன் அவர்கள் இப்போதே வீணாய்க் கவலைப்பட வேண்டும்?

21-01-94
ஓஸ்லோ.

அன்பின் அம்மா அப்பா சகோதரங்கள் யாவரும் அறிவது. நான் நல்ல சுகமே உள்ளேன். அது போல் நீங்களும் சுகமுடன் வாழ எனது நல்வாழ்த்துக்கள்.

மேலும் உங்கள் கடிதம் வந்து சகல புதினங்களும் அறிந்தேன். எனக்கு என்ன எழுதுவது எனப் புரிய வில்லை. ஆனால் நீங்கள் கவலைப்படுவது போல உங்கள் கௌரவத்திற்கு இனிமேல் பிரச்சனை வர மாட்டாது. எல்லாவற்றையும் நான் விட்டு விட்டேன். உங்களுக்கு இப்போது சந்தோசமாய் இருக்குமென எண்ணுகிறேன். எனக்கு இப்போது கலியாணம் பேசாதீர்கள். நான் இலங்கைக்கு இன்னும் ஒரு மாதத் தில் வருகிறேன். அப்போது எல்லாவற்றையும் உங்கள் விருப்பப்படி நீங்கள் செய்யலாம். என்னை ஒரு சொல்லுக்கூட கேட்கத் தேவையில்லை. என்னால் அனுப்ப முடிந்த பணத்தை அனுப்பி வைக்கிறேன். வேறு புதினம் இல்லை. எனவே இத்துடன் முடிக் கிறேன்.

இப்படிக்கு
உங்கள் அன்பின் மகன்
றமணன்

அன்று பின்னேரச் சாப்பாடு முடிந்தபின், தூக்க மாத் திரையும் மற்ற மாத்திரைகளும் தருவதற்கு எகில் வந்தார். அவர் இங்கு மாறிவந்தது எனக்கு மகிழ்ச்சி யைத் தந்தது. பல கவிதைகள் அவருக்குப் பாடம். அவற்றை அடிக்கடி முணுமுணுப்பார்.

'எப்பிடி இருக்கு?'

'பறுவா இல்ல. உண்மையச் சொன்னா வரவரக் கூடிக் கொண்டு போகுது.'

'அதெல்லாம் சரியாயிடும்.'

நான் பெரிசாய் சிரித்தேன்.

'நம்பல்லயா?'

'நான் குழந்தை இல்ல.'

பின்பு அவர் மாத்திரைகளைத் தர நான் அவற்றை பழரசத்துடன் விழுங்கினேன். எகில் போவதற்கு எத் தனிக்க, நான் விடவில்லை. ஏற்கனவே எழுதி வைத் திருந்த கடிதத்தைக் கையில் எடுத்துக் வைத்துக் கொண்டு, 'எகில்!' என்றேன்.

'என்ன?'

'இந்த கடிதத்த போஸ்ட் பண்ணனும்.'

'செய்தாப் போச்சு,' என்று கடிதத்தைப் பெற்றுக் கொண்டார்.

'இன்னுமொரு விசயம்.'

'என்ன?'

'நாற்காலியில இருங்க.'

'அதா விசயம்?'

'பகிடியை விடுங்க எகில். நான் சொல்லுறத நல்லாக் கேளுங்க.'

'ம், சொல்லு.'

'என்ர எக்கவுண்டில கொஞ்சகாசிருக்கு. அத வீட்டுக்கு அனுப்போணும்.'

'இலங்கைக்கா?'

'ம்.ம்.'

'செய்யிறன்.'

'நீர் அனுப்ப வேண்டிய அட்றஸ், 'பாங்' எக்கவுண்ட் நம்பர் எல்லாத்தையும் எழுதி தாங்க.'

எழுதிக் கொடுத்தேன். அவர் அதைப் பார்த்துவிட்டு, 'எந்த பாங்?' எனக் கேட்டார்.

'கிறடிக்கசன். இன்னொரு விசயம் சொல்லோணும்.'

'ம், சொல்லு.'

'நான் செத்தாப் பிறகு செய்ய வேண்டிய விஷயம்.'

'இப்பிடிக் கதைக்காதை.'

'உண்மைய கதைக்கக்கூடாதா எகில்?'

'ச், என்னவோ மாதிரி இருக்கு.'

'ஆனா, அதுதான் உண்மை.'

'ஓ.கே. நான் உனக்கு என்ன செய்யோணும்? பொறு பொறு..' எனக்கூறி வங்கியின் அட்றஸ் எழுதிய துண்டின் பின் பகுதியில் குறிப்பு எழுத ஆயத்தமாகிய பிறகு, 'ம், இப்ப சொல்லு...' என்றார்.

'நான் செத்த பிறகு என் உடம்பை எரிக்க வேணும். சாம்பல எடுத்து என் இலங்கை அட்றஸ்சுக்கு அனுப்ப வேணும். அதில ஒண்டும் பிரச்சனையில் லையே எகில்?'

'இருக்காது எண்டு நினைக்கிறன். நாளைக்கு கதைச் சுப்போட்டு வந்து சொல்லுறனே.'

'அனுப்புறத்துக்கு பணம் தேவை எண்டா என்ர பணத்தில் எடுத்துக்கலாம்.'

'நாளைக்கு கதைச்சாத்தான் எல்லாம் விபரமாத் தெரியும்'.

அடுத்த நாள் இரவு எல்லாம் ஒழுங்கு செய்யப் பட்டிருப் பதாய் கூறினார். இனி எப்போது உயிர் பிரிந்தாலும், நான் தயார்.

13

உடம்பெங்கும் வலியாய் இருந்தது. பகலிலும் ஊசி போட்டுக் கொண்டு தூங்குவது வழமையாகி விட்டது. இன்றும் அப்படித்தான் தூங்கினேன். ஏலின் எதற் காகவோ நான்கு மணிபோல் என்னை எழுப்பினாள்.

'உனக்கு சாரஸ்த்திட்ட இருந்து போன்.'

இழுத்து, வந்திருந்த போனைச் சுட்டிக்காட்டினாள்.

'தக்.'

'வசகு.'

'ஹலோ.'

'நான் கவி.'

'சொல்லு.'

'எப்பிடி சுகமா இருக்கீங்களா?'

'ம்..ம் சுகமா இருக்கன்.' -பொய் சொன்னேன்.

'ஒரே உன் நினைவா இருக்கு றமணா?'

'நந்தன் எங்க?'

'பக்கத்தில நிற்கிறார்.'

'அவன் நிக்கேக்க இப்பிடிக் கதைக்கலாமா?'

'அவர்தான் என்னவிட உங்களப்பற்றி அதிகம் கதைப்பார்.'

'சிவாவுக்கு தெரியுமா?'

'இன்னும் தெரியாது... என்ன உங்களோட பிரச்ச னையா எண்டு கேட்டார். நான் 'ஓம்' எண்டு சொல் லிட்டன். அதோட நீங்க ஹொஸ்பிற்றலால வந்து, கனடா போட்டியள் எண்டு சொல்லிட்டன். உங்கள யாரும் எயிட்ஸ்காரன் எண்டு சொல்லக்கூடாது. நான் செய்தது தப்பா?'

'இல்ல நீ செய்ததுதான் சரி. நன்றி.'

'எதுக்கு?'

'நீ என்மேல வைச்சிருக்கிற அக்கறைக்குத்தான்.'

'நான் எதையும் உங்களிட்ட எதிர் பாக்கல்ல. உங்க ளப் பாக்கேலாதா?

'இப்ப முடியாது கவி...'

'நீங்க சொன்னா...'

'யார் சொன்னாலும் விடமாட்டாங்க.'

'அவங்களுக்கு என்ன நட்டமிதில?'

'ம்... எல்லாம் உங்க சேஃப்ரிக்குத்தான்.'

'மண்ணாங்கட்டி சேப்ரி.'

நந்தனின் நினைவு வந்தது.

'நந்தனெங்க?'

'பக்கத்தில நிற்கிறார்.'

'அவனோட கதைக்கோணும்.'

'ஹலோ நான் நந்தன்.'

'எப்பிடி இருக்கிறாய்?'

'நல்லா இருக்கிறம்.'

'கவி ஒத்துப் போறாளா?'

'ம்... ஒத்துப் போறாள்.'

'எந்தளவில?'

'இப்போதைக்குப் பாவம். அவளுக்கு எல்லாம் குழப்பமாயிருக்கு...'

'கொஞ்சநாள் செல்ல சரியாயிடும்.'

'ம், நானும் அப்பிடித்தான் நினைக்கிறன்.'

'நான் செத்தா கவி கெதியா மாறுவாளில்ல?'

'றமணா இப்பிடிக் கதைக்காதை...'

இரவுச் சாப்பாடு முடிந்ததும் எனக்கு மருந்து தரப்படவில்லை. மருந்து தந்துவிட்டால் தூங்கிவிடலாம். உறவைப் பற்றி எண்ணும்போது என்னால் சரியான முடிவுக்கு வரமுடியவில்லை. உறவு என்றால் என்ன என்பதுகூட ஒரு கணம் புரியவில்லை. மாக்சியத்தில் கூறியது போன்று உறவுகள் யாவும் பொருளாதார உறவுகள்தான் என்பதை ஏற்றுக் கொள்ளவும் முடியவில்லை. அதே நேரம் புறக் கணிக்கவும் முடியவில்லை. கவியின் உறவை எண்ணும்போது இந்த கருத்திற்கு அர்த்தமே இல்லை என்பது போலத் தோன்றியது. ஆனால் வீட்டு உறவை எண்ணும்போது அதில் அர்த்தம் இருப்பது போலத் தோன்றியது. எது உண்மை? எந்தக் காரணமும் இல்லாமல் ஒரு மனிதனிடம் பாசம்-நேசம் உண்டாகுமா? காரணம் இல்லாமல் எப்படிக் காரியம் நடக்க முடியும்? எங்கேயோ ஒரு சின்னக் காரணம் என்றாலும் மறைவாக ஒளித்தாவது இருக்கத்தான் செய்கிறது.

அப்படி என்றால் கவி என்ன காரணத்திற்காக என்னுடன் வாழ்ந்து சாகிறேன் என்றாள். தான் உன்னதமானவள் என்பதைக் காட்டவா? அப்படிக் காட்டுவதால் அவளுக்கு என்ன லாபம்? இங்கு அவளுக்கு பொருளாதாரப் பிரச்சனையில்லையே என்னை முழுமையாய் சார்ந்திருக்க. அப்படி இருந்தும் ஏன் அவள் அப்படி?

எம்மோடு கலந்துவிட்ட பண்பாட்டின் மிச்சமா? அல்லது காதல் என்ற உணர்ச்சியா? நேசம் என்றால் ஒத்துக் கொள்ளலாம். காதல் என்றால் எப்படி ஒத்துக் கொள்வது? காதல் என்பது பெண்களைக் கட்டுப்படுத்த போட்ட வேஷமில்லையா? ஆண் சமுதாயத்தால் உருவாக்கப்பட்ட முள் வேலியல்லவா? கற்பு என்பதும் காதல் என்பதும் பெண்களைச் சிக்க வைக்கும் வலை. அவளால் அதை அறுக்க முடியவில்லையா? அவள் எதையும் எதிர்பார்க்கவில்லை என்றால் அதில் எங்கோ பிழை இருக்க வேண்டும். பைத்தியக்காரனுக்கு எது நடக்கின்றது என்பது தெரியாதது போல இவளும் காதல் என்னும் உணர்ச்சி வலைக்குள் ஒரு மயக்க நிலையைப் பெற்றிருக்க வேண்டும்.

நான் இப்படியே சிந்தனையில் இருக்கும்போது எகில் வந்தார். எகில் சிரித்த வண்ணமே அறைக்குள் வந்தார். இவரிடம் கேட்டால் என்ன என்று தோன்றியது. எகில் வழமை போல் வணக்கம் கூறினார்.

'ரொம்ப நேரம் காத்திருக்கிறியா? வலி இருக்கா?'

'இண்டைக்கு கொஞ்சம் குறைவு.'

'ஆகா...'

'எகில் ஒரு சந்தேகம்...'

'என்ன?'

'உறவுகளப்பற்றி என்ன நினைக்கிறாய்?'

'விளங்கல்ல.'

'இல்ல அப்பா அம்மா சகோதரங்கள் இந்த உறவுகளப்பற்றி...உறவுகள் எல்லாம் பொருளாதார உறவுகளே என்று சொல்லி இருக்காங்க...'

'அதெப்பிடி சரியா வரும்?'

'ஏன்?'

'இங்கதான் யாரையும் யாரும் பொருளாதாரத்தில சார்ந்து நிக்கல்லயே.'

'இதை அறிஞ்சு கொள். இங்க கணவன் மனைவிக்கு இடையில இருக்கிற உறவில நெருக்கம் குறைவு. இரண்டு பேருக்கும் இடையில ஒரு பிரச்சனை ஏற்பட்டா, அவள் உடனெ பிரிஞ்சு போயிடுறாள். அவளுக்கெண்டு இங்க வருமானம் உண்டு. பொருளாதார ரீதியான தங்குதல்குறையும்போது உறவின்ர இறுக்கமும் குறையுது. எங்க நாட்டில மனைவி நினைச்சதும் பிரிஞ்சு போயிடேலாது. அப்பிடி பிரிஞ்சு போனா சாப்பாட்டுக்கு வழி இருக்காது. மனைவி முழுக்க முழுக்க கணவனத்தான் தங்கி இருக்கோணும். பண்பாடெல்லாம் இரண்டாம் பட்சத்தான். முதல் காரணமே பொருளாதாரம்தான். ஐரோப்பா மாதிரிப் பொருளாதார முன்னேற்றம் ஆசியாவில வரணும். வந்தா இங்க இருக்கிற அளவுக்க அங்கேயும் மாற்றம் வரும். சிலவேளை அதிகமாக்கூட இருக்கும். நம்ப முடியுதா நான் சொல்லுறதை...'

'நம்ப முடியுது. நீ சொல்லுறது சிக்கலான விஷயம்.. நீ அரசியல் படிச்சிருக்கிறாய்...'

'ம்...ம்...' சிரித்தேன்.

'நேரம் போனது தெரியல்ல...உன் கையை நீட்டுங்க' ஊசியைப் போட்டார்.

'நாளை சந்திக்கிறேன். குநாத்'

'குநாத்.'

அடுத்த நாள் எகில் தன் கவிதைகளைக் கொண்டு வந்து தந்தார். அவை அவர் இயற்றியவை. படித்துப் பார்த்தேன். நல்லாய் இருந்தன. என்னால் எல்லாவற்றையும் விளங்கிக்கொள்ள முடியவில்லை. தமிழிலேயே கம்பராமாயணத்தைச் சுயமாகப் புரிந்து கொள்ள முடியாதவனால், எப்படி வேறொரு மொழியில் புரிந்து கொள்வது? சில கவிதைகளை என்னால் புரிந்து கொள்ள முடியாமல் அவற்றை அவரிடமே கேட்டு விளங்கிக் கொண்டேன்.

ஒருவனின் படைப்பை மற்றவன் படித்து மகிழும் போதுதான் படைத்தவனுக்கு எவ்வளவு சந்தோஷம்? எந்தக் கலைஞனுக்கும் தனது படைப்புக்களை மற்றவன் ரஸிக்கும்போதுதான் அவன் பா'டுபட்டதின் பலனை முழுமையாக அனுபவிக்கின்றான். அப்படியே எகிலும் களிப்புறுவதை காணமுடிந்தது. அந்த மகிழ்ச்சி எனக்கு நிறைவைத் தந்தது.

நந்தன் மீண்டும் ஒருமுறை போன் பண்ணி இருந்தான். கவியுடனான உறவு என்னவாயிற்று எனக் கேட்டேன். கவிக்கு சாதுவாய் வருத்தமாம். அவள் சுகமானவுடன் இருவரையும் பதிவுத் திருமணம் செய்யுமாறு சிவா வற்புறுத்துகின்றானாம்.

மறுநாள் இரண்டு மருத்துவர்கள் வந்து என்னைப் புரட்டி எடுத்தார்கள். அவர்கள் அதிகமாக எனது தொண்டைப் பகுதியைத்தான் ஆராய்ந்தார்கள். பின்பு சோகமாய் என்னைப் பார்த்தார்கள்.

'என்ன டொக்ரர்?'

'சாவப் பற்றிப் பயமா இருக்கா?'

'ம்... கொஞ்சம் பயமாத்தான் இருக்கு.'

'பயப்பிடாத. எல்லாரும் ஒரு நாளைக்கு சாகிறது தான்.'

'தெரியும் டொக்ரர். என்ன விஷயம்? சொல்லுங்க.'

'உன் தொண்டேல சொப் (காழான்) உருவாகி இருக்கு.'

'சா கிட்டிட்டுது என்டுறியள்.'

சாவைப் பற்றி நினைக்கும்போது பயமாகத்தான் இருந்தது. உள்ளம் வேதனைப் படத்தான் செய்தது. இந்த உலகத்தை விட்டுப் போக எல்லையில்லாத சோகம்...|மனசு எப்பொழுதும் அதை விரும்புவதில்லை. மாறாக ஆசைகள் பெருகுகின்றன.

இப்போது எல்லாவற்றையும் பார்க்க வேண்டும்போல் ஆசையாக இருக்கின்றது. சின்னவனாய் இருக்கும்

போது ஓடி விளையாடிய அரைகுறைக் கட்டடத்தை பார்க்க வேண்டும்போல் இருந்தது. என்னோடு விளை யாடிய சிறுமியரைப் பார்க்க ஆசையாய் இருந்தது. இன்று ஓடிப் பிடித்து விளையாடினால் எவ்வளவு நன் றாய் இருக்கும்? மனசு நடக்க முடியாத ஆசைகளை எண்ணித் தவித்தது.

சிறிது அயர்ந்து கொண்டு போகும்போதுதான் என்னை ஏலின் எழுப்பிப் போனை என்னிடம் தந்தாள்.

'ஹலோ?'

'நான்தான் நந்தன்.'

'என்னடா?'

'எப்பிடி சொல்றது எண்டு புரியேல்ல.'

'என்னடா சொல்லுறாய்?'

'என்னால சொல்ல முடியேல்ல றமணா.'

அவன் அழுதான்.

'பிளீஸ் சொல்லிவிட்டு, அழுடா!'

'காச்சல் எண்டு நேற்று கவி ஹாஸ்பிற்றல் போனவள்.'

'அதுக்கென்ன?'

'அங்க பிளட் ரெஸ்ட் பண்ணினாங்களாம். பொசிட்டி வாம்டா, என்னால நம்ப முடியல்ல...'

எனக்கு மயக்கம் வருவதுபோல இருந்தது.

'றமணா?'

'என்ன?'

'கவிய பாக்க பாவமா இருக்கு...'—தொடர்ந்தான்.

'டேய், நீ?'

'திரும்பவும் செய்தனான். அப்பிடி ஒண்டும்இல்லை.'

'கவிக்கு இல்லை எண்டு தானே சொன்னவங்கள்.?'

'எங்கயோ மிஸ்டேக் நடந்திருக்கு...'

எப்படிக் கவிக்குத் தொற்றியது என்பது புரியவில்லை. நான் மண்டையைப் போட்டு உடைத்துப் பிரயோசனம் இல்லாது போய்விட்டது. அடுத்தநாள் காலை எழுந்த

போதுதான் அப்பிள் வெட்டிய சம்பவம் எனக்கு ஞாப கத்துக்கு வந்தது. இப்போது புரிந்தது. இனிப் புரிந் தும் என்ன செய்யமுடியும்? அவள் ஆசைப்பட்டதை யாவது திருப்தியுடன் அனுபவித்திருக்கலாம்.

இரண்டு நாள்கள் சென்றன. வேதனையும் வலியும் நரக வேதனைப்படுத்தியது. என்னால் தாங்க முடிவதில்லை. நான் இப்போது சில நேரங்களில் வாய்விட்டு பிதற்று வதுண்டு. சொல்லப் போனால் எனக்கு சாவைப் பற்றிய பயம் கூடிக்கொண்டே வந்தது.

வீரம் பேசியதெல்லாம் அந்தக் காலம் ஆகிவிட்டது. இப் போது சாவை எண்ணும்போது ஒரு நடுக்கம் உண்டா கியது. அதே வேளை சாகாமலும் இருக்க முடியாது என்ற அளவிற்கு உடல் வேதனை கண்டது. மருந்திற் குக் கூட அது சிலவேளைகளில் கட்டுப்படுவதில்லை.

எனக்கு சுயநினைவும் சில வேளைகளிலே தப்பி விடு கிறது. அது இன்று நந்தன் போன் செய்து கதைத்துக் கொண்டிருக்கும் போதுதான் புரிந்தது. நான் மயக்கம் தெளிந்தபோது, எகில் எதிரில் வந்தார்.

'எப்பிடி இருக்கிறாய்?'

'நல்லா இருக்கன். ஆனா அதிக நாளைக்கில்ல.'

'இப்பிடிக் கதைக்காத.'

'உண்மை எகில், தொண்டயில காழான் இருக்காம்.'

'பயப்பிடாத றமணா. அது வந்ததும், சாவும் வாற தில்லை!'

'நான் ஏற்கனவே படிச்சிருக்கிறன் எகில்.'

'உன்ன நான் பேசண்டா நினைக்கல்ல. பிரண்டா நினைக்கிறன் றமணா.'

'நோர்வேயின் எதிர்காலக் கவிஞனின் பிரண்டா இருப்பதில் எனக்கும் பெருமையே.'

'உனக்காக நான் பிரார்த்திப்பேன்...'

விழியோரம் தேங்கிய கண்ணீரை மறைப்பதற்கு வேறு திசையிலே பார்த்தார். ஆனாலும் அவர் வலக்கை நேச பாவத்துடன் என் தலையை வருடிவிட்டது. என் அவஸ்தையை உணர்ந்து ஓர் ஊசி போட்டார்.

நானும் கவியும் சாகவில்லை. நாங்கள் எப்போது இலங்கைக்கு வந்தோம் என்பது தெரியாது. ஆனால் ஒரு பெரிய அநியாயம் நடக்கின்றது. எங்களைச் சாகாமலே பாடைகட்டி தூக்கி செல்கிறார்கள். ஆம்; சுடலைக்குத் தூக்கிச் செல்கிறார்கள். தூக்கி செல்வது மக்களல்ல. இராணுவம். நான் எதுவும் செய்யவில்லை. கவியும் எதுவும் செய்யவில்லை. நாங்கள் உயிரோடு இருந்தாலும் சுட்டுக் கொல்லுவார்கள். இப்படியே இருந்தாலும் எரித்து விடுவார்கள். என்ன செய்வது? எப்படிச் தப்பிப்பது? தவித்துக் கொண்டிருக்கும் போதே சுடலைக்கு வந்து சேர்ந்து விட்டார்கள்.

இடையில் ஒரு பிளாங்...

இப்போது கட்டைகளுக்குக் கீழே நாங்கள் நசிபட அவர்கள் கொள்ளிக் குடம் சுற்றிக் கொண்டு இருந்தார்கள். நான் கத்தினேன். என்னால் ஒலி எழுப்ப முடியவில்லை. நான் பலமுறை முயன்றும் சத்தம் மட்டும் வெளியே வரவில்லை. இராணுவமே எனக்குக் கொள்ளி வைத்தது. என் மேனி எங்கும் பற்றி எரிந்தது. என்னால் தாங்க முடியவில்லை. சினிமாப்படங்களில் வருவதுபோல அந்தக் கட்டைகளை எல்லாம் பிரித்துக் கொண்டு வெளியே வந்தேன். ஆனால் என்மேனி எரிந்தது. வலித்தது.

விளக்கு போடப்பட்டது. நான் கண்டது கனவு என்பது இப்போது புரிந்தது. என்னால் வேதனை தாங்க முடியவில்லை. நான் தாங்க முடியவில்லை என கத்தினேன். மார்பு அடைத்துக் கொண்டு வந்தது.

எகில் என்னைத் தூக்கி படுக்க வைத்தார். நான் வலியால் கத்தினேன்.

'என்ன நடந்திச்சு? கனவா?'

'வலிக்குது...நெஞ்ச அடைக்குது...என்னால தாங்க முடியல்ல...'

நான் வலியால் துடித்தேன்.

'கொஞ்ச நேரத்தில் எல்லாம் சரியாகிவிடும்...'

'உன் பிரார்த்தனை கவிதைமொழியில் இருக்கட்டும்...'

'அப்படியே நமணா!' என்று உறுதியாகச் சொல்வது என் செவிகளிலே இலேசாக விழுகின்றது.

○